www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

UK-PRICE-90P பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

ஓக.27–செப்.02,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY 116

## புலிகளின் பெண்கள் அணி போரில் ஒரு புதிய கட்டம்

## தொண்டாவுக்கு தெரியாத தவறு

## துருவியறியும் எக்ஸ்ரே ரிப்போர்ட்



## ஆடவர் குணத்தை அறிவது எப்படி?

வித்தியாச ஆய்வு

## இந்தியனில் மனிஷா

ஷொட் 1 ஷொட் 2

## இளம் யுவதியின் மர்மக் கொலை

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஓரம் கட்டுங்கள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
கிழக்கு மாகாண நிலவரங்கள்
கவலை தந்துகொண்டிருக்கின்றன.
துயரங்கள் அங்கும்
தொடர்கதையாகி விட்டன!

அரசியல்வாதிகள்
மகஜர்கள் அனுப்புகிறார்கள்;
அறிக்கைகள் தருகிறார்கள்;
'இனி கவனிக்கிறோம்' என்று
உத்தரவாதம் கிடைத்ததாக
சொல்கிறார்கள்; கேட்கிறோம்!

மீண்டும் ஒரு தாக்குதல்.
புலிகளின் பாய்ச்சலுக்குப் பதிலடியாக
பொதுமக்கள் மீது பாய்ச்சல்!
மறுபடி மகஜர்கள்.
மறுபடி அறிக்கைகள்!
எல்லாமே தொடர்கதை.

வடக்கு-கிழக்கை
பிரித்தேயாக வேண்டும் என்று
இனவாதிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

துயரங்களும்-சுமைகளும்
வடக்கு-கிழக்கு மக்களை
ஒரு தாய் பிள்ளைகளாக நினைத்து
ஒரே விதமாகவே-
சூழ்ந்துகொண்டிருக்கின்றன.

அன்றாட வாழ்வே
அவலமானதாக மாறிவிட்டது.
நிம்மதியாகத் தூங்கவே முடியாத
வாழ்க்கை எத்தனை துயரமானது!

வீட்டுநாய்-
கதவைப் பிறாண்டினால்கூட
வேட்டுத்தான் தீர்க்கப்படப்போகிறதோ
என்று-வாரிச்சுருட்டிக்கொண்டு
எழுந்தோடுகிறார்கள்.

மூட்டை முடிச்சுக்கள் சகிதம்
இடம்பெயரத் தயாராக
பதறும் நெஞ்சோடு
வாழும் மக்கள்
மரணத்தைத் தங்கள்
மடியிலே சுமப்பதாக உணர்கிறார்கள்.

சொன்னால் புரியாது;
அந்த வாழ்க்கையை வாழ்ந்து
அனுபவித்தால்தான் தெரியும்!

இவ்வாறான துயரங்களும்,
தீராத அவலங்களும்,
ஆவேசமான ஒரு சந்ததியை
உற்பத்திசெய்யும்
விதைகளாக மாறிவிடுகின்றன.

எந்தவொரு தாக்கத்திற்கும்
மறுதாக்கம் இருக்கிறது
என்பதுதான் இயற்கை விதி.

சம்பந்தப்பட்டவர்கள்
இதனைப் புரிந்து கொள்ளத் தவறுவதே
நிரந்தர யுத்தமே
நாட்டின் தலைவிதியாக
மாறிக்கொண்டிருப்பதற்கான காரணம்.

இதேவேளை-கிழக்கில்
சமூகங்களுக்குள் மோதலைத்
தூண்டும் சக்திகள்
தங்கள் கைவரிசைகளை
அவ்வப்போது காட்டிவருகின்றன.

தம்மைச் சமூகக் காவலர்களாக
சித்தரித்துக்காட்ட
மறு சமூகம்மீது
பாய்ச்சல் நடத்திக் காட்டுகிறார்கள்.

இந்த மோசமான நடைமுறைக்கு
முன்னுரை எழுதி
ஆரம்பித்து வைத்த பொறுப்பு
புலிகளையே சேரும்.

தமது தவறை உணர்ந்தோ என்னவோ-
புலிகள்
தற்போது முஸ்லிம்கள் மீதான
விரோதப்போக்கை நிறுத்திவிட்டார்கள்.

ஆனால்-சமீபத்தில் அம்பாறையில்
நடைபெற்ற சம்பவம்
முஸ்லிம் மக்கள் மத்தியிலுள்ள
ஒரு குழுவின் வேலை என்று
அறியவந்தபோது
அதிர்ச்சியாக இருக்கிறது.

இரு சமூக மக்களும்
தம் மத்தியில் உள்ள
மோதல்களைத் தூண்டும் சக்திகளை
ஓரம்கட்ட வேண்டியது அவசியமாகும்.
இல்லாவிட்டால் இரு சமூகங்களும்
தமக்குள் மோதிமுடித்துவிட்டு
திரும்பும் போது-
கால் ஊன்றி நிற்பதற்கும்
நிலம் இல்லாமல் போய்விடும்!

தமிழ்-முஸ்லிம் சமூக ஒற்றுமை!
அது ஒன்றுமட்டுமே
வடக்கு-கிழக்கு வாழ்வதா
அல்லது வீழ்வதா?
என்பதை தீர்மானிக்கும்!

oo

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை — என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## சிந்தித்துப் பேசுவதே சிறந்தது.

உலகில் நாவடக்கமின்மையால் நாசகார விடயங்கள் பல நாளும் நடைபெறுவதைக் காண்கின்றோம். எனவே, ஆன்மீக வாழ்வு வாழ, நாம் எப்படிப் பேச வேண்டும் என்பதை அறிந்திருத்தல் அத்தியாவசியம்.

"பொய்யைக்களைந்து, அவனவன் பிறனுடனே மெய்மை பேசக்கடவன்" (எபே:4:25)

ஆம். முதலில் பொய் சொல்லாது உண்மையையே பேசப் பழகிக்கொண்டால் பொதுமானது. சிறு பிள்ளைகளாய் இருக்கும் பொழுதே இப்பழக்கம் பழக்கப்பட்டுவிட்டால் பிற்காலத்தில் ஒவ்வொன்றையும் திரித்துக்கூற மாட்டோம். இது உண்மை. ஐந்தில் வளைய வேண்டும். ஐம்பதில் வளைதல் என்பது கடினமே.

இன்னும் கொஞ்சம் விளக்கமாக சொல்வதென்றால்,

"உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லாததென்றும் சொல்லுங்கள். நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு, மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" (மத்தேயு 5:37)

பிறரைப்பற்றி நாம் அவதூறு கூறினால், நம்மைப் பற்றி ஏனையவர்கள் அவ்வாறே செய்வர் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே-

நமக்குத் தரப்படுகின்ற நற்கருத்தொன்றின்படி நடந்துகொள்வது நல்லது. ஆம்-

"யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்கும் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவார்கள்." (நீதி 1:19)

எனவே, பொறுமையுடன்-சிந்தித்துப் பேசுவோமாக.

ஏ.பி.வி.கோமஸ்

# ஆன்மீகம்



## ஈடு செய்ய முடியாத கடன்

ஒருநாள் உஸ்மான் இப்னு அப்வான் (ரலி) அவர்களும், அப்பாஸ் (ரலி) அவர்களும் கஃபாவை தவாப் செய்துகொண்டிருக்கும்போது, இளைஞர் ஒருவரின் மீது அவர்களின் பார்வைபட்டது. அவ்விளைஞன் அழுக்கடைந்த கூடையொன்றை தன் தலையில் வைத்து சுமந்தபடி கஃபாவை வலம் வந்துகொண்டிருந்தார். அவரைப்பார்த்து உஸ்மான் இப்னு அப்வான் (ரலி) அவர்கள் "இளைஞனே! இப்புனித இடத்தில் இந்த அழுக்கடைந்த கூடையைச் சுமந்து செல்லவேண்டியதன் அவசியம்தான் என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் "கால் இல்லாத எனது அருமை அன்னை இதிலே இருக்கிறார்கள். அவர்களால் நடக்க முடியாது. ஆனால், கஃபாவை தவாப்செய்ய வேண்டும் என்ற ஆசை. அதனால் தான் அவரை இக்கூடையில் வைத்துக்கொண்டு சுத்தி வருகிறேன்" என்று பதில் கூறினார்.

அதைக் கேட்ட உஸ்மான் இப்னு அப்வான் (ரலி) அவர்கள் மனம் மகிழ்ந்தார்கள். என்றாலும், அவனை நோக்கி "இளைஞனே-! இதன் மூலம் நீர் உம் அன்னைக்கு நன்றி செலுத்தி விட்டதாக எண்ணிக் கொள்ளாதீர்! நீர் அவரின் வயிற்றில் இருக்கும்போது உதைத்த ஓர் உதைக்கு இது ஈடாகாது" என்று கூறினார்கள்.

அக்குறணை ரஸ்மில் அஹமட்

## கவிதைப்போட்டி இல-113

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**கரம் தூக்கி விடுவோம்**

கையினை நீட்டிக்
கரம் தூக்கி விடுவோம் நாம்
நாளைய சமுதாயம்
நன்றாக வாழ்வதற்கே!

ஆரையூர் இறையடியான்

**தொடுவானம்?**

சமாதானம் தான் - இங்கே
தொடுவானம் என்றால்
மனித உறவுகளும் கூடவா...?!

மத்துகம.இரா.இராசதுரை

**சமாதானம் தா!**

சிதைந்த பூமியில்
எஞ்சிய கையொன்று
எட்டிப்பார்த்துக்
கேட்கிறதோ!
சமாதானம் தா என்று?

சிதம்பரநாதக் குருக்கள் ஸ்ரீரவி-இரத்தினபுரி

**கைகொடுங்கள்....!**

சமாதானக் குழந்தையினை
சாக்கடையில் வீழ்த்திவிட்டு,
சந்தியிலே மேடைபோட்டு
அமைதி கொணர்வோமென,
ஆர்ப்பரிக்கும் மானிடரே!
கைநீட்டும் குழந்தையினை
கைகொடுத்து தூக்கிடுங்கள்!

பூ.இதயரெத்தினம்-ஆரையம்பதி 03

## கவிதைப் போட்டி இல-116



**நேசக்கரம்**

ஆறடி மண்ணும்
பேரிடி வாழ்வும்
வாட்டிடும் துயரில்
மாண்டிடும் விழுதை
நேசக்கரம் ஒன்று
நீட்டி அழைக்கிறது.

தெ.வோஜனா-கொழும்பு-15



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.09.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 116
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## பரிசுக்குரிய கவிதை

### அபயக்கரம்!

உயிர் பிழைக்க போகையிலே
இனம் காணா புதைகுழியில்
இறங்கிவிட்ட என்மகனோ
அபயக் கரம் நீட்டையிலே
காக்கும் கரம் நான் கொடுக்க
இரங்காத காலனவன்
எட்டாமல் செய்வதைப் பார்!

க.சுரேஸ்-மட்டக்களப்பு

**பொறு**

அதிகார பரவலாக்கத்தால்
அமைதி கிடைக்குமென
அவசரப்பட்டு
இணைந்திடாதே!

இரமேஷ் குமாரி-நானுஓயா

**நிமிர்ந்து நில்!**

உரம் தொண்ட கரம் பற்றி
உறுதியோடு நிமிர்ந்து நில்!
நினைத்த காரியம் நிறைவேற
தருணம் பார்த்து முன்னேறு!

க.நளினி-திருகோணமலை

**நவாலி**

நவாலியில் நசுக்கப்பட்ட
பிஞ்சுக்கரத்துக் கோர்
உபாயத்தை
கொடுக்கவந்த
உதவிக் கரமா...?

ச.பாஸ்கர்-அக்கரைப்பற்று 8

**காலக்கரம்**

பிஞ்சுக் கரத்தைக்
காலக்கரம்
எட்டுமா? தட்டுமா?

மதிவதனி மயில்வாகனம்-மூதூர்

**கைகொடு**

காலம் கைவிட்ட
கதியற்ற சிறிசுகள்
மணம் பரப்பும்
ரோசாவாக
தேசமே கைகொடு.

இ.பவானி-வவுனியா

**பயம்**

ஆகாய விமானங்களின்
ஓயாத குண்டு வீச்சால்
பயமடைந்த பாலகன்
தாயவளின் கரம் சேர
தவிக்கும் காட்சியிதோ?

கி.ராஜேஸ்வரி-சம்பூர் 07

## வாசகர் சாலை

**ஒரு நிமிசம்...**

துணிச்சல் தொண்டாவிற்கு மட்டுமல்ல.... எம்முரசுக்கும் தான். பல விசயங்களை சூடுசுவையுடன் வெட்ட வெளிச்சம் போட்டு காட்டுவதில் முரசுக்கு நிகர் முரசே. ராஜேஸ்குமாருக்கு ஒரு நிமிஷம் நிசப்தமானாலும் வாராவாரம் அதை படிக்க எம் இதயங்கள் துடிக்கின்றன. ஆல்பிரட் முதல் காமினிவரை தொடரில் நாம் அறியாத பல விசயங்களை அறியத்தந்தமைக்கு அற்புதனுக்கு என் விசேஷமான நன்றிகள்.

எஸ்.விஜி-நவக்கம்புர.

**தேனிலும் இனிய முரசே!**

ராஜேஸ்குமாரின் ஒரு நிமிச நிசப்தம் என்ற தொடர்கதை மூலம் என்னை அசத்திவிட்டாயே....! அதுமட்டுமா? என் நெஞ்சைக் கொள்ளை கொண்ட வாரா வாரம் அன்போடு ரசிகன் தரும் இலக்கிய நயம் படு சூப்பர்...

எம்.எஸ்.எம்.கைஸ்-கராச்சி-கிண்ணியா -5

**பதில் என்ன?**

முரசில் வெளிவரும் கவிதைப்போட்டி, குறுக்கெழுத்துப் போட்டிகளில் கலந்து கொள்ள என் போன்ற பலர் இங்கு ஆவலாக இருக்கின்றார்கள் ஆனால் முடிவுத் திகதிக்குள் எங்கள் முடிவுகள் கிடைக்காது இதற்கு முரசின் பதில் என்ன?

எஸ்.பி.இளங்கோ-பாலன்-சுவிஸ்

முடிவுத் திகதியை நீடிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். முரசின் ஏனைய பகுதிகளுக்கு ஆக்கங்கள் படையுங்கள். வரவேற்கிறோம்.

ஆர்.

கடந்த எட்டு மாத காலமாகத்தான் நான் தினமுரசு வாரமலரை வாசித்து வருகின்றேன். அனைத்து அம்சங்களும் தரமாகவும், சுவையாகவும், அத்துடன் நிதர்சனமாகவும் அமைந்து விடுவதுதான் முரசின் தனிச் சிறப்பு. உங்களின் சிறப்பான பணி மென்மேலும் தொடரட்டும். ஆனாலும் ஒரு குறை உண்டு. சகலவிடயங்களையும் நிறைவாகத்தரும் நீங்கள் விளையாட்டு நிகழ்வுகளை மட்டும் ஓரம் கட்டுவதேன்?

ப.அக்சரா-அல்வாய்

இராஜ தந்திரியின் அலசல், நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட் என்பன நம் நாட்டின் தற்கால நிலவரத்தை கண்ணாடிபோல் காட்டுகின்றது. அயல் உலக அரசியலையும் நீங்கள் ஏன் எக்ஸ்ரே எடுக்கக்கூடாது என்பது என்போன்ற அயல் உலக அரசியற் காதலர்களின் விருப்பமான கேள்வியாகும். இதனைக் கருத்திற் கொள்வீர்களா?

எம்.எம்.நிஹ்மதுல்லாஹ்-மருதமுனை

அன்பின் முரசே! நீ வாரா வாரம் வந்து கொட்டும் அரசியல் கருத்துக்களும், தொடர் கதைகளும், தேன்கிண்ணம் மற்றும் வித்தியாசமான கதைகளைத் தருகின்ற உனக்கும், அவைகளை படைப்போருக்கும் இனிய பாராட்டுக்கள்.

ஆர்.டேவிட்-பிரான்ஸ்

கடல் கடந்து வந்த எங்களை இன்பக் கடலில் மூழ்கடிக்கும் இன்ப முரசே உன் வருகையினால் எங்களின் துன்பம் எல்லாம் பறந்து விடுகிறது.

றுக்கியா பூனோனா-குவைட்





எக்ஸ்ரே ரிப்போர்ட் முதல் அனைத்து அம்சங்களும் 'சூப்பர்'

எம்.உஷா-ஸ்பிரிங்வூட்

முரசே!
நீ சுமந்து வரும்
ஒரு நிமிச நிசப்தம்
தொடர் ரொம்ப பிரமாதம்
தொடர்ந்து ஆர்வமாய் வளர
என்றும் என் வாழ்த்துக்கள்

மொஹமட் அனீஸ், பௌசுல் அமீன்-புதிய காத்தான்குடி

**தித்திக்கும் தினமுரசே.....**

உம்மை சுவைப்பதென்றால் எனக்கு ஒரு தனி இனிமை. நீ வாரா வாரம் சுமந்து வரும் அனைத்தும் புதுமையிலும் புதுமை. உன்பணி இன்னும் தொடர என் வாழ்த்துக்கள் பல.

நியாஸா ஹுஸைன்-ஹொரவப்பொத்தானை.

'லேடீஸ் ஸ்பெஷல்', 'ஹலோ டாக்டர்' பகுதிகளைத் தொகுத்துத் தருவது யார்? ரொம்ப ஜொள்ளு பார்ட்டிங்க. சிந்தியாவை எங்கிருந்து சார் பிடித்தீங்க. ரொம்ப அசத்துறாங்க (டியர் சிந்தி இப்படி கைகொடுங்க). 'ஒரு நிமிச நிசப்தம்' விறுவிறுப்பு.

'உக்குவளையூரான்'-பிரசாந்த் பிரியா அனா.



படிப்பகம்

www.padippakam.com

# வட பகுதியில் பரவலான கைதுகள்!

# உளவாளிகளைத் தேடி புலிகள் வேட்டை!

(யாழ் நிருபர் வர்மா)

வெலி-ஓயா இராணுவ முகாம்கள் மீதான தமது பாரிய தாக்குதல் தோல்வியடைந்ததையடுத்து, வடபகுதியில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வருவதற்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளோர் பலரும் கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

### மீண்டும் கைது

வடபகுதியில், இந்திய-இலங்கை உளவாளிகள் ஊடுருவியுள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ள புலிகள் அமைப்பினர் பரவலான கைது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலத்தில் விசாரணை செய்யப்பட்டு தம்மால் விடுவிக்கப்பட்ட ஏனைய இயக்கங்களின் முன்னாள் உறுப்பினர்களையும் புலிகள் மீண்டும் கைது செய்து, விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

புலிகளது முன்னாள் பிரதித்தலைவர் கோபாலசாமி மகேந்திரராஜா என்னும் மாத்தையாவின் ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட சிலரும் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

பொது இடங்களில் கூடி நின்று தமக்குத் தெரிந்த வடபகுதி நிலவரங்களைப் பேச வேண்டாம் என்றும், இயக்க இரகசியங்களை பற்றி பேசுவதை தவிர்க்குமாறும் புலிகளால் அறிவிக்கப்பட்டு வருகிறது.

வடபகுதியில் இருந்து வவுனியாவுக்கும், கொழும்புக்கும் வர்த்தக நோக்கங்களுக்காக அடிக்கடி வந்து செல்பவர்கள் பலரும் புலிகளது கண்காணிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

வெலி-ஓயாத் தாக்குதல் குறித்து தகவல் கொடுத்திருக்கக் கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பலரை புலிகள் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

### நிதி திரட்டல்

இதேவேளை வடபகுதியில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் 'தமிழீழ தேசியப் பாதுகாப்பு நிதி' வழங்குமாறு புலிகள் அறிவித்து வருகின்றனர்.

புலிகளது நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி யாழ்-குடாநாடெங்கும் நிதி சேகரிப்பு விளக்கக் கூட்டங்களை நடத்தி வருகிறார்.

உறுப்பினர் திரட்டல் நடவடிக்கையிலும் புலிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மயிலிட்டியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் என்பவர் தனது இரண்டு பிள்ளைகளையும் (ஒரு மகன், ஒரு மகள்) புலிகளிடம் ஒப்படைக்கும் புகைப்படமும் யாழ்ப்பாண பத்திரிகைகளில் வெளியாகி இருந்தன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தனது தாய்க்கு எழுதிய கடிதமும் ஈழநாதம் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. "எனது நாட்டின் விடுதலைக்காக புலிகளோடு இணைகிறேன்" என்று அவரது கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது.

உறுப்பினர் திரட்டலுக்கான உற்சாகத்தை ஏற்படுத்தவே அவை வெளியிடப்பட்டு வருகின்றன.

# கூட்டணித்தலைவர் மீது சாட்டை!

## "புலிகளால் ஏற்பட்ட நிர்ப்பந்தமே பிராந்திய சபை!"

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் அரசியல் தீர்வு யோசனைகள் குறித்து வரவேற்பு தெரிவித்து வருகிறார். இலங்கை வானொலியில் அவர் அளித்த பேட்டியொன்றில் கூறிய கருத்துக்கள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் புலிகளது தினசரியான 'ஈழநாதம்' கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

19.08.95 அன்று வெளியான 'ஈழநாதம்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளது.

"வீரம் மட்டும்போதாது, விவேகமும் வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் மு.சிவசிதம்பரம் கூறியிருக்கிறார். ஸ்ரீலங்கா வானொலியில் உரையாற்றும் போதே அவர் அப்படிக் கூறியிருக்கிறார். அவருடைய இந்தக் கூற்றானது விடுதலைப் புலிகளுக்கானது என்று நேரடியாகக் கூறப்படாவிட்டாலும், அது புலிகளுக்குச் சொல்லப்பட்டது என்பதை அரசியலில் ஆரம்பப் பாடம் கற்றவர்கள் கூட விளங்கிக்கொள்ள முடியும்.

விடுதலைப் புலிகளின் வீரமும், விவேகமும் திரு.மு.சிவசிதம்பரத்திற்குப் புரிய முடியாதவையாக இருக்கலாம். ஆனால், புலிகளின் வீரமும், விவேகமுமே தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை இன்றைய நிலைக்கு உயர்த்தியுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி போன்று மாவட்ட சபைக்கே தோப்புக்கரணம் போட்டவர்களுக்கு, பிராந்திய சபைகளை வழங்கப் போவதாக அரசு அறிவித்திருப்பதும் புலிகளது போராட்டம் மூலமாக ஏற்பட்ட நிர்ப்பந்தமேயாகும்.

கூட்டணியினதும், மு.சிவசிதம்பரத்தினதும் அரசியல் விவேகத்தை தமிழ் மக்களும், உலகமும் நன்கறியும். தமிழ் மக்களுக்கென்று தனியரசொன்றை அமைப்போம் என்று தேர்தலில் அங்கீகாரம் பெற்றுச் சென்றவர்கள், மாவட்ட சபைதான் தமிழீழத்தின் முதற்படியென்று திருப்திப் பட்டுக்கொண்டார்கள். பின்னர் மாவட்ட சபையும் காணாமல் போய்விட்டது. இதையெல்லாம் தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை." என்று 'ஈழநாதம்' பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பாரிசில் புலிகளது ஆதரவாளர்கள் மிரட்டல்

## இலங்கைத் தமிழரின் கடையும் உடைப்பு

(பிரான்ஸ் நிருபர்)

பாரிஸ் நகரில் புலிகள் அமைப்பினருக்கு எதிரான கருத்துடையவர்கள் மீது தம்மைப் புலிகளின் பிரான்ஸ் கிளையினர் என்று கூறிக்கொள்வோர் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை பாரிசில் புலிகளின் கிளையால் வெளியிடப்படும் பத்திரிகை என்ற அறிமுகத்தோடு ஒரு பத்திரிகையும் வெளியாகியுள்ளது. இதனையடுத்து இலங்கையில் இருந்து செல்லும் பத்திரிகைகளை விற்பனை செய்யக் கூடாது என்று அங்குள்ள இலங்கைத் தமிழர்களது கடைகளுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

பாரிஸில் இருந்து வெளியாகும் 'பாரிஸ் ஈழ நாடு' பத்திரிகை புலிகளுக்கு மாறான செய்திகளை வெளியிடுவதில்லை. அவ்வாறு இருந்தும் அப்பத்திரிகையின் நிர்வாகி பாலச்சந்திரன் புலிகளால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். தமது பத்திரிகைக்கு போட்டியாக இருப்பதாகக் கூறியே பாரிஸ் ஈழநாடு நிர்வாகி தாக்கப்பட்டார்.

சமீபத்தில் இலங்கைப் பத்திரிகைகளை விற்பனை செய்யும் தமிழரது கடை ஒன்று பாரிசில் நொருக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடை உடைப்பில் சுக்ளா என்பவரே முன்னணியில் இருந்துள்ளார். இவர் புலிகளது வடமராட்சி பகுதி முக்கியஸ்தராக முன்பு இருந்தவர். இந்திய அமைதிப்படை இவரை கைது செய்த போது, மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள், தங்க நகைகள் பற்றிய தகவல்களை கொடுத்து உதவினார். அதனால் இந்தியப் படை இவரை விடுவித்தது. புலிகளால் உயிர் ஆபத்து ஏற்படலாம் என்று கருதி சுக்ளா வெளிநாட்டுக்கு தப்பி ஓடினார். இப்போது பாரிஸில் புலிகளது முக்கியஸ்தராக தன்னைக் கூறிவருகிறார்

பாரிசில் இத்தகைய நடவடிக்கைகளை கண்டித்து இலங்கைத் தமிழ் அமைப்புக்களால் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

# கனடாவில் புலிகள் நிதி திரட்டல்

## சர்வதேச நாடுகள் மீதும் கண்டனம்

கனடாவில் உள்ள புலிகளின் கிளையினரால் அங்குள்ள இலங்கைத் தமிழர்களுக்கு அறிக்கை ஒன்று வெளியிடப் பட்டுள்ளது.

"தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கு வாரி வழங்குங்கள்" என்று தலைப்பிட்டு அந்த அறிக்கை வெளிடப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற நாடகம் மூலமாக சிறீலங்கா அரசு தன்னைப் பலப்படுத்திக் கொண்டுள்ளது. இந்த பொய்யான தோற்றத்தை சர்வதேச நாடுகளும் தமது பொருளாதார நலன் கருதி நம்பி, அல்லது நம்பியது போன்று பாவனை செய்து, இலங்கைத் தீவில் போலியான சமாதானம் ஏற்பட்டால் போதும் என்ற ரீதியில் செயற்படுகின்றன.

சிறீலங்கா அரசு யுத்த சன்னதம் கொண்டு நிற்கிறது. இந்த நிலையை நாம் எதிர்கொள்ள வேண்டும். எமது போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல 'தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கு' வாரி வழங்க முன்வாருங்கள். புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் மொட்டைக் கடித அபாயம்!

திருக்கோணமலை மாவட்டத்தில் மொட்டைக் கடிதங்கள் போடுவோரால் பொதுமக்கள் மத்தியில் பீதி நிலவுகிறது.

சொந்த விரோதங்கள் காரணமாக தமக்கு பிடிக்காதவர்களை புலிகளோடு தொடர்புள்ளவர்கள் என்று கூறி பாதுகாப்பு படையினருக்கு மொட்டைக்கடிதம் போட்டு விடுகிறார்கள். அவ்வாறு மொட்டைக்கடித தகவல்களை வைத்து திருமலை மாவட்டத்தில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

திருமலை மாவட்டத்தில் அன்புவழிபுரம், பாலையூற்று, சாம்பல்தீவு, செல்வநாயகபுரம், புளியங்குளம், லிங்கநகர், மூன்றாம் கட்டை போன்ற பகுதிகளிலும், திருமலை நகரிலும் மொட்டைக்கடித அச்சுறுத்தல் நிலவுகிறது.

இதே வேளை, திருமலையில் பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் பல குழுக்களாக வாகனங்களில் திரிந்து சந்தேகத்திற்கிடமானவர்களை கைதுசெய்து வருகின்றனர். இதனால் கைதுசெய்தவர்கள் யார் என்று தெரியாமல் மக்கள் அலைந்து திரியவேண்டியுள்ளது.

இராணுவ முகாம், பொலிஸ் நிலையம், மனிதஉரிமைகள் செயலணிக் குழு என்று அங்குமிங்குமாக கைதுசெய்யப்பட்டவர்களின் உறவினர்கள் அலைந்து திரிகின்றனர்.

இதே வேளை- திருமலை லிங்கநகரில் உள்ள தமிழ் குடும்பங்களை வெளியேற்றுவதில் திருமலை அரச அதிபர் மீண்டும் தீவிரம் காட்டிவருகிறார்.

# மேற்குலக நாடுகள் மீது புலிகள் அதிருப்தி!

## சர்வதேச மத்தியஸ்த நிலைப்பாட்டில் மாற்றம்?

## புலிகளின் 'இன் சைட் ரிப்போர்ட்'டில் தெரிவிப்பு

(யாழ் நிருபர் வர்மா)

### நிலைப்பாட்டில் மாற்றம்

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் இந்த வருட ஆரம்பத்தில் ஏற்பட்ட மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் குழுவில் மேற்கு நாட்டு ராஜதந்திரிகளை நியமிக்குமாறு புலிகள் கோரியிருந்தார்கள். அவ்வாறு நியமிக்கவும் பட்டார்கள்.

அரசுக்கும்-தமக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்கள் தோல்வியடைந்தால் மேற்குலக நாடுகளது மத்தியஸ்தத்தோடு பேச்சு நடத்துவது பற்றிய யோசனையை பரிசீலிக்கலாம் என்றும் புலிகள் முன்பு கூறியிருந்தார்கள்.

தற்போது புலிகளது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இலங்கை அரசுக்கு மேற்குலக நாடுகள் பல ஆதரவளித்து வருவதே அதற்கு காரணமாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளால் வெளியிடப்படும் மாதாந்த பத்திரிகையான 'இன்சைட் ரிப்போர்ட்' டில் திருமதி அடேல் பாலசிங்கம் ஒரு விமர்சனக் கட்டுரை எழுதியுள்ளார். புலிகளது ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கத்தின் பாரியாரான அடேல் தனது கட்டுரையில் மேற்குலக நாடுகள் மீது குற்றம் சாட்டியுள்ளார். தனது கட்டுரையில் அவர் தெரிவித்துள்ளதாவது;

விடுதலைப் புலிகள் மீது கண்டனக் கணைகளை வீசிய அதேவேளை, சிறீலங்கா அரசை ஆதரித்தும் புகழ்ந்துரைத்த மேற்கு நாட்டு அரசுகளின் செயல், நிதானமற்ற நிலையில் எடுக்கப்பட்ட குழப்பகரமான ஒரு அரசியல் நகர்வு என்பதில் ஐயமில்லை.

பேச்சுக்கள் முறிந்தமையால் எழுந்த ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் வெளிப்படுத்த மேற்கு நாட்டு அரசுகள் மென்போக்கான இராஜதந்திர வழிகளைப் பயன்படுத்தி இருக்கலாம்.

### அரசுக்கு உற்சாகம்

'கண்டனம்' என்ற பதத்திற்குப் பதிலாக 'கவலை அடைந்துள்ளோம்' அல்லது 'ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம்' என்ற சொற்பதங்களை பயன்படுத்தியிருந்தால் அது இரட்டிப்பு நன்மைகளைக் கொடுத்திருக்கும். அதாவது மீண்டும் பேச்சைத் தொடங்க ஊக்குவித்திருக்கும்.

ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. புலிகளைக் கண்டித்து, அரசை ஆதரித்த மேற்குலகின் செயலானது, இனப்பிரச்சனைக்கு இராணுவ வழிமுறையிலான தீர்வே சாத்தியமானது என்ற கருத்தை சிறீலங்கா அரசிடம் வலுப்படுத்த உதவியுள்ளது.

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுக்களில் ஏற்பட்ட தோல்வியும்-மூன்றாம் தரப்பாரின் மத்தியஸ்தத்தைகோரும் புலிகளது நிலைப்பாடும் இறுதியில் சர்வதேச மத்தியஸ்தத்தை கோரும் அளவுக்குச் செல்லலாம்.

ஆனால், இராணுவ நடவடிக்கைகளை உற்சாகப்படுத்தும் மேற்குலகின் போக்கு தொடருமானால், ஒரு மத்தியஸ்த பாத்திரத்தை வகிக்கக்கூடிய நடுநிலையும், நேர்மையும் மேற்குலக நாடுகளிடம் இருக்கிறது என்ற புலிகளின் நம்பிக்கையைச் சிதைத்துவிடக்கூடும்.

### குந்தகம்

இனப்பிச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதில் தமது அரசுகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று பிரகடனப்படுத்தி இருந்த நாடுகளே புலிகள் இயக்கத்தை கண்டித்தும் இருக்கின்றன. புலிகள் மீதான கண்டனமும், சந்திரிகா அரசு மீதான ஆதரவும் இராணுவத் தீர்விற்கான உற்சாகப்படுத்தல்களும் ஒன்று சேர்ந்து, மேற்கு நாட்டு அரசுகளின் சமாதான முயற்சிக்கு குந்தகம் விளைவிக்கலாம்.

இவ்வாறு திருமதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். திருமதி அடேல் பாலசிங்கம் ஒஸ்ரியா நாட்டில் பிறந்தவர். தற்போது புலிகளது சீருடை அணிந்து காணப்படும் அடேல், புலிகள் அமைப்பின் அரசியல் விமர்சகர்களில் முக்கியமானவராக இருக்கிறார்.

# வேட்டுக்கள் முழங்கிய மர்மம் என்ன?

## பொதுமக்கள் மத்தியில் பரவலான சந்தேகம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு நகரில் கடந்த சனிக்கிழமை இரவு 8 மணி தொடக்கம் ஒன்பது மணித்தியாலங்களுக்கு பொலிசாரும் இராணுவத்தினரும் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து ஷெல் வீச்சுக்களை மேற்கொண்டதன் மர்மம் என்னவென்று தெரியாது பொதுமக்கள் விழிக்கிறார்கள்.

மேலும் கடந்த ஞாயிறு காலை மட்டக்களப்பு கோட்டைமுனைப் பாலத்தில் பாரிய நேரங்கணித்து வெடிக்கும் குண்டு கண்டு பிடிக்கப்பட்டதாகவும் இராணுவ வட்டாரம் தெரிவித்தது. கோட்டை முனைப் பாலத்தின் இரு முனைகளிலும் பொலிஸ் இராணுவ சோதனைச் சாவடிகள் உள்ளன. அத்தோடு நூறு மீற்றர் தூரத்தில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையம் அமைந்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஞாயிறு காலை மட்டக்களப்பு நகரைச் சுற்றிவளைத்த பொலிசாரும் படையினரும் பொதுமக்களைத் தாக்கினார்கள். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உதவியாளரும், தம்மை அடையாளம் காட்டியபோதும் தாக்கப்பட்டார்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஆலய பிரதம பூசகரும் தாக்குதலுக்குள்ளானதுடன் சில மணி நேரம் தடுத்தும் வைக்கப்பட்டார். பெண்களும் தாக்கப்பட்டனர். குணசேகரா என்ற சிங்கள குடும்பஸ்தரும் தாக்குதலுக்குள்ளானார்.

# பண்டைத்தரிப்பிலிருந்து படை முன்னேற்றம்

## ஷெல் வீச்சால் பொதுமக்கள் பலி!

21.08.95 அன்று காலையில் யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் இருந்து சித்தங்கேணி நோக்கி பாதுகாப்புப் படையினர் முன்னேற முயன்றனர்.

படையினருக்கும், புலிகளுக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது.

சரமாரியான ஷெல் வீச்சுக்களால் பொதுமக்களில் 13 பேர் பலியானார்கள். 19 பேர் காயமடைந்தனர் என்று உடனடியாக அறிவிக்கப்பட்டது.

முருகையா விஜேந்தினி (வயது 6), முருகையா சுயேந்தினி (வயது 4), சிவராசா விமலகுமாரன் (வயது 16), சிவனடியார் சிவமலர், சிவனடியார் தங்கச்சிப்பிள்ளை, முத்துராசா அனிதா (வயது 7), செல்லையா முருகையா (வயது 45), சிவராஜா அருந்தவம் (வயது 35), சின்னத்துரை தேவராஜா (வயது 47), கந்தையா குலரட்னம் ஆகியோரே பலியானவர்கள் ஆவர். ஏனைய மூவரின் பெயர் விபரங்கள் கிடைக்கவில்லை.

வலிகாமம் பகுதிகளில் அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருவதால், அங்கிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல வேண்டாம் என்று 22.08.95 அன்று புலிகளது அரசியல் பிரிவு அறிவித்துள்ளது.

# புலிகள் விதித்த காலக்கெடு முடிவு

## இடமாற்றம் குறித்து யோசனை?

(மட்டக்களப்பு நிருபர்)

இராணுவ-பொலிஸ் படைகளில் உள்ள தமிழர்களை பதவிவிலகுமாறு புலிகள் விதித்த காலக்கெடு கடந்த 20ம் திகதியுடன் முடிவடைந்தது. ஆனால் இதுவரை யாரும் பதவிவிலகவில்லையெனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பதவிவிலகாதவர்கள் தேசத்துரோகிகளாகக் கருதப்பட்டு அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனப் புலிகள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் தமிழ் பொலிசாரை வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கு திரைமறைவில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது. அவ நம்பிக்கை கொண்டிருப்பதே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு பொலிஸ் நிலைய தொடர் மாடியில் தமிழ் பொலிஸார் தனியாகவே தங்கவைக்கப்பட்டுள்ளனரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

www.padippakam.com

# காதோடு காது



உதாரா

**கல்லடி கடலில்** மட்டக்களப்பு, கல்லடி **'கண் போட்'** கடல் பிராந்தியத்தில் கண்ணுக்கெட்டிய தொலைவில்-'கண்போட்' கண்காணிப்பு, காவல் நிலையில் நிற்கிறது. புலிகளின் மீது தன் விழிகளை வைத்துக் கொண்டு நிற்கிறது இக் 'கண்ணுடைய போட்.' (துப்பாக்கிப் படகு)

**காவல் அரண்கள் மூடப்பட்டன** மட்டக்களப்பின் காட்டுப் பிரதேசத்தில் இயங்கி வந்த இராணுவக் காவல் அரண்கள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டன. இப் பகுதிகளை புலிகள் படிப்படியாக ஆக்கிரமித்து வருகின்றனர்.

**கல்லடிப் பாலம் காவல்** மட்டக்களப்பு, கல்லடிப் பாலத்தின் உள்ளும் புறமும், நுழைவாயிலிலும் பொலிஸாரும், இராணுவத்தினரும் இரவு பகலாக காவல் புரிந்து வருகின்றனர். பாலத்தை புலிகள் தகர்க்கக்கூடும் என்ற தகவலை அடுத்து இந்த முன்னேற்பாடு என்று ஸ்ரீமான் பொதுஜனம் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

**திடீர் பரிசோதனை** கோட்டைமுனைப் பாலத்தில் இராணுவமும் பொலிஸாரும் திடீர் சோதனை செய்கின்றனர்-பாதசாரிகளை. இக்குழுவில் இராணுவத்தின் பெண்கள் பிரிவினர் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

### சின்னக் கிளாலி

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி-கொம்மாதுறை இராணுவ காவல் அரணை அண்டியுள்ள பகுதி மீண்டும் மூடப்பட்டுள்ளது. மக்களும்-பழைய குருடி கதவைத்திறடி என்பது போல் சின்னக் கிளாலி வீதி வழியாகவே பயணத்தை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். யாழ் குடாநாட்டிற்குள் பிரவேசிப்போர் கிளாலி வழியாக பயணம் செய்யும் போது அனுபவிக்கும் சிரமத்தை அறிந்த மட்டக்களப்பு மக்கள் - இக்கிளை வீதிக்கு தம்மை அறியாமலே வைத்த பெயர்தான் 'சின்னக் கிளாலி.' படுபயங்கரத்தைத் தரும் பாதைப்பகுதி இது.

# தேனகப் புதினங்கள்

**ஐலல் ஆசை எம்.எம்.ஸிக்கு** மட்டக்களப்பு மாநகர சபையின் எதிரணி எம்.எம்.சி ஒருவருக்கு பொலிஸில் 80 முறைப்பாடுகள் உண்டாம். அதே போல் டெலிபோன் பில்லும் எண்பதாயிரம் ரூபாவாம். காசு கட்டாததால் டெலிபோனும் 'கட்' ஆகிறதாம். "எண்பதில் ஏன் இவ்வளவு மையல் இந்த மெம்பருக்கு"-என சொல்லி சிரிக்கிறார்களாம் பொதுமக்கள்.

**பாதுகாப்பு நிதி** மட்டக்களப்பு திணைக்களங்களில் சுழல விடப்பட்ட பாதுகாப்புக்கு நிதி சேர்ப்பில் காதோடு காதாக பல தலைகள் 'ஓ'மாம்! இல்லையென்றால் பதவி என்னவாகும்?

**தலை தப்பியது** புலிகளால் – நிதிகறக்க அழைக்கப்பட்ட மட்டக்களப்புப் பகுதி - கிராமோதயத் தலைவர் தலையைக் கழற்றி வெளிவந்துள்ளாராம். "என்னிடம் ஒரு சதமும் இல்லை–சங்கத்துப் பணம் வங்கியில் தான் போட்டிருக்கு; போய்த்தான் எடுத்துத் தர வேணும்" என்று கெஞ்சினதாகக் கேள்வி.

# காட்டூண் மூலை




# கொச்சிக்காப் போடியார் கடிதம்



*அய்யாத்துர அண்ண!*

நம்மட அமுதகளி கோயில் திருவிழாவில அலஞ்சி கிலஞ்சி திரிஞ்சத்தால, உடம்பு நல்லா சவுத்துப் போச்சி. அந்தக் காலத்தில பள்ளியில படிக்கக்குள்ளயும் கோயில் கீயில் எண்டா, படம் கிடமெண்டா, கூட்டம் கொஞ்சவி எண்டா, உடுறதில்ல.

இப்பதான் அண்ண-சொன்னா நம்ப மாட்டயள்- கொஞ்சம் காலக் கைய நிமித்தித்து படுத்தன் -வீட்ட புள்ளயள் எழுப்பிப் போட்டுதுகள். சும்மா எண்டுதான் எண்ணின; ஆனா வாசலில ரெண்டு பேர் நிண்டானுகள். ஆர் எண்டு கேட்டா-சி.ஐ.டியாம். "என்னத்துக்கு ஊடு ஊடா போய் வாறியள்" எண்டு கேட்டம். ஐடென்ரி கார்ட் கேட்டு பதிஞ்சித்துப் போறாங்களாம். ஆரும் தூரக் கீர இருந்து வந்து தெரியாம கிரியாம நிக்காங்களா எண்டு பாத்துப் போறாங்களாம். தமிழ் ஆக்களெண்டா அண்ண ஒரு இடத்திலயும் மரியாத இல்ல.

சாமானியமாக நாம காரியங்களை நினைச்சதாலதான் இப்ப நமக்கு இந்த வாயத்துறக்காள் இல்ல. 'சாப்பிட மட்டும்தான் வாய்துறக்க வேணும்' எண்டு யாழ்ப்பாணத்தில ஆக்கள் சொல்லிறதாம். அதால அள்ளிப் போட்டு கதைக்கிறத நித்தாட்டி போட்டனெண்டு வாசுகி சொல்லிறா.

டவுனுக்குள்ள குண்டு வெடிச்சத்துக்குப் புறகு ஆக்களிர ஆசாம்பு அப்பிடி கனக்க இல்ல. நம்மட நரிப்புல்லுத் தோட்டத்தில இருந்து நாகண்டாப் போடியும் வந்துத்துப் போறாரு.

அய்யாத்துர அண்ண, உங்களையும் தெரியாத ஆக்கள் இல்ல. 'இந்த இடப்பட்ட ஆக்களெல்லாம்- அண்ணயத்தான் உரமா கேக்கானுகள்.

இஞ்செண்டா இப்ப இரிக்கிற நேச்சரில அரிசியோடகூட நெல்லும் வராது போல கிடக்கு. காடு கரம்பையில கிடந்த ஆக்களெல்லாம் எழும்பித்து வந்தாலும் பிரயோசனம்? நாலு கன்னயாலயும் பொடியனுகள் பிச்சித்து வந்து கிடக்கானுகள். கண்ணுக்கு எண்ணய ஊத்தித்து நிண்டாலும், நடக்கிறது நடந்துதான் போகுது. படைச்சவனிற்ற பாரத்தக் குடுத்துத்து நாம வானத்த அண்ணாந்து பாக்க வேண்டியது தான்.

ஆத்துக்கு அங்கால கிடக்கிற ஆக்கள் வானத்தையும் அண்ணாந்து பாக்கிறதில்லையாம். ஏனெண்டா மின்னாம முழுங்காம சின்ன ஆகாசக்கப்பலொண்டு வந்து ரெண்டு பீப்பாக்குண்ட எறிஞ்சித்து போயித்தாம். இத்தைக்கு ஒரு நாளும் இப்பிடிப் போடல்ல அண்ண. காட்டு வெளிய

## ஆத்துக்கு அங்கால பீப்பாக்குண்டு!

மாராயம் வந்திருக்கு. நம்மட கண்ணகப் பொட்டட பேத்தி-புள்ள வாசுகியும் – யாழ்ப்பாணத்தில இருந்து வந்திருக்காள். முதலெண்டா சரியான கதக்கொட்டு எண்டு பேர் வாங்கினவள். இப்ப என்னடா எண்டா குறுக்க மறுக்க போக ஏலாமக்கிடக்கு. எந்த நேரத்தில என்ன நடக்குமெண்டு தெரியாமக் கிடக்கு. நாலும் ஒரு தெருவா, சட்டையும் போட்டுத்து இந்த வேகா வெயிலில நிக்காங்கதான்! அண்ண, நிண்டு என்ன பொடியனுகள், யாழ்ப்பாணத்தால வந்து கிடக்காங்க எண்டு எறிஞ்சதாம் எண்டு டவுணுக்கு வந்த நம்மட விளாவெட்டுவான் வெள்ளப் போடி சொன்னாரு. குண்டெண்டாலும் குண்டுதான் அண்ண எண்டாரு.

அம்பாறைக்கு வந்த பூமி நடுக்கம் மட்டக்களப்புக்கு வந்தித்துப் போல எண்டு நினைச்சம். சனத்தையும், வீடு வாசலையும் ஒரு நிமிட்டுக்குள்ள உசுப்பிப் போட்டுது அண்ண. சொன்னா நம்ப மாட்டியள், சிவானந்தா பள்ளிக்குக் கிட்ட, வளவொண்டுக்க நிண்ட புளியமரப் பூ மரத்தோட உதிந்து கொட்டுனதாம். பழைய வூடுகளும் உசுப்பிப்போயித்து அண்ண.

நாம கண்ணுக்க எண்ணய ஊத்தித்து நடந்தாலும் நடக்கிறது நடந்துதான் போகுது. சாமுண்டாப் போடிர பேரன் கலிங்கப் போடியையும் காணல்லையாம். காணாமப்போன போடிர பேரன தேடிப் போற வேலயும், தேவல்லாத வேல எண்டு சாமுண்டாப் போடி சொல்லித்து வீட்டில கிடக்காராம். அவரு சொல்லிறதும் சரிதான். குறுக்க மறுக்க போறதும் கூடா. நம்மட பழைய கட்டயள் கனக்கக் காரியங்கள-கயிட்டத்த அறிஞ்சிதான் சொல்லியிருக்கானுகள். கால் போற பக்கமெல்லாம் போனா கயிட்டந்தான் வரும் எண்டு.


## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

**தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


# குருநாகல் வங்கியில் பணம் கையாடல்

(குருநாகல் நிருபர்)

குருநாகல் நகரில் உள்ள பிரபலமான அரச வங்கியொன்றில் வாடிக்கையாளர்களின் சேமிப்புக் கணக்குகளில் இருந்து, அங்கு கடமையாற்றும் சிலரால் பணம் கையாடப்பட்டுள்ளமை, அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது; கிராமப்பகுதிகளில் இருந்து வரும் விபரமறியாத அப்பாவி வாடிக்கையாளர்களின் பணமே இவ்வாறு கையாடப்பட்டுள்ளது. இதற்காக வங்கி ஊழியர்கள் சிலர் இரகசியமாக இயங்கியுள்ளமையும் தெரிய வந்துள்ளது. இவ் விடயம் வெளியில் தெரியவந்த போது கொழும்பில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் இருந்து, உயரதிகாரிகள் குழு ஒன்று சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைக்கு விரைந்து விசாரணையின் பின்னர் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்துள்ளது. இதேவேளை இவ்வங்கிக் கிளையொன்றின் முகாமையாளராக இருந்தவரும், இப்பகுதியில் வங்கியுடன் சம்பந்தப்பட்ட பிரபல தொழிற்சங்கத் தலைவரும் வங்கியின் உயர் நிர்வாகத்தினால் பதவி நீக்கப்பட்டுள்ளார். பல ஊழல்களில் ஈடுபட்டமையே இதற்குக் காரணம். வேலியே பயிரை மேய்ந்தால் பாதிக்கப்படுவது அப்பாவிகளே! எனவே வாடிக்கையாளர் தங்கள் பணத்தை மட்டும் வைப்புச் செய்துவிட்டு இருக்காமல், அடிக்கடி தங்கள் வைப்புப்பண மீதியை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென தினமுரசு மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது.

# ஆணையாளர் மறுக்கிறார் தகவல்களுக்கு மறுப்பில்லை

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சபாவதிப்பிள்ளை மந்தமாகச் செயற்படுகிறார். அதனால் ஊழியர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று முரசு ஜூன் 18-24 செய்திக்கு திரு. சபாவதிப்பிள்ளை மறுப்பு தெரித்துள்ளார். தன்மீது அபாண்டமான பழி சுமத்தும் முயற்சி என்று கூறியுள்ளார்.

எனினும், திருமலை நிருபர்தனது செய்திக்கு ஆதாரமாக சுட்டிக் காட்டிய தகவல்கள் குறித்து திரு.சபாவதிப்பிள்ளை தனது மறுப்பில் எதுவும் குறிப்பிடவில்லை. அவை தவறென்று தனது மறுப்பில் நிரூபிக்கவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

செய்திக்கு மறுப்பு எழுதும்போது செய்தியில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாகவே திட்டவட்டமான மறுப்பை தெரிவிக்க வேண்டும். அதுவே பயனுடையது என்பதை வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு நினைவூட்டுகிறோம்.

# பரிபாலன சபைக்கு புதியவர்கள்

நுவரெலியா-ஆவேலியா ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய சீத்தா எலிய சீதையம்மன் ஆலய 1995-96ம் ஆண்டுக்கான நிர்வாக சபை உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: திரு.வி. இராதாகிருஸ்ணன் J.P.U.M. (பிரதேச சபை தலைவர் நுவெரலியா)
உபதலைவர்: திரு.பி.யோகேஸ்வரன்
திரு.எஸ்.மெய்யப்பன்
செயலாளர்கள்: திரு .ஏ.சந்திரன்
உப செயலாளர்: திரு.என்.புவனேஸ்வரன்
திரு.எம்.சிவபாலன்
பொருளாளர்: திரு.எஸ்.சுப்பிரமணியம்
உப பொருளாளர்: திரு.ஏ. புவனேந்திர ராஜா
காப்பாளர்கள்:
திரு.கௌரவ.எம்.சிவலிங்கம்
(பாராளுமன்ற உறுப்பினர் நுவரெலியா)
திரு.பி.எம்.சுப்பையா
திரு.கே.இராமசாமி
திரு.எஸ். தனபாலசிங்கம்
திரு.ஏ.செல்லத்துறை
திரு.எல்.நேருஜி ஜே.பி

**செயற்குழு உறுப்பினர்கள்**

1. திரு.பி.சுரேஸ்வரன்
2. திரு.ஆர்.ரெங்கராஜ்
3. திரு.கே.வடிவேல்
4. திரு.எஸ்.இராமச்சந்திரன்
5. திரு.எஸ்.சிவகவி
6. திரு.ஏ.தம்பிராஜா
7. திரு.எம்.செல்லையா
8. திரு.எஸ். ரவிச்சந்திரன்
9. திரு.எம்.ஜெயராம்
10. திரு.கே.மாணிக்கம்
11. திரு.எஸ்.அன்பழகன்
12. திரு.கே.எஸ். கங்காதரன்
13. திரு.பி.மகேஸ்வரன்
14. திரு.எஸ். சிவகுமார்
15. திரு.ஆர்.இராஜாராம்

**சீதையம்மன் ஆலய அபிவிருத்திக் குழு**

தலைமை: கௌரவ. எம். சிவலிங்கம் பாராளுமன்ற உறுப்பினர், நுவரெலியா.
உறுப்பினர்கள்:
திரு.பி. சுப்பிரமணியம்
திரு. எஸ்.சோமசுந்தரம்
திரு.வி.ஆதிமூலம்
திரு.ஏ.செல்லத்துரை


## அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாடங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ!

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**
மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336,3570.
FAX 0094523093 EXT 28



சுவிஸ்/ டென்மார்க்/ இத்தாலி/ ஜேர்மன்/ ஃபிரான்ஸ்/ அவுஸ்திரேலியா/நோர்வே நாடுகளுக்கான

**தினமுரசு வாரமலர் சந்தா விபரம்**

ஒரு வருடத்திற்கு—தபாற் செலவு உட்பட ரூபா 2250/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்களுக்கு—தபாற் செலவு உட்பட ரூபா 1130/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்களுக்கு—தபாற் செலவு உட்பட ரூபா 590/=

| மத்திய கிழக்கு நாடுகள் | | அமெரிக்கா/கனடா | |
|---|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 1865/= (52 வாரங்கள்) | US $ 38 | ஒரு வருடத்திற்கு ரூபா 2790/= (52 வாரங்கள்) | US $ 57 |
| ஆறு மாதங்களுக்கு ரூபா 975/= (26 வாரங்கள்) | US $ 20 | ஆறு மாதங்களுக்கு ரூபா 1420/= (26 வாரங்கள்) | US $ 29 |
| மூன்று மாதங்களுக்கு ரூபா 485/= (13 வாரங்கள்) | US $ 11 | மூன்று மாதங்களுக்கு ரூபா 730/= (13 வாரங்கள்) | US $ 16 |

பெயர் சுயமுகவரி ஆகிய விபரங்களை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி

THINAMURASU VAARAMALAR
P.O. BOX. 1772
COLOMBO.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பப் படிவங்கள் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.



## ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சனைகளுக்கும் தீர ஆலோசனைகள் வழங்கப்படும். சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம்.

## விவாக சேவை

உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணமக்கள் பட்டியல் கைவசமுண்டு- பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யலாம்.

V.S.S GURUKKAL
18,STATION ROAD,
WELLAWATTA
COLOMBO-06.



தலவாக்கலையில்
**MATHS (O/L) '95**
REVISION CLASSES
விரிவுரை.
K.V. SATHYAMOORTHY
ஆரம்பம்:-02-09-1995
FRI, SAT, SUN 10.00-11.00 A.M
தொடர்பு:
A.F.I TUTORIAL CENTRE
32/E, HATTON ROAD,
TALAWAKELLE.




படிப்பகம்

www.padippakam.com

# வேட்டோசைகளால் ஒரு விழா

# பிரதான சக்தியாகும் பெண் புலிகள்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

## நாரதர்

பேச்சு மூலம் சமாதானம் என்ற அறிவிப்போடு ஆட்சிக்கு வந்தது பொது ஜன முன்னணி அரசு.

தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடும்வரை கூட அந்தக் கோஷத்தை தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை.

போர் மூலம் சமாதானம் என்னும் புதிய கோஷத்தோடு முதலாவது பிறந்த நாளை அடக்கமாகக் கொண்டாடி முடித் திருக்கிறது.

வழக்கமாக இவ்வாறான நாட்களை எல்லாம் மறக்காமல் வைத்திருந்து ஏதா வது பரிசுகளை வழங்குவது புலிகளின் வழக்கம். இம்முறை அவ்வாறு வழங்க வில்லை என்ற குறையைப் போக்கும் வகையில், மட்டக்களப்பில் படையினரே வேட்டோசைகளால் விழாக்கொண்டாடி இருக்கிறார்கள்.

இராணுவ முகாம் மீதும், சிறைச் சாலை மீதும் புலிகள் தாக்குதல் நடத்திய தாக அரச செய்திகள் தெரிவித்தன.

ஆராய்ந்து பார்த்ததில் 'புலி வருகுது' கதைதானே தவிர, புலிகள் வரவில்லை என்று தெரிகிறது.

மட்டக்களப்பு கல்லடியில் கேட்ட இரண்டு துப்பாக்கி வேட்டுச் சத்தங் களைத் தொடர்ந்து, மட்டக்களப்பு நகரெங்கும் துப்பாக்கி வேட்டுக்கள் பொழியப்பட்டன.



படும் தாக்குதல்கள் மூலம், படைகள் மறைமுகமாகப் புலிகளுக்கு உதவிசெய் கிறார்கள்.

தமிழ் கட்சிகள், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்தும் கேளா மல் தாக்குதல்கள் தொடரும்போது, மக்கள் அவர்கள் மீதும் நம்பிக்கை இழந்து கொண்டிருக்கிறார்கள்.

கிழக்கில் புலிகளுக்கு உதவுகிறார்கள் என்று யார் மீதாவது நோக வேண்டுமானால், படைகள் தங்கள் மீது தாங்களேதான் நோகவேண்டும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை 'துப் பாக்கிக் குழாய்களூடாகவே சமாதானம் மலரும்' என்று முடிவு செய்த பின்னர் படைகளைத்தான் முற்றுமுழுதாக நம்பி இருக்கவேண்டியதாகிவிட்டது.

'துப்பாக்கிக் குழாய்களூடாகவே சமா தானம் மலரும்' என்று அரசாங்கம் தீர் மானத்திற்கு வந்தபோதே படைகளுக்கான முழுச்சுதந்திரம் வழங்கப்பட்டு விட்டது என்றே அர்த்தம்.

தற்போது வடக்கு-கிழக்கு பிரச்சனை யில் அரசின் ஏகப்பிரதிநிதிகள் படையினர் தான். அவர்களை மீறி ஜனாதிபதி கூட முடிவுகளை எடுப்பது சிரமம்.

தீர்வு யோசனைகள் என்னும் காயை நகர்த்தி, புலிகளுக்கு குறிவைத்துள்ள சதுரங்க ஆட்டத்தில் படைகளை நம்பியே அரசு துணிந்து இறங்கியிருக்கிறது. சதுரங்கத்தில் வெற்றி பெறவேண்டுமானால் முப்படை களையும் தட்டிக்கொடுத்தாக வேண்டும். கண்டித்துக்கொண்டிருந்தால் காரியம் கெட்டுவிடும்.

பேச்சு மூலம் சமாதானம் என்ற தனது கோஷம் பொய்த்துப் போனதால் புலிகள் மீது கடும் வெறுப்புற்றிருக்கிறார் ஜனாதிபதி. புலிகளிடம் ஏமாந்து போனார் என்ற பெயரை துடைத்தழிக்க, போர் ஒன்றில் புலிகளை வெற்றிகொள்வதைத் தவிர வேறு வழி யில்லை என்று நினைக்கிறார்.

புலிகளோடு பேசிவிட்டு தோல்வி கண்டபோது பிரேமதாசா அரசாங்கம் கூறிய அதே வார்த்தைகளைத்தான் ஜனாதிபதி சந்திரிக்காவும் கூறியிருக்கிறார்.

"ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு புலிகள் வந்தால் பேசலாம்" என்கிறார். புலி எதிர்ப்பு ஒன்றே அரசின் மீதான அதிருப்திகளை

மட்டக்களப்பு நகரம் சுற்றிவளைக் கப்பட்டு பொதுமக்களும் தாக்கப்பட்டி ருக்கிறார்கள்.

'மட்டக்களப்பை யாழ்ப்பாணமாக மாறவிடமாட்டோம்' என்று தாக்கியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணமும் ஒரு காலத்தில் அமைதிப்பூங்காவாகத்தான் இருந்தது என்பது படைகளில் புதிதாகச் சேருகிறவர் களுக்கு தெரியாமல் இருக்கலாம்.

கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் மீது பொலிசார் தாக்கிய போது, கோபமடைந்த மாணவர்கள் பேருந்து ஒன்றில் சுலோகம் எழுதினார் கள்.

"பொலிசாரே! இதையெல்லாம் யாழ்ப் பாணத்தில் வைத்துக்கொள்ளுங்கள். எம்மீது காட்டவேண்டாம்." என்று எழு தினார்கள். இது 1980களுக்கு முன்பிருந்த நிலமை. அந்தளவுக்கு அடிபட்டாலும் அமைதியாகத்தான் அழுதுகொண்டிருந் தது யாழ்ப்பாணம்.

பின்னர் நிலமை மாறியதற்கு இன உணர்ச்சி மட்டுமே காரணமல்ல; படைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளே ஆயுதப் போராட்டத்திற்கு நியாயம் கற்பித்தன.

கிழக்கை-புலிகள் நினைத்தால் கூட யாழ்ப்பாணமாக மாற்றமுடியாது. படை கள் நினைத்தால்தான் மாற்ற முடியும்.

தற்போது பொதுமக்கள் மீது நடத்தப் நீக்குவதற்கான ஒரே ஒரு மார்க்கம் என்று அரசு நம்புவதையே உணர முடிகிறது.

புலி எதிர்ப்பில் கடந்தகால அரசாங்கங் களைவிட தனது அரசாங்கத்தின் தீவிரத்தை ஜனாதிபதி வெளிப்படுத்தவேண்டுமானால் பல முன்னேறிப் பாய்ச்சல்களை படைகள் கண்டாக வேண்டும்.

ஆனால், முப்படைகள் மீதான கட்டுப் பாட்டை ஜனாதிபதி இழந்துவிடும் போது, பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாக முடிவு அமைந்துவிடலாம்.

தமிழ் மக்களது நம்பிக்கைகளை முற்று முழுதாக இழந்துவிடும் நிலை ஏற்படலாம்.

அதனால், யுத்தத்தில் புலிகளது அரசியல் பலம் ஓங்குவதற்கு அரசே வழி செய்வதாகிவிடும்.

□□

வடக்கில் இப்போதெல்லாம் யாரும் பெண்புலிகளை ஆச்சரியமாக நோக்குவ தில்லை. பெண்புலிகள் நேரடியாக களத்தில் இறங்கியது இந்தியப் படைகளுக்கு எதிரான யுத்தத்தின்போதுதான். யழ்ப்பாணம் கோப்பா யில் இந்தியப்படைகளோடு ஏற்பட்ட மோதலில்தான் முதலாவது பெண்புலி பலியானர். அவரது பெயர் மாலதி.

தமிழ் நாட்டில் ராஜீவ் காந்தி மீது நடந்த தற்கொலைத் தாக்குதலில் தான் முதலாவது பெண் கரும்புலி தானு பலியானார்.

அப்போதெல்லாம் அவை ஆச்சரியங் கள். ஆனால், இப்போது வடபகுதி போர் முனையில் பெண்புலிகளே அதிகம் காணப் படுகிறார்கள்.

சைக்கிள் ஓடுவதற்குக்கூட தயக்கத்தோடு பெண்களை அனுமதித்த யாழ்ப்பாண சமூகம் சண்டைகளுக்குச் செல்லும் பெண்களை சர்வசாதாரணமான காட்சிகளாக கண்டு கொண்டிருக்கிறது.

வடக்கில் இருந்து மட்டுமல்ல, கிழக்கில் இருந்தும் பெண்புலிகள் திரட்டப்பட்டுள்ளார் கள். எனினும் கிழக்குப் போர் முனையை விட வடக்கில்தான் பெண்புலிகள் யுத்தத்தில் அதிகமாக ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

வெலி-ஓயாத் தாக்குதலில் ஊடுருவித் தாக்கும் அணியாக பெண்புலிகளே அனுப்பி வைக்கப்பட்டார்கள். புலிகளது யுத்த வர லாற்றில் பெண்புலிகளை பெருந்தொகையாக பலிகொடுத்த களமாக வெலி-ஓயா (மணலாறு) மாறிவிட்டது.

யாழ்-குடாநாட்டில் சமீபகாலத்தில் நடைபெற்ற மோதல்களில் பலியாகும் புலிகளது பட்டியல்கள் அனைத்திலும் அநேகமாக பெண்புலிகளும் இடம்பெற்றிருக்கிறார்கள்.

கரும்புலித்தாக்குதலுக்கு நான்கு பேர் தெரிவுசெய்யப்பட்டால், அதில் இருவர் பெண் கரும்புலிகள். போர் முனையில் பெண்களுக்கான சமத்துவம் இப்போது தோன்றியிருக்கிறது. ஆனாலும் ஆட்பற்றாக்குறை என்னும் பலவீனத்தை களைவதற்கு பெண்களுக்கான போர் முனைச் சமத்து வத்தை வழங்கியேயாக வேண்டும் என்பது புலிகளுக்குள்ள நிர்ப்பந்தம் என்றும் சொல்ல லாம்.

சீதன ஒழிப்புச்சட்டம் கொண்டுவர வேண்டும் என்று புலிகளது பெண்கள் அமைப்பு தீர்மானித்தபோது முதலில் தலைமையும் அதற்கு சம்மதித்தது.

பின்னர், அந்த முடிவிலிருந்து புலிகளது தலைமை பின்வாங்கிவிட்டது. முடிவை நிறைவேற்றவைக்க பெண்புலிகளால் முடியவில்லை.

சீதனம் பெறுகிறவர்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை புலிகள் நிதியாகப் பெற்றுக்கொள்கிறார்கள். சீதன ஒழிப்பைவிட போருக்கான நிதி திரட்டலே முக்கியமானதாக இருக்கிறது.

'அனைத்துப் பாதைகளும் ரோமா புரிக்கே.' என்பது போல, புலிகளது அனைத்து முயற்சிகளும் போரின் வெற்றிக்கே. பெண்களுக்கான சமத்துவமும் அதில் அடக்கம்.

எனினும், சூழலின் நிர்ப்பந்தம் காரண மாகவென்றாலும் பெண்புலிகளின் தொகை அதிகரித்து வருவது 'பெண்களால் என்ன செய்ய முடியும்? மென்மையான வேலைகள் மட்டுமே அவர்களால் செய்ய முடியும்' என்ற அலட்சிய மனோபாவத்தை மெல்ல மெல்ல உடைத்து வருகிறது.

அரசாங்கம் கூட தனது படைகளில் பெண்களைச் சேர்த்துக்கொள்ளவும், போர் முனைக்கு அனுப்பவும் கூட பெண்புலிகளது முன்னுதாரணம் உதவுகிறது என்பதையும் கவனிக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஜுலையில் நடைபெற்ற முன்னேறிப்பாய்ச்சல் நட வடிக்கையின் போது இராணுவத்தின் அதிரடிப்படைப்பிரிவைச் சேர்ந்த பெண் ஒருவரது பேட்டியையும் அரச தொலைக் காட்சி தவறவிடாமல் ஒளிபரப்புச் செய்தது. அதிரடிப்படை பெண்களையும் படம் பிடித் துக் காட்டியது.

தீவிரமாகும் யுத்த நிலவரம், போர் முனையில் பெண்கள் என்பதை சர்வசாதார மான காட்சியாக மாற்றியிருக்கிறது.

கடந்த ஜுலை மாதம் காங்கேசந்துறைக் கடற்பரப்பில் நடந்த கடற்போரில் புலிகளது கடற்புலிகளுக்கு இரண்டு தளபதிகள் தலைமைதாங்கிச் சென்றிருந்தனர். அதில் ஒருவர் லெப்டினன் கேணல் மாதவி என்னும் கடற்புலி.

போருக்கு தலைமைதாங்கும் கட்டத்திற்கு பெண்புலிகள் வந்திருப்பதை வடபுல யுத்தத் தில் புதியதோரு கட்டத்தைக் குறிக்கிறது. இது புலிகளது அணிகளின் புதிய பலம்.

வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி தனது முக்கிய தளபதிகளையும், தாக்குதல் அணி களையும் அனுப்பிவைத்துள்ள பிரபாகர னுக்கு, வடக்கை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க பிரதான நம்பிக்கை பெண் புலிகள் அணிதான்.

வடபுலப்போர் முனையின் முது கெலும்பாக பெண்கள் அணியை மாற்று வதற்கு புலிகள் சில கட்டங்களை கடந்தாக வேண்டியிருந்தது.

1. பெண்கள் போரிடுவதை கேலியாகப் பார்க்கும் சமூகக் கண்ணோட்டம்.
2. தங்களால் முடியுமா என்று பெண்களுக்கிருந்த சந்தேகம், தயக்கம்,
3. புலிகளது ஆண் உறுப்பினர்களது அலட்சியப் பார்வைகள்,

போன்ற தடைகளைத் தாண்ட, பெண் கரும்புலிகளும், பெண்புலிகளும் பலியாகிப் படைத்த சாதனைகள் புலிகளது தலைமைக்கு உதவியது.

இப்போது அந்தத் தடைகள் கடக்கப் பட்டு விட்டன.

வடபுலத்தின் எதிர்காலப் போர்முனை யில் பெண்புலிகளே பிரதான சவாலாக இருக்கப்போகிறார்கள்.

பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதலுக்கு பெண்புலிகளையும் அனுப்பும் போது பிரபாகரன் பின்வருமாறு சொன்னார்:

**"தங்கள் ஆண்பிள்ளைகளை பெற்றோர் கள் போருக்கு அனுப்பும்போது, 'சென்றுவா மகனே' என்று அனுப்பிவைப்பார்கள். நான் எனது பெண்பிள்ளைகளை அனுப்பி வைக்கிறேன். சென்று வாருங்கள்! வென்று வாருங்கள்!"**

பிரபாகரனின் இந்த வழியனுப்புப் படலம் பெண்கள் விடுதலை குறித்த அவரது கண்ணோட்டத்தின் வெளிப்பாடா அல்லது காலத்தின் கட்டாயமா? என்று கேட்டால், காலத்தின் கட்டாயம் என்பதே முதன்மை யானது என்று தோன்றுகிறது.

ஆனாலும், உலகில் வேறெங்கும் இல்லாத அளவுக்கு பெண்கள் போர் முனையில் முக்கிய சக்தியாக மாறியுள்ளதும், தம்மீது கவனத்தை ஈர்த்திருப்பதும் வடக்கு-கிழக்கில் தான் என்று நிச்சயமாக் கூற முடியும்.

□□

அமைச்சர் தொண்டமான் "ஐந்து வருடங்களுக்கு புலிகளிடம் நிர்வாகத்தை கொடுத்துப் பார்க்கலாம்" என்று ஒரு யோசனையை முன்வைத்தார்.

புலிகளைப் பற்றி வாய்திறந்தாலே போதும் சர்ச்சைகளில் மாட்டிக்கொள்வது, அமைச்சர் தொண்டமான் விடயத்தில் ஒரு சம்பிரதாயமாகவே மாறிவிட்டது.

நிர்வாகத்தை புலிகளிடம் கொடுப்பதா? என்று உலக அதிசயச் செய்தி கேட்பது போல இனவாதச் சக்திகள் குதிக்கத் தொடங்கினார்கள்.

விஷயம் என்னவென்றால் வடக்கில் தற்போதும் நிர்வாகம் புலிகளிடம் தான் இருக்கிறது. அந்த நிர்வாகத்தால் ஆயுதப் பாதுகாப்பு வழங்கப்பட்டு, இந்த வருட ஆரம்பத்தில் அரச பிரதிநிதிகளும் வரவேற் கப்பட்டார்கள்.

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப் பினர்கள் கூட வடக்கே சென்று விட்டுவந்து புலிகளது நிர்வாகத்திற்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கியிருந்தார்கள்.

புலிகளது நிர்வாகத்தை பாராட்டு வதா? என்று அப்போது மட்டும் யாரும் கேட்கவில்லை. காரணம் அந்தக் கருத்தைச் சொன்னவர்கள் பெரும்பான்மை இன பாராளுமன்ற உறுப்பினர்கள்.

புலிகளின் பக்கமுள்ள நியாயங்களை தமிழர் தரப்பிலிருந்து யாராவது சொன் னால் மட்டும் உடனே இனவாதிகள் குதிக்கிறார்கள். "புலிகளது விசுவாசிகள், புலிகளின் ஆதரவாளர்கள், தமிழர்கள் எல்லாரும் புலிகள் தான் பார்த்தீர்களா?" என்றெல்லாம் பேசத் தலைப்படுகிறார் கள்.

அமைச்சர் தொண்டமான் விடயத் திலும் அதுதான் தொடர்ந்து நடந்து வருகிறது. அவர்சொன்ன திட்டத்தை நிதானமாக யோசித்துப் பார்த்தால் இரண்டு விடயங்கள் புலப்படும்.

ஒன்று, அமைச்சர் தொண்டா புதிதாக எதனையும் கொடுக்குமாறு கேட்கவில்லை. "புலிகளிடம் இருக்கும் நிர்வாகத்தை அப்படியே ஐந்து ஆண்டுகள் தொல்லை யின்றி இயங்கவிடலாமே" என்பதுதான் அந்த யோசனையின் அர்த்தம்.

சுருக்கமாகச் சொன்னால் ஐந்து வருடப் போர் நிறுத்தம்.

இரண்டாவது: புலிகளது நிர்வாகம் இல்லாத வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதி கள் அரசிடமே இருக்கவும் தொண்டா வின் யோசனை வகை செய்கிறது.

சரி: இந்த யோசனையை புலிகள் ஏற்க முன்வருவார்களா? மாட்டார்கள்.

காரணம், புலிகள் ஐந்துவருடகால நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டால் அவர் களது 'தமிழீழமே தாகம்' என்ற கோஷம் அடிபட்டுப்போய்விடும். ஐந்து வருட காலத்தை போருக்கான தயாரிப்பாகவும் மாற்ற முடியாது. 'தமிழீழமே தாகம்' என்று வளர்க்கப்பட்ட உறுப்பினர்கள் மனமுடைந்து விடுவார்கள். போரே இல்லாத சூழ்நிலையில் போருக்கான உத்வேகத்தைக் கொண்ட அணிகளை உருவாக்க முடியாது.

அப்படி உருவாக்க முடியுமானால் அரசோடு நடத்திய பேச்சுவார்த்தையைப் மேலும் சிலகாலத்திற்கு புலிகளால் நீடித் திருக்க முடியும்.

தவிர, ஐந்துவருட போர் நிறுத்தம் புலிகளை விட அரசுக்கே நல்ல பெயரை ஏற்படுத்திக்கொடுக்கும். கிழக்கும் அரசின் கையில் இருக்கும்.

ஐந்து வருடத்தின் பின்னர் மேலும் பல வெலிஓயாக்கள்-குடியேற்றங்கள் மூலம் தோன்றியிருக்கும்.

வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு நிரந் தரமான அத்திவாரம் போடப்பட்டு விடும்.

இந்தக் கோணத்தில் பார்க்கும் போது அமைச்சர் தொண்டாவின் யோசனையைக் கண்டு புலிகள்தான் உண்மையில் துள்ளி யிருக்க வேண்டும்.

அமைச்சர் தொண்டாவின் யோசனை கருத்தில் கொள்ளப்படக்கூடியதாக மாறாது என்பதால் புலிகள் பேசாமல் இருந்துவிட்டார்கள்.

ஆனால், சொல்லும் விடயம் என்ன வென்று தீர ஆராயாமல், சொல்பவர் யார் என்று மட்டுமே பார்க்கப்படுவதால் தொண்டாவின் யோசனை புலிகளுக்கு சார்பானது என்று சர்ச்சை கிளம்பி விட்டது. அரசாங்கமும் விழுந்தடித்து மறுப்புக்கள் விட வேண்டிய நிலமையும் ஏற்பட்டது.

ஆனால், ஒரு விஷயம்; அமைச்சர் தொண்டா தனது யோசனையில் உள்ள மறுபக்கத்தை உணராமல் செய்த தவறு தான் அது.

## அதிரடி அய்யாத்துரை



கூட்டான கட்சிக்கு மெத்தப் பெரிய பாதுகாப்பு கொடுக்கப் பட்டிருக்குதாம். ஆயுதம் ஏந்திப் போராடுற பாதையைத் தானே அவை நிராகரிக்கினம். ஆயுதம் ஏந்தி நிண்டு அவையின்ரை உயிரைப் பாதுகாக்கும் பாதையை எப்பவாவது பிழையெண்டு சொன்னவையோ? இல்லைத்தானே, விடுங்கோ!

இடைக்கால நிர்வாக விடயத் திலை கட்சிகள் பெற்ற வாக்குகளின் அடிப்படையிலைதான் பிரதிநிதிகளை நியமிக்க வேணும். அதுதான் ஜனநாயகம் எண்டு சொன்னவராம் கூட்டான கட்சித் தலைவர். அப்படிப்பார்த்தா பச்சைக் கட்சிதான் வடக்கு-கிழக்கு சபையிலை கூடுதல் இடத்தை எடுக்கும். இது தலைவருக்கு தெரியாதோ எண்டு யோசிப்பியள். தனக்கு கிடைக் காட்டி யாருக்கும் கிடைக்கக் கூடாது எண்ட 'பொது நலம் தான்' தலைவரின் யோசனைக்கு காரணமாம். இல்லையில்லை தலைவருக்கு ஜன நாயகத்திலை பலத்த நம்பிக்கை எண்டு யாரும் சொல்ல நினைக்கிறியளோ? அப்படியெண்டால் ஒரு கேள்வி: அடுத் தடுத்து இரண்டு தேர்தலிலை சனம் தோல்வியைக் கொடுத்தும் கட்சித் தலைவராக அவர் எப்பிடி இருக்கிறார்? விழுந்த வாக்கு எண்ணிக்கைப்படி பார்த்தா கூட்டான கட்சிக்குள் கிழக்கின் சிங்கமல்லோ தலைவராக இருக்க வேணும். ஜனநாயகம் எண்டா எல்லோருக்கும் பொதுதானுங்கோ.

வடக்கே அனுப்பப்படலாம் எண்ட தகவலைக் கேட்டுப் போட்டு, அங்கை போகாமல் இருக்க விரும்பிய சிலர் சேர்ந்து போட்ட திட்டம்தான் தேனகத்தில் கேட்ட திடீர் டப்பு-டப்பு சத்தங்களாம். தேனகத்திலையும் பிரச்சனை பெரிசு எண்டு நம்பவைக்க வேண்டாமோ? அதுக்குத்தான் பூச்சாண்டி. அதுக்காக சனத்தை ஏன் 'டச்' பண்ணுவேணும்.

"நீ அவனைத் தாக்கினாயா இல்லையா?" நீதிபதி கேட்டார். "தாக்கவேயில்லையென்று உங்களுக்கே தெரியுமே ஐயா. அதோ ஆள் உயிரோடு நிற்கிறாரே பாருங்கள். ஆகவே நான் தாக்கவில்லை." எண்டாராம் குற்றம் சாட்டப்பட்டவர்! அடிச்சா ஆள் சாகாட்டி தாக்கவில்லையெண்டா அர்த்தம்? உங்கடை பதில் என்ன? யாழ்ப்பாண தேவன் சந்நிதி விஷயத்திற்கும் உங்கடை பதில் பொருந்தினாச்சரி.

முல்லை மாவட்ட தோல்விக்கு பிறகு ரெண்டு எழுத்தாரின் சந்தேகப் பார்வை கூர்மையாகியிருக்குதாம். குறிப்பாக, வவுனியாவுக்கு அடிக்கடி வந்து போனவையின் பட்டியலை ஆராய்ஞ்சு அள்ளிக்கொண்டு போய் விசாரிக்கினமாம். வவுனியாவுக்கு சொந்தக் காரியமாக வந்து போனவை பலர் உதறிக்கொண்டு இருக்கினமாம்.

கிழக்கின் சிங்கத்தாரின் இலண்டன் மருமகள் வெள்ளையினமாம். காலில் விழுந்து மருமகள் ஆசீர்வாதம் வாங்கும் போது சிங்கத்தாருக்கு நெஞ்சு பக் பக் எண்டு அடிச்சிருக்காதுங்கோ. தமிழ் பெண் எண்டால் பக்-பக்தான்! தெரியும்தானே, பெரம்புத்தூரில் அயலக தலைவரிடம் ஆசிர்வாதம் வாங்குறமாதிரி குனிஞ்சுதானே 'டும்' மை அமுக்கினது. எப்படியோ மேல்நாட்டு மருமகள் கிடைச்சாச்சு. சந்தோசம். ஆனால், மருமகள் கிடைச்ச சந்தோசத்திலை தேனகத்தையே மறந்து நிண்டதுதான் உறுத்தல். அதுக்கெல்லாம் சேர்த்துவைச்சு அறிக்கை விடப்போறார். பத்திரிகைகளுக்கு பக்க அதிகரிப்பு தேவைப்படக்கூடும்.

தீர்வு யோசனை சமாச்சாரத்தில் பச்சை அணிக்குள்ளை மூண்டு பிரிவு. அதிகார அணிக்குள்ளையும் பொறுத்த ஆக்கள் சிலரே வேறு கருத்தைச் சொல்லுகினம். யோசனைக்கே இந்தக் கதியெண்டால், திட்டமாக வந்திருந்தால் நாடு பிரிஞ்சிருக்காது, கட்சிகள் பிரிஞ்சிருக்கும் என்றது மட்டும் 'கிளியராக'த் தெரியுது.

யாழ் நகர் பக்கமுள்ளது சண்டிக்குளி. அங்குள்ள பெண்கள் பாடசாலையில் உறுப்பினர் திரட்டலுக்குப் போன ரெண்டு எழுத்தாருக்கு வரவேற்பு அவ்வளவு நல்லாயிருக்கேல்லை எண்டு தகவல்.

பட்டினத்தார் பாடலில் ஒரு சிறுதுளி. அர்த்தம் விளங்கிப் படிக்கிறது உங்கடை பொறுப்பு. விளக்கம் சொன்னா வில்லங்கம் வரும்.

"மதன சொரூபன் இவன் என
–மோக மங்கையர் கண்டு
மருண்டு திரண்டு வரி விழி கொண்டு
–சுழிய எறிந்து
மாமயில் போல அவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர் பிறகோடி
–மங்கல செங்கல
சந்திகழ் கொங்கை மருவ மயங்கி
–இதழ் அமுதுண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி...."

என்று தொடர்கிறார் சித்தர். அத்தனையும் அவர் அனுபவம்.

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## சண்டியர் ஆதிக்கம்

இயக்கங்களின் செல்வாக்கு யாழ்ப் பாணத்தில் வளர்வதற்கு முன்னர் சண்டியர்களின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது.

கிட்டத்தட்ட ஒரு குட்டிப் பொலிஸ் நிலையம் போலவே ஒவ்வொரு சண்டியர்களும் நடந்துகொண்டனர். அவர்களை 'விலாசங்கள்' என்று பொதுவாக அழைப்பதுண்டு.

'விலாசம்' காட்டுவதென்றால் ஒரு நாலு பேருக்காவது நடுவீதியில் வைத்து அடிக்கவேண்டும். நாலுபேருக்கு அடிப் பவனோடு கூடித்திரிந்தே 'விலாசம்' பெற்றவர்களும் பலர் இருந்தார்கள்.

இதில் செல்லக்கிளி முதல் ரகம். ஒரு பொலிஸ்காரர் ஏதோவொரு முறைப் பாட்டை விசாரிக்க செல்லக்கிளியிடம் வந்தார். செல்லக்கிளி அந்தப் பொலிஸ் காரரை அடித்துவிட்டாராம். "செல்லக்கிளி 'பேய் விலாசம் மச்சான்'" யாரும் வம்பு தும்புக்கு போகமாட்டார்கள்.

அதனைவைத்தே பெண்களோடு 'சேஷ்டை'கள் செய்வது, கடைகளில் சுப்பம் வாங்குவது என்று செல்லக்கிளியின் கொடி பறந்தது.

ஒருநாள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு முன்புறமிருந்த தேநீர்க் கடைக்கு தனது நண்பரோடு சென்றார் செல்லக்கிளி.

செல்லக்கிளியை தேடித்திரிந்த இயக் கத்திற்கு தகவல் பறந்தது. மோட்டார் சைக்கிளில் இரண்டு இளைஞர்கள் வந்து காத்திருந்தார்கள்.

அனுப்புமாறு கேட்டு, அவனது கண்களைக் கட்டி அழைத்துச் சென்றது.

அதே நாள் யாழ்ப்பாணம் மத்திய சந்தையில் ஒரு இளைஞருக்கு தர்ம அடி நடந்துகொண்டிருந்தது. ஒரு நபரிடமிருந்து 95/- ரூபா பிக்பொக்கெட் அடித்துவிட்டார் அந்த இளைஞன்.

கோழித்திருடனை கடத்திச் சென்ற அதே இளைஞர் குழு அங்கும் தோன்றியது.

பிக்பொக்கெட் திருடனை கூட்டிச்சென்று விட்டது.

பின்னர் அவர்கள் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டு, உடல்கள் மானிப்பாய் வீதியில் போடப்பட்டிருந்தன.

உடல்களின் அருகில் தீர்ப்பு வழங்கியதற்கு உரிமை கோரியிருந்தது தமிழீழ விடுதலை இராணுவம். (ரெலா)

இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் புளொட் அமைப்போடு நட்பாக இருந்தது தமிழீழ விடுதலை இராணுவம். தமது தலைவர் ஒபரோய் தேவனை புலிகள் சுட்டபின்னர் 'புளொட்' அமைப்பின் உதவியோடுதான் 'ரெலா' இயங்கியது.

சமூக விரோதிகள் ஒழிப்புக்கு மக்களிடம் ஆதரவு இருந்தது உண்மைதான். ஆனால், கோழிக்கள்ளனுக்கும் பிக்பொக்கட் காரனுக்கும் மரண தண்டனை வழங்குவதை மக்கள் வரவேற்க வில்லை.

## பொலிஸ் அதிகாரி உதவி

யாழ்ப்பாணம் மயிலிட்டியில் மற்றொரு சம்பவம்.

வீடொன்றுக்குள் கொள்ளையிட முயன்ற

புலிகளின் சிறையிலேயே மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது உற வினர்களுக்கு ஜெயக்குமார் இறந்துவிட்டார் என்ற தகவலையும் அவரது உடைகளையும் மட்டுமே கொடுத்திருந்தனர் புலிகள்.

## "போகமாட்டேன் ஐயா"

சமூக விரோதிகள் ஒழிப்பில் இயக்கங்கள் போட்டி போட்டுக்கொண்டு இருந்த போது நடந்த ஒரு சுவாரஸ்யமான சம்பவம்:

யாழ் பொலிஸ் நிலையத்தில் திருட்டுக் குற்றங்களுக்காக ஒருவர் தடுத்துவைக்கப் பட்டிருந்தார்.

அவரது வீட்டுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

கடிதத்தை எடுத்துக் கொண்டு அவரது தாயார் பொலிஸ் நிலையம் சென்றார். மகனிடம் கொடுத்தார். கடிதத்தைப் படித்து முடித்தவரின் முகம் இருண்டுவிட்டது. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் காலில் போய் விழுந்தார்.

"ஐயா, என்னை வெளியே அனுப்பி விடாதீர்கள். நான் இங்கேயே இருக்கிறேன். நான் செய்த குற்றங்களுக்கு நீங்களே தண் டனை தந்துவிடுங்கள் ஐயா!" என்றார்.

பொலிஸ் நிலைய பொறுப்பதி காரிக்கு ஆச்சரியம். கடிதத்தை வாங்கிப் பார்க்கிறார்.

அது, 'சங்கிலியின் பஞ்சாயத்'தால் அனுப்பப்பட்டிருந்த எச்சரிக்கைக் கடிதம்.

## அன்றும் ஒரு காட்சி

தற்போது அரசியல் தீர்வு யோசனைகள் பற்றி வாதப் பிரதிவாதங்களும், எதிர்பார்ப் புக்களும் நிலவுகின்றனவல்லவா? அதனால்




பிரேமதாசா உரையாற்றினார். அவர் அப்போது சொன்னது இது:

"நம் சுதந்திரத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள் ளது. இச் சூழ்நிலையில் பொதுமக்களின் ஆலோசனைகளை நாம் கோருகிறோம். நாம் சர்வாதிகாரிகள் போல செயற்பட விரும்ப வில்லை.

ஒரு ஜனநாயக நாட்டில் பிரச்சனை களைத் தீர்க்க மாநாடு நடத்தலாம். மக்களின் ஆலோசனைகளைக் கோரலாம். இதில் எவ்வித தவறும் இல்லை.

நாட்டில் ஒற்றுமை நிலவ வேண்டும். சுதந்திரம் கட்டிக் காக்கப்பட வேண்டும். இதற்கு பிக்குகளின் ஆலோசனைகள் அவசியம் தேவை."

## அமிரின் முழக்கம்

இதேவேளையில் கூட்டணிச் செயலதிபர் திரு.அ.அமிர்தலிங்கம் பேசியது இது:

"வடக்கும்-கிழக்கும் இணைந்த மாநில சுயாட்சி மூலமே கிழக்கைக் காப்பாற்ற முடியும். வடக்கு-கிழக்கு இணைந்த மாநில நிர்வாகத்தின் மத்திய நிலையமாக திருக் கோணமலை இருக்கும். இன்று திருமலையில் எவ்வாறு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறதோ, அதே போன்றுதான் அம்பாறையிலும், அதனை அடுத்துள்ள விந்தனைப் பகுதியிலும் குடியேற்றம் நடைபெற்று வருகிறது.

இந்த வகையில் அம்பாறையில் முஸ்லிம்களைவிட சிங்களவர்கள் தொகை கூடிவிட்டது. இவ்வாறான திட்டமிட்ட குடி யேற்றங்களை அம்பாறையில் தடுத்து நிறுத்த

கத்தினரையும் கூட்டணித்தலைவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள்.

மாநில சுயாட்சி பௌத்த மதத் திற்கோ, அல்லது சிங்கள மக்களுக்கோ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று அவர்களுக்கு விளக்கிக்கூறினார்கள் கூட்டணித் தலைவர்கள்.

எனினும் அதனை பௌத்த சங் கங்கள் பெரும்பாலானவை ஏற்றுக் கொள்ளவில்லை.

இத்தனைக்கும் ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழ் போராளி அமைப்புக் களது கருத்துக்கள் எதனையும் கூட்டணி தனது காதில் போட்டுக்கொள்ளவே இல்லை.

தமிழீழம் காண வாருங்கள் என்று இளைஞர்களை அழைத்த கூட்டணி, அதற் காகப் போராடிக்கொண்டிருந்த இயக்கங் களை கவனத்தில் கொள்ளவில்லை.

இறுதியில் வட்டமேசை மாநாடு தோல்விகண்டது.

## வேலணையில் கொள்ளை

84ல் யாழ்ப்பாணத்தில் வேலணை இலங்கை வங்கியில் குறிவைத்தது தமிழீழ விடுதலை இராணுவம்.(ரெலா)

வங்கிக்குள் புகுந்த இளைஞர்கள் இரும்புப் பெட்டியை தூக்கிவந்து ஒரு வேனில் ஏற்றிக்கொண்டு பறந்தனர்.

தகவல் பொலிசாருக்கு எட்டியது.

இரும்புப்பெட்டியோடு வந்த வேன் பண்ணைப் பாலத்தடியில் வைத்து மறிக்கப்பட்டது.


யாழ்ப்பாணத்தில் தொடரு...

சமூக விரோதிகள் ஒழிப்...

...விரவாத இயக்கம் எடுத்துள்ள நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில்

கடந்த 2 மாதங்களில்

86 கொள்ளைகள் 7 கொலைகள்

கொள்ளை முயற்சி

கிராம வாசிகளிடம்

நபர் கடத்தப்பட்ட...

மயிலிட்டி வடக்கில் சம்பவம்

# இயக்கங்களில் போட்டியால் மாட்டிக்கொண்ட கோழிக் கள்ளன்

**அரசியல் தொடர்**

**அற்புதன் எழுதுவது**

தேநீர் அருந்திவிட்டு தனது நண்ப ருடன் வெளியே வந்தார் செல்லக்கிளி. முதல் வெடி நெற்றியை குறிபார்த்து வைக்கப்பட்டது. குறி பிசகவில்லை. செல்லக்கிளி செத்துப்போனார்.

சுட்டவர்கள் புலிகள்.

## ஒழிப்பிலும் போட்டி

சமூக விரோதிகள் ஒழிப்பு நட வடிக்கைக்கு மக்களிடமும் வரவேற்பு இருந்தது. இதனால் சமூக விரோதிகள் ஒழிப்பு நடவடிக்கையிலும் இயக்கங்கள் மத்தியில் போட்டி தலைதூக்கியது.

தமிழீழ விடுதலை இராணுவம் (ரெலா) என்ற இயக்கத்திற்கும், தனது பங்குக்கு சமூக விரோதிகள் சிலரையாவது கொல்லவேண்டும் என்ற எண்ணம் ஏற் பட்டு விட்டது. அதன் விளைவு கொஞ்சம் நகைச்சுவை கலந்த விபரீதம். அதையும் சொல்கிறேன். யாழ்ப்பாணம் மானிப் பாயில் ஒரு பிரபல அரிசி ஆலையில் நள்ளிரவு நேரத்தில் கோழிகளைத் திருடினார் ஓர் இளைஞர்.

கோழிகள் போட்ட சத்தத்தில் விழித்துக்கொண்ட உரிமையாளர் குரல் கொடுக்க அயலவர்கள் திரண்டுவிட்டனர். 11 கோழிகளோடு மாட்டினான் கோழித் திருடன்.

அந்த இளைஞரைப் பிடித்து தர்ம அடிகொடுத்து விட்டு, அருகிலுள்ள தந்திக்கம்பம் ஒன்றில் கட்டிவைத்தனர்.

அப்போது அங்கு வந்த இளைஞர்கள் குழுவொன்று நடந்ததை விசாரித்து அறிந்து கொண்டது. தங்களோடு கோழித்திருடனை

இளைஞர்கள் குழுவொன்றை ஊர்மக்கள் திரண்டு துரத்தினார்கள்.

ஒருவர் மட்டுமே ஊர்மக்கள் கையில வசமாகச் சிக்கிக்கொண்டார்.

இரவு நேரம் என்பதால் மறுநாள் காலையில் பொலிசில் ஒப்படைக்கலாம் என்று அவரைக் கட்டிவைத்து காவல்காத் தனர் ஊர்மக்கள்.

இந்தச் செய்தி இயக்கமொன்றுக்கு எட்டியது. காரொன்றில் பறந்துவந்தனர்.

"பொலிசாரிடம் ஒப்படைத்தால் ஒழுங் காக விசாரிக்க மாட்டார்கள். நாங்கள் அழைத் துச் செல்கிறோம்," என்றனர் காரில் வந்த இளைஞர்கள். அழைத்துச் செல்லப்பட்ட வருக்கு பூசைகொடுத்து அவரது கூட்டாளிகள் பற்றிய விபரங்களையும் அந்த இயக்க இளைஞர்கள் திரட்டிக்கொண்டனர். பின்னர் அவருக்கு மரண தண்டனை வழங் கப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் நடவடிக்கையே அது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.இயக்கம் அக் கொள்ளை பற்றி விசாரித்தபோது ஒரு பொலிஸ் அதிகாரியும் உதவினார். அத்தோடு கொள்ளையர்களிடம் கைப்பற்றி, பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்த துப்பாக்கி ஒன்றையும் இயக்கத்திடம் தனது பரிசாகக் கொடுத்தார்.

அவர்தான் இன்ஸ்பெக்டர் ஜெயக்குமார். காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்தவர் முன்னாள் ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரனின் சகோதரர்.

இரண்டாம் ஈழப்போர் காலகட்டத்தில் புலிகளால் கைது செய்யப்பட்ட ஜெயக்குமார்,

84 இலும் இது போலவே தோன்றி மறைந்த காட்சிகள் சிலவற்றை, காலப்பொருத்தம் கருதி நினைவுபடுத்திவிட்டு மேலே செல்ல லாம்.

84 இல் ஜே.ஆர். அரசு வட்டமேசை மாநாடு நடத்தியது பற்றி முன்னரே குறிப்பிட்டிருந்தேன்.

## அன்றும் ஒரு தீர்வு யோசனை

இலங்கையின் தமிழ் பத்திரிகைகள், தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவை யெல்லாம், வட்ட மேசை மாநாடு தமிழர் பிரச்சனையைத் தீர்க்கப்போவதாகவே எழுதிவந்தன.

வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளாமல் சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஒதுங்கியிருந்ததைக் கண்டித்தும் வந்தன.

பொல்காவலையில் மாதிரிக் கிராமம் ஒன்றை திறந்து வைத்து அன்றைய பிரதமர்

வேண்டுமானால் வடக்கும்-கிழக்கும் இணைந்த மாநில ஆட்சியை அமைக்க வேண்டும்."

இது நிந்தாவூர் முன்னாள் எம்.பி. முஸ்தபா தலைமையில் கல்முனை மெதடிஸ்த சபை மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரை யாடலில் அமிர்தலிங்கம் பேசியது.

அம்பாறையை பாதுகாக்கவே மாநில சுயாட்சித் திட்டம் என்று 84ல் அமிர் கூறினார்.

பிராந்திய சபை திட்டத்தில் அம்பா றையை விட்டுக்கொடுக்க தயார் என்று கூட்டணித்தலைவர் திரு.சிவசிதம்பரம் சமீபத்தில் அறிவித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம் காங்கிரஸ்

1984 இல் முஸ்லிம் காங்கிரஸ் இப்போதுள்ளதைப் போலச் செல்வாக்கு பெற்றிருக்கவில்லை.

ஆயினும், தனி மாகாண சபைக் கோரிக்கை மூலமாக தனது குரலை உயர்த்தத்தொடங்கியது.

கூட்டணித் தலைவர்களை தனியே சந்தித்துப் பேச்சு நடத்தியது முஸ்லிம் காங்கிரஸ்.

மாநில சுயாட்சிக்கோரிக்கைக்கு பௌத்த மதகுருமாரின் பலத்த எதிர்ப்பும் நிலவியது.

மாவட்ட சபைகளுக்கு மேலதிகமாக புதிய ஏற்பாடுகள் எதனையும் ஆதரிக்க முடியாது என்று கூறிவிட்டனர்.

இதனையடுத்து பௌத்த மகாசங்

வேனில் இருந்து குதித்து 'ரெலா' உறுப்பினர்கள் தப்பி ஓடினார்கள்.

பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஒருவர் கொல்லப்பட்டார். ரெலா இயக்கத்தைச் சேர்ந்த கணேசலிங்கம் என்பவரே பலியான வராவார்.

இரும்புப் பெட்டி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது. மீட்கப்பட்ட இரும்புப்பெட்டிக்குள் 6½ இலட்சம் ரூபா பணம் இருந்தது.

குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே திறக்கப்படக்கூடிய முறையில் அமைந்த இரும்புப்பெட்டி அது.

ரெலா இயக்கத்தின் நடவடிக்கைகள் சிலவற்றை நோக்கினோம். ரெனா இயக்கத்தின் ஒரு விபரீத நடவடிக்கை பற்றி நிச்சயம் அறிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் தேசிய இராணுவம் என்பதைத் தான் சுருக்கமாக ரெனா என்று அழைத் தார்கள்.

இதன் தலைவர் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன்.

தமது இயக்கத்தின் மிகப்பெரிய நடவடிக்கை ஒன்றிற்கு திட்டமிட்டார் மகேஸ்வரன்.

திட்டம் அமோகமாகத் தான் இருந்தது. அதனைச் செயற்படுத்தியபோதுதான் ஒரு பயங்கரம் நிகழ்ந்தது. (தொடர்ந்து வரும்)

# புலிகளின் 'ஷெல்' தொழிற்சாலை விபரீதம்!

## வெடி விபத்து கொக்குவிலில்!

யாழ்ப்பாணத்தில் புலிகளது ஷெல் தொழிற்சாலை ஒன்றில் 10.7.95 அன்று வெடிவிபத்து ஒன்று ஏற்பட்டது.

இது பற்றிய தகவல்களே திரிபடைந்து 150 பொதுமக்கள் புலிகளின் வெடி விபத்தால் பலி என்று வதந்திகளாகியதும் குறப்பிடத்தக்கது. முரசு மட்டுமே வதந்தியை மறுத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் கொக்குவிலில் உள்ள தலையாளி என்னுமிடத்தில் ஒரு வீட்டில் இருந்த ஷெல் தொழிற்சாலை யிலேயே வெடிவிபத்து ஏற்பட்டது.

இந்த வெடிவிபத்தால் பெரும் தீப்பிழம்பு உருவானது. அயலில் உள்ள வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து பலர் காயமடைந்தனர்.


வெடிவிபத்தில் பலியான புலி உறுப்பினர் கப்டன் கண்ணாளன்

கோபமடைந்த அயலவர்கள் புலிகளை எதிர்த்து திரண்டுவர, மன்னிப்புக் கேட்ட புலிகள் காயமடைந்தவர்கள் யாவரையும் தமது வாகனங்களில் ஏற்றி வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர்.

இந்த வெடிவிபத்தில் கப்டன் கண்ணாளன் (ஏரம்பு கந்தசாமி-மட்டக்களப்பு) எனப்படும் புலிகள் அமைப்பு உறுப்பினர் பலியானார். புலிகளது 4 ஆதரவாளர்கள் பலியானார்கள்.

1.தசரத ராஜ்குமார் சந்தணம்-கனகராயன் குளம்-வவுனியா, 2.நடராஜா ராஜபாலன்-காங்கேசன்துறை, 3. நடராஜா கணநாதன், அத்தியடி-யாழ்ப்பாணம், 4. சோமசுந்தரம் மிதிலைகாந்தன்-பூநாறி மடம் லேன் யாழ்ப்பாணம். ஆகியோரே பலியான ஆதரவாளர்களாவர்.

## பார்வைக்கு வைக்கப்பட்ட பாகங்கள்



நவாலி தேவாலயம் மீது தாக்குதல் நடந்தது நூறுவீதம் உண்மை.

தேவாலய கூரைகள், ஜன்னல்கள் யாவும் சின்னாபின்னமாகின. தேவாலயத்தோடு இருந்த கட்டிடங்களுக்குள் தஞ்சமடைந்த மக்களே கொல்லப்பட்டனர். தேவாலயம் சேதங்கள், காயங்களோடு தப்பிக்கொண்டு விட்டது-தரைமட்டமாகவில்லை என்பதால், தாக்குதலே நடக்கவில்லை என்று கூறுவது உண்மைக்கு மாறானதாகும்.

தேவாலய வளாக இடிபாடு களுக்கிடையில் புக்காரா விமானத்தின் சிதைவடைந்த பாகங்களை புலிகள் பொதுமக்களின் பார்வைக்கு வைத்திருக் கிறார்கள். அக்காட்சியே படத்தில் இருக்கிறது.

www.padippakam.com

# பாராளுமன்ற நீர்நிலையில் மனித சடலங்கள்

## அரசியல் 'முன்னேற்றப் பாய்ச்சலே' இன்று தேவை!

அலசுவது–இராஜதந்திரி



இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கான யோசனைகளை ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்டுவைத்து, அது குறித்த வாதப் பிரதிவாதங்களுக்கு களம் அமைத்துள்ள இத் தருணத்திலேயே இந்தியாவின் தமிழ் நாட்டில் இலங்கையின் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மீதான அனுதாப அலைகள் தோன்றியுள்ளன.

இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகள் வலுவடையும் போதெல்லாம் தமிழகம் தனது எதிர்ப்பை எப்போதும் பிரமாண்டமான முறையில் வெளிப்படுத்தி வந்துள்ளது.

ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், பகிஷ்கரிப்புகள், வேலைநிறுத்தங்கள் என்று தமிழகத்தவர்கள் இலங்கைத் தமிழர்கள் மீதான தமது கரிசனையை கடந்த 12 வருடகாலமாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவ்வகையில் தமிழகத்தவர்கள் சந்திரிகா அரசின் இராணுவ முஸ்தீபுகள் குறித்தும் தமது கண்டனங்களை வெளியிட்டு பேரணிகள், ஆர்ப்பாட்டங்களை நடத்தியதுடன் இலங்கைத் தமிழர்கள் மீதான தமது அனுதாபத்தைக் காண்பித்துள்ளார்கள்.

சந்திரிகா அரசின் தீர்வு யோசனைகள் வெளியாகியுள்ள இத்தருணத்தில், மறுபுறத்தே இராணுவ முஸ்தீபுகளும் இடம்பெற்று வருவதையே அவதானிக்க முடிகிறது.

ஆட்சேர்ப்பு, ஆயுதச் சேர்ப்பு என்பன மும்முரமாக ஆட்சியாளர்களால் நடத்தப்படுகின்றன. படைக்கு ஆட்சேர்ப்பு என்ற விடயம் மனம் போன போக்கிலும், கண்மூடித்தனமாகவும் இடம்பெறுகின்றது.

புத்ததர்மம் பேசிய பிக்குமார்கள் முதற் கொண்டு கோரக் கொலைகள் புரிந்த கொலையாளிகள் வரை படைகளில் இடம்பிடித்து வருகின்றனர்.

அண்மையில் தலைநகரில் இடம்பெற்ற செல்வந்தப் பெண்மணி ஒருவரின் கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேக நபர்கள் இருவர் இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தபிக்குமார்கள் சிலரும் தமது காவித்துணியைக் களைந்துவிட்டு இராணுவத்தில் சேர்ந்துள்ளார்கள். இந்நிலையில் யுத்த நோக்கம் கொண்ட இந்த பிக்குமார்கள் படையில் சேருமுன்னர் நிச்சயம் புத்த தர்மத்தையல்ல, யுத்தப் பிரசாரத்தையே மக்களிடையே முன்னெடுத்திருப்பார்கள் என்பது தற்போது புலனாகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா அரசு தனது தீர்வு யோசனைகள் குறித்து தற்போது பரவலான பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளது. நீதித்துறை, அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் ஏனைய சிரேஷ்ட அமைச்சர்கள் ஆகியோர் அரசின் தீர்வு யோசனைகளை விரிவான முறையில் விளக்கிவருவதைக் காணமுடிகின்றது.

இருந்த போதிலும் ஆட்சியாளர்கள் பூஜிக்கும் புத்தபீடத் தலைவர்களும், புத்திஜீவிகள் என்ற மட்டத்திலுள்ள பலரும் தீர்வு யோசனைகளை ஏற்றுக் கொண்டதற்கான அறிகுறிகள் எதனையும் காணமுடியவில்லை.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வு யோசனைகளை நிராகரித்திருப்பதனை ஆட்சியாளர்கள் தமது செல்வாக்கிற்குட்பட்ட சாதனங்கள்



சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக கடந்த மாதம் ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழக தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்.

## தமிழகத்தில் அனுதாப அலை

மூலமாக பெரியளவில் பிரபலப்படுத்தியுள்ளார்கள்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் சந்திரிகா அரசின் யோசனைகளை நிராகரிக்கவில்லை. புத்த சங்கத்தினர் மற்றும் பேரினவாத போக்குடையோர் பலரும் சந்திரிகா அரசின் தீர்வுயோசனைகளை நிராகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எனவே எல்.ரி.ரி.ஈ.யினர் மட்டும்தான் தீர்வுயோசனைகளை நிராகரித்துள்ளார்கள் என்ற அடிப்படையில்-வடக்கே அவர்கள் மீது மீண்டும் ஒரு பாய்ச்சலை அரசினர் மேற்கொள்வார்களேயானால், அப்பாய்ச்சல் எவ்வகையிலும் நியாயமானதாக இருக்க முடியாது.

எல்.ரி.ரி.ஈ.யினரின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் அரசின் தீர்வு யோசனைகளை தமது இயக்கத்தினர் நிராகரித்திருப்பதற்கான காரணங்கள் குறித்து கருத்து வெளியிட்ட போது இராணுவ அழுத்தங்களையே பிரதான காரணமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒரு நாட்டின் ஒருமைப்பாடு, பாதுகாப்பு, என்பவற்றைப் பேணுவதே படையினரின் பொறுப்பாகும். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை முப்படைகளினதும் தன்மையை நன்கு அலசி ஆராயவேண்டியது இன்றைய தருணத்தில் அவசியமானதாகின்றது.

இராணுவத்தில் உள்ளோரின் எண்ணிக்கை தற்போது ஒரு இலட்சத்தையும் தாண்டியிருக்கின்றது. அத்துடன் முழு அளவில் சிங்கள இனத்தவர்களைக் கொண்டதாகவும், ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே தமிழர்களை உள்ளடக்கியதாகவுமே முப்படைகளின் நிலை காணப்படுகின்றது.

இலங்கையின் பிரபல அரசியல் விமர்சகரும், எல்.ரி.ரி.ஈ.யினருடனான சமரசப் பேச்சுக்களில் பங்குபற்றியவருமான டாக்டர் ஜயதேவ உயங்கொட பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரை ஒன்றில், 'குறைந்த பட்சம் தமிழ் மொழியையாவது சரிவரப்பேசமுடியாத படைவீரர்களால் யாழ் குடாநாட்டில் நீடித்து நிலைத்திருக்க முடியும் என்று எதிர்பார்க்க முடியாது' எனத் தெரிவித்திருந்தார்.

டாக்டர் ஜயதேவ உயங்கொடவின் இக் கருத்து படைகளில் உள்ள பெரும்பான்மை சமூகத்தவர்களின் எண்ணிக்கையை எடைபோடுவதாக இருக்கின்றது.

இது தவிர அண்மையில் ஒரு தமிழ் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கருத்து வெளியிடுகையில், இலங்கைப் பொலிஸ் சேவையில் சகல தரத்திலும் உள்ள தமிழர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 600 வரையே காணப்படுகின்றது எனக் கவலை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இன ரீதியான ஊடுருவல்கள் எவ்வளவு தூரம் விரிவடைந்துள்ளன என்பதற்கு ஆயுதப்படைகளில் உள்ள இன விகிதாசாரம் நல்ல உதாரணமாக இருக்கின்றது.

எனவே இன அடிப்படையில் பெருவாரியான படையினரைக் கட்டியெழுப்பியுள்ள நிலையில் ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் தாக்குதல் முஸ்தீபுகள் எவ்வகையிலும் இன ஒற்றுமையைப் பேணவோ, அல்லது இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்க்கவோ அல்லது இனப் பிரச்னைக்கான இன்றைய யுத்தத்தில் வெற்றிபெறவோ உதவ மாட்டா என்பதனையே உணரமுடிகின்றது.

இவ்வகையில் எல்.ரி.ரி.ஈ.யினரின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருப்பதைப் போல, இராணுவ அழுத்தங்களுக்கு மத்தியில் எவ்வகையிலும் அரசியல் தீர்வு என்பது சாத்தியப்படாததாகவே இருக்கும்.

இதேவேளை கொழும்பிலுள்ள நிலவரத்தை அவதானிக்கையில்-அரசின் வெண்தாமரை இயக்கம் பற்றிய பிரசாரம் மேலும் தீவிரமாக்கப்பட்டுள்ள இத் தருணத்தில்-கோட்டேயிலுள்ள பாராளுமன்றத்தைச் சூழவுள்ள தியவன்ன ஓயா நீர்ப்பரப்பில் மனித சடலங்கள் மிதந்துள்ளன.

கொழும்பின் சுற்றுப்புறத்தில் உள்ள 'பொல்கொட' வாவியில் மனித சடலங்கள் கடந்த மாதங்களில் மிதந்தன. தற்போது கோட்டே ஜயவர்தனபுர-அதாவது இலங்கையின் பாராளுமன்றக் கட்டிடம் அமைந்துள்ள பிரதேசத்தின் பரந்த நீர்ப்பரப்பிலேயே சடலங்கள் மிதக்க ஆரம்பித்துள்ளமை, அச்சத்தையும், ஆச்சரியத்தையும் அளிப்பதாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் பொல்கொட வாவியிலும், குருநாகல் பிரதேசத்தின் அளவ்வ பகுதியிலும் காணப்பட்ட சடலங்கள் தமிழர்களுடையவை என்பது பெரும்பாலும் ஊர்ஜிதமாகியுள்ளது.

இந்நிலையில் கோட்டே தியவன்ன ஓயாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித சடலங்களும் சரியான தகவல்கள் கிடைக்காதவரை தமிழர்களுடையதாகவே இருக்குமென்றே கருதமுடியும்.

தென்னிலங்கையில் கைதாகிவரும் தமிழர்களின் எண்ணிக்கையும் அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளது.

இதுதவிர வேறு கும்பலொன்றும் தமிழ் இளைஞர்களை மடக்கிப் பிடித்து வாகனங்களில் ஏற்றிச் சென்று தமது கைவரிசையைக் காட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வெள்ளவத்தையில் க.பொ.த உயர்தரப் பரீட்சை மண்டபத்துக்குச் சென்ற தமிழ் மாணவர் ஒருவர் இனந்தெரியாக். கும்பலொன்றினால் வாகனமொன்றில் ஏற்றப்பட்டு கடத்தப்பட்டுள்ளார்.

இறுதியாக அந்த இளைஞன் தாம் வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்தும் தப்பியோடி வெளியே வந்த போது, ரம்புக்கனை பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

பின்னர் கொழும்பிலுள்ள மனித உரிமைகள் செயலணி உடன் செயலில் இறங்கி அந்த இளைஞனைக் காப்பாற்றியுள்ளது.

தப்பி வந்த இளைஞன் கொடுத்த தகவல்களைப் பார்க்கும் போது, அவனைக் கடத்தியவர்கள் மூர்க்கத்தனமாக நடந்துகொண்டுள்ளதுடன், இறுதியாக அவர்மீது பயங்கரமுடிவொன்றை எடுப்பதற்குத் தயாரானதையே அறியமுடிகின்றது.

எனவே, தமிழர்களாகப் பிறந்தவர்கள் இந்நாட்டில் இராணுவ அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றுக்கு முகங்கொடுத்த நிலையில் ஓர் அரசியல் தீர்வை நிதானமாக எவ்வகையிலும் அணுகமுடியாது.

எல்.ரி.ரி.ஈ.யினர் அரசியல் யோசனைகளை நிராகரித்துள்ளார்கள் என்பதன் அர்த்தம் அரசியல் தீர்வு முயற்சிகள், முறிவடைந்து விட்டன என்பதல்ல.

சில சமயம் எல்.ரி.ரி.ஈ.யினர் அரசின் தீர்வு யோசனைகளை ஏற்றுக்கொண்டிருக்கும் பட்சத்தில் பௌத்த மதப் பீடங்களும், ஏனைய பேரினவாதக்கும்பல்களும் அதனை எதிர்த்திருந்தால் சந்திரிகா அரசின் நிலைப்பாடு எத்தகைய கோணத்தில் இருந்திருக்குமென்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா அத்தகைய சூழ்நிலையில் பௌத்த தீவிரவாதிகளையும், பேரினவாதிகளையும் இராணுவ அணுகுமுறைகள் மூலமாக கையாண்டிருப்பாரா என்பது சந்தேகமே.

எனவே, யோசனைகள் என்று வெளிப்படும் பட்சத்தில் முரண்பாடுகள் நிச்சயம் தோன்றவே செய்யும். இந்நிலையில் இந்த முரண்பாடுகளுக்கு முகங்கொடுத்து, அரசியல் ரீதியாக முன்னேறிப்பாய்வதன் மூலமே ஒரு நிரந்தரத் தீர்வை நோக்கிச் செல்லமுடியும்.

## ஜெயலலிதாவை நோக்கித் திரும்பிய 'பூமராங்' புலிகளுக்கு நன்றி சொல்லும் தலைவர்கள்

'பூமராங்' என்று ஒரு ஆயுதம். நம் முன்னோர்கள் பயன்படுத்தியது. ஒருவரை நோக்கி எறிந்தால் தாக்கிவிட்டுத் திரும்பிவரும்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு 'பூமராங்' புலிகள்தான். 1991 இல் கருணாநிதியை நோக்கி ஜெயலலிதா ஏவிய 'பூமராங்' கருணாநிதி ஆட்சியில் புலிகளுக்கு சுதந்திரம் என்பதுதான்.

சமீபத்தில் வேலூர் சிறையில் இருந்து புலிகள் தப்பிய போது அதே 'பூமராங்' ஜெயலலிதாவை நோக்கி திரும்பிவந்திருக்கிறது.

"இது சிறையுடைப்பல்ல. புலிகளுக்கு ஜெயலலிதா ஆட்சி வழங்கிய விடுதலை" என்கிறார் சுப்பிரமணியம் சுவாமி.

"ஜெயலலிதா பதவி துறக்க வேண்டும்" என்று சொல்கிறார் தமிழக காங்கிரசின் முன்னாள் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி.

இவர்கள் இருவருமே முன்னர் ஜெயலலிதாவோடு கைகோர்த்து நின்று கருணாநிதி ஆட்சிக்கு 'புலிகளோடு உறவு' என்று காரணம் சொல்லிக் குறிவைத்தவர்கள் என்பதுதான் வேடிக்கை.

புலிகளுக்கு கலைஞர் ஆட்சியில் விசேஷ கவனிப்பு நடந்தது உண்மை. ஆனால், ராஜீவ் கொலைத் திட்டம் பற்றி கலைஞருக்கு துளியும் தெரிந்திருக்க நியாயமில்லை.

அதே போல வேலூர் சிறைஉடைப்புக்கும் தமிழக அரசு உடந்தையாக இருந்திருக்கலாம் என்ற வாதமும் ரொம்ப பலவீனமானது தான்.

வருமானவரி ஏய்ப்புத் தொடர்பாக ஜெயலலிதாவின் நெருக்கமானவர்கள் சிக்கலில் மாட்டியிருப்பதால் அதனை திசைதிருப்ப இப்படியொரு நாடகத்தை ஜெயலலிதா நடத்தியிருக்கலாம் என்பது ஒரு வாதம்.

ஆனால், ஊழல் விசாரணைகளை மூடி மறைக்க வேண்டுமானால் தொடர்ந்து ஆட்சியில் இருப்பதே பாதுகாப்பானது.

வேண்டுமானால் ஆபத்தில்லாத சின்ன நாடகங்களை அரங்கேற்றலாம்.

உதாரணமாக, ஜெயலலிதாவின் தோழி சசிகலாவின் கணவர் ஒரு பொலிஸ்காரரை தாக்கிவிட்டு சிறைப்பட்டார். ஜெயலலிதா ஆட்சிக்கு எதிராகப் பேசினார். பத்திரிகைகளுக்கு பரபரப்பான செய்தி கிடைத்தது. மக்களின் கவனம் ஓரளவு திருப்பப்பட்டது.

அதிலும் ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும், நடராஜனைக் கைது செய்தது மூலம் யார் எவர் என்றாலும் சட்டம் ஒழுங்கை கடைப்பிடிக்கும் நீதி தேவதை என்ற புகழ் ஜெயலலிதாவுக்கு கிடைத்தது.

ஆனால், சிறையிலிருந்து புலிகள் தப்பியது தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு என்று மத்திய அரசு மாநில அரசைக் கலைக்கவும், அதனை நியாயப்படுத்தவும் கூடிய சூழலைத் தோற்றுவித்துள்ளது.

ஏற்கனவே புலிகளை சம்பந்தப்படுத்தி கருணாநிதி ஆட்சியைக் கலைக்க முன்நின்ற ஜெயலலிதா கொள்ளிக்கட்டையால் தலை சொறிய நினைத்திருக்க மாட்டார்.

அது தவிர, தப்பிச் சென்ற புலிகளும் திசைக்கொருவராகப் பிரிந்து ஓடியுள்ளார்கள். பலர் மாட்டியும் இருக்கிறார்கள். தமிழக அரசே உதவியிருந்தால், தப்பியவர்களை பத்திரமாக வேறு மாநில எல்லைக்குள் பத்திரமாகக் கொண்டு சென்று விட்டிருக்க முடியும்.

சிறையுடைப்பில் பணம் விளையாடியிருக்கிறது. சிறை அதிகாரிகள் சிலருக்கும், பாதுகாவலர்களுக்கும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து புலிகள் காரியத்தைச் சாதித்திருக்கிறார்கள். ஆனால், பாவம் ஜெயலலிதா மாட்டிக் கொண்டு முழிக்கிறார்.

எதிலுமே திடீரென்று முடிவெடுக்காமல் ஆறப்போட்டு காரியம் பார்க்கும் பிரதமர் நரசிம்மராவ் மத்திய ஆட்சியில் இருப்பதால் தமிழக மாநிலத்தில் அ.தி.மு.க. ஆட்சி கவிழாமல் தப்பிக்கொண்டது. ஆனாலும் கூரிய கத்தி மட்டும் தமிழக அரசின் தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருக்கிறது.



வேலூர் சிறையில் இருந்து புலிகள் தப்பியிருப்பது உண்மையில் ஜெயலலிதாவின் அரசியல் எதிரிகளுக்கே மாபெரும் வாய்ப்பு. தமது அரசியல் எதிரியை சிக்கலில் மாட்டிவிட்ட தற்காக அவர்கள் தங்கள் மனதுக்குள் புலிகளுக்கு நன்றி சொல்வார்கள். அதற்காக புலிகள் தப்பியதற்கு தமிழக எதிர்க்கட்சிகள் உடந்தையென்று அர்த்தமா என்ன?

இதில் அனைவரையும்விட சந்தோசம் கலைஞர் கருணாநிதிக்குத்தான். தன்னைத் தாக்கிய 'பூமராங்' தனது எதிரியிடமே திரும்பிச் சென்று விட்டதை சுவாரசியமாக-தனது கறுப்புக் கண்ணாடி வழியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார் கலைஞர்.

பூமராங் ஆயுதம் ஏவியவரிடம் திரும்பிவந்து சேரும். அவரைத் தாக்காது. அரசியல் 'பூமராங்' ஏவியவரையும் திரும்பிவந்து தாக்கும். வித்தியாசம் அதுதான்!



படிப்பகம்

www.padippakam.com

# குற்றவாளி?

தருவது ரசிகன்



காண்டிஸ் விலலியமஸ

1978 ஜூன் 25.

இலண்டன் பேர்மிங்ஹாமில் எர்டிங்டன் என்னும் பகுதி. அங்கே மொன்ற் பெலியர் வீதியில் உள்ள 12 மாடிக் கட்டிடம் வானத்தை முத்தமிட அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தது.

12வது மாடியில் குடியிருந்த 64 வயது ஆர்தருக்கு மொட்டை மாடிக்குப் போய் காற்றுவாங்க வேண்டும்போல ஆசையாக இருந்தது.

அன்றைய தினசரிப் பேப்பரைக் கையில் எடுத்துக்கொண்டார். மொட்டை மாடியில் காற்று வாங்கிக் கொண்டே செய்திகளை மேய்வதில் ஒரு அலாதி சுகம் இருப்பதாக அவரது அபிப்பிராயம்.

வீட்டிலிருந்து வெளியே வந்து மொட்டை மாடிப் படிக்கட்டில் கால் வைத்தவரின் கண்ணில் பட்ட காட்சி எரிச்சலூட்டியது.

'மூக்கு முட்ட குடித்துவிட்டுவந்து மொட்டை மாடியில் படுத்துவிடுவார்கள்: குடிகாரப் பயல்கள்.' ஆர்தருக்கு கெட்ட கோபம் வந்துவிடும். அப்படியே தூக்கி மாடியில் இருந்து கீழே வீசிவிடலாமா என்று நினைப்பார். நினைப்பது மட்டும் தான்.

இப்போதும் அப்படித்தான் நினைத்தார். மொட்டை மாடிப் படிக்கட்டின் மேல் பகுதியில் யாரோ சுருண்டு படுத்திருப்பது போலத் தெரிந்தது.

எரிச்சலோடு உற்றுக் கவனித்தார்.

நெஞ்சுக்குள் ஆச்சரியம். சுருண்டு படுத்துக் கிடப்பது ஒரு இளம் பெண் என்று தெரிந்தது.

ஸ்கேட் அணிந்திருந்தாள். தொடையில் பாதிவரை உயர்ந்து அலங்கோலமாகக் கிடந்தது.

"இளம் பெண்களும் தலைகால் புரியாமல் குடிக்க ஆரம்பித்து விட்டார்கள்" முணுமுணுத்தபடியே படிகளில் ஏறினார் ஆர்தர்.

அருகில் சென்று குனிந்து பார்த்த போது ஆர்தருக்கு சந்தேகம் வந்துவிட்டது. பயமும் தொற்றிக் கொண்டது.

மூச்சே வரவில்லையே! செத்துப் போனாளோ? தலைமுடி கலைந்திருந்தது. கழுத்தில் ஒரு காயம் தெரிந்தது.

ஆர்தருக்கு வியர்த்தது.

கொலை! அவரது 64 வயதில் கொலையான ஒரு உடலைப் பார்ப்பது இதுதான் முதல் முறை!

'தொடாதே? ஓடு! பொலிசுக்கு தகவல் கொடு!' மூளைக்குள் அலாரம் அடித்து எச்சரிக்கை பிறந்தது.

படிகளில் இறங்கும்போது வயதான கால்கள் நடுங்கத் தொடங்கிவிட்டன.

வீட்டுக்குள் போய், நடுங்கும் கரங்களால் தொலைபேசி றிசீவரைஅள்ளி, பொலிசுக்கு தகவல் சொல்லி முடித்துவிட்டு, மூன்று கிளாஸ் குளிர்ந்த நீர் அருந்திய போதும் இதயத்துடிப்பு ஏறிக்கொண்டிருப்பது போலவே உணர்ந்தார்.

◎ ◎

அதிகம் குடித்திருக்கிறாய் பாற்றிக்! என்றாள் அவன் முத்தமிட்டபோது உணர்ந்த போதை நெடியால் முகம் சுளித்துக் கொண்டே பமேலா சாம்புறாக். பெயர் நீளமாக இருப்பதால் பமேலா என்று சுருக்கிக் கொள்வோம். அவள் நெஞ்சில் இரண்டு ஆப்பிள்கள்! அவை பாற்றிக்கை மேலும் போதையேற்றிக் கொண்டிருந்தன. தொடக் கை நீட்டினான். விலகினாள். ஆப்பிள்கள் அசைந்தன.

"உன்னத் தேடி வந்தேன், நீ இல்லை?"

"அதனால் குடிக்கப் போனாயா? எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன், குடித்துவிட்டு வராதே, வந்தாலும் முத்தமிடாதே, குமட்டுகிறது என்று."

"சொறி டியர்."

என்றான், என்றபோதுதான் பமேலா அவன் கழுத்தைக் கவனித்தாள். விரல்களால் கீறப்பட்ட அடையாளங்கள் போல சின்னச் சின்னக் காயங்கள்.

"கழுத்திலே என்ன காயம் பாற்றிக்? குடித்துவிட்டு சண்டைபோட்டாயா?"

அவன் தனது கழுத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

"ஓ..... இதுவா, நேற்றுக் காலையில் பொலிசாரோடு ஒரு பிரச்சனை. லொறி ஒன்றைக் கடத்தப் பார்த்தேனாம். முட்டாள்கள் கழுத்தைப் பிடித்து 'நடஸ்ரேசனுக்கு' என்றார்கள்."

"யாருடைய லொறி அது?"

"யாருக்குத் தெரியும்? ஓடிப்பார்க்க வேண்டும் போல இருந்தது. பாவிகள் விட்டால்தானே. தனிமனித சுதந்திரத்துக்கே எத்தனை ஆபத்துக்கள் பார்!"

பமேலாவுக்கு சினமாகவும் இருந்தது. சிரிப்பாகவும் இருந்தது.

"சரி வா சாப்பிடலாம்!"

"முதலில் இது வேண்டும் தா."

அவன் விரல் நீட்டிக் காட்ட பமேலா வெட்கப்பட்டு.

"சீ...போடா!"

என்றாள்.

**பலாத்காரப் படுத்தப்பட்டு கொல்லப் பட்டாள் ஒருபெண்! கொலையாளியை தேடி வலைவிரித்தது பொலிஸ். பலரைச் சந்தேகித்தார்கள்.**

**சிலர் மீது உச்ச பட்ச சந்தேகம்.**

**ஆனால்-நிரூபிக்க ஆதாரமில்லை.**

**பொலிஸ் குழம்பிப் போனது .**

**உதவிக்கு வந்தது விஞ்ஞானம்? அது எப்படி?**

**விடை இந்தக் கதையின் முடிவில் தெரியும்.**

**உண்மைக் கதை மட்டுமல்ல கொலை விசாரணைகளில் திருப்பம் ஏற்படுத்திய -**

**வழக்கும் இது .**



கொலை நடந்த 12 மாடிககட்டிடம்

"12 மாடிக்கட்டிடத்தில் பிணமாகக் கிடந்த பெண். கொலையாளிகளைத் தேடி பொலிஸ் வேட்டை."

இலண்டன் பத்திரிகைகளில் அதுதான் தலைப்புச் செய்தி.

கொல்லப்பட்ட இளம் பெண்ணின் பெயர் காண்டிஸ் வில்லியம்ஸ். 13 வயது. சற்றுக் கரு நிற மேனி. சுருண்ட கூந்தல் மேற்கு இந்திய வம்சாவளிக் குடும்பத்தில் பிறந்தவள்.

பலாத்காரம் செய்யப்பட்ட பின் கழுத்தை இறுக்கிக் கொலை செய்யப்பட்டிருக்கிறாள்.

காண்டிஸ் சப்பாத்து அணிந்திருந்தாள். அவளுடைய சப்பாத்தில் கட்டியிருந்த நாடாவை உருவி அவளது கழுத்தை இறுக்கி கொலை நடந்திருக்கிறது.

பொலிஸார் கொலையாளியைத் தேடி வலை விரித்திருக்கிறார்கள். உபயோகமான தகவல்களை பொது மக்களிடம் இருந்தும் எதிர்பார்க்கிறார்கள்.

என்று தெரிவித்தன பத்திரிகைகள். கொலை செய்யப்பட்ட காண்டிஸ் வில்லியம் ஸின் புகைப்படமும் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது.

'இளம்பெண்களுக்கு ஆபத்து. பொலிஸ் துறையிலுள்ளவர்கள் வேறு வேலைகளுக்கா போய்விட்டார்கள்?'

பெண்களைப் பெற்றவர்கள் வெறுப்பாகக் கொதித்தார்கள்.

பொலிசிடம் இருந்து உளவுத்துறைக்கு மாற்றப்பட்டது விசாரணை.

உளவுத்துறை அதிகாரி ஜேம்ஸ் பிரேத பரிசோதனை அறிக்கையைத் துருவினார். பொலிசாரால் ஒப்படைக்கப்பட்ட தடயங்களை ஆராய்ந்தார்.

கொலைகாரனின் தலைமுடி என்று சந்தேகிக்கப்பட்ட முடி மயிர்கள் சிலவற்றை கொலை நடந்த இடத்தில் இருந்து சேகரித்து வைத்திருந்தது பொலிஸ்.

கொலைகாரனின் உமிழ்நீர் போன்ற தடயங்களும் நுணுக்கமாக சேகரிக்கப்பட்டு இருந்தன.

காண்டிஸீன் உடலில் கொலைகாரன் வெறிகொண்டு ஏற்படுத்திய தடயங்களில் இருந்த எச்சங்களும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அது தொடர்பான விபரங்களும் அறிக்கையாகத் தரப்பட்டிருந்தன.

ஜேம்ஸ் திருப்திப்பட்டுக் கொண்டார். "பொலிஸ் மிகத் துல்லியமாக விசாரணைகளை நடத்தியிருக்கிறது. தடயங்கள் சேகரிப்பும் பிரமாதம்" என்றார் தனது சக அதிகாரியிடம்.

சக அதிகாரி மாட்டினிடம் இருந்து சலிப்பாகப் பதில் வந்தது;

பிரமாதம்தான். ஆனால் தலைமுடியையும் எச்சிலையும் வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும் ஜேம்ஸ்? நாம் தான் நமது தலைமுடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டும்!

"பார்க்கலாம் பார்த்து விடலாம். முதலில் சந்தேக நபர்களது பட்டியலைத் தயாரிப்போம். அத்தனை பேரையும் அள்ளிக் கொண்டு வந்து ஆராய்ந்து புள்ளி வைப்போம்!"

"செய்யலாம் காலையில் இருந்து எனக்கு வயிறு காலியாக இருக்கிறது. கொலைப்பசி. முதலில் வயிற்றைக் கவனிக்க வேண்டும்!"

என்று மார்டின் சொல்லிக் கொண்டிருந்த போது, ஜேம்ஸ் மூளையில் மின்னலாய் ஒரு பொறி.

விரைந்துபோய் பிரேத பரிசோதனை அறிக்கையை எடுத்துப் படித்தார்.

'கொலை செய்யப்பட்ட காண்டிஸின் வயிற்றுக்குள் மஞ்சள் நிறப் பதார்த்தம் காணப்பட்டது. அது பீச் பழமாக இருக்கலாம். கொலையாவதற்கு முன் ஒரு மணி நேரத்துக் குள்தான் பீச் பழம் அவள் வயிற்றுக்குள் வந்திருக்க வேண்டும்!'

என்று பிரேத பரிசோதனை செய்த டாக்டர் குறிப்பிட்டிருந்தார்.

"மாட்டின்!" என்று கூவினார் ஜேம்ஸ். "புதிர் முடிச்சின் நுனி கைக்கு கிடைத்து விட்டது" என்றார் குழந்தைபோல துள்ளிக் கொண்டே ஜேம்ஸ்.

** **

பமேலா தன் ஆடைக்குள் புகுந்து கொண்டு. "முரட்டுப் பலத்தை குறைத்துக் கொள் பாற்றிக். மூச்சுத் திணறுகிறது!"

என்றாள். பாற்றிக் சிரித்துக் கொண்டே கண்ணாடி பார்த்து தலை சீவிக் கொண்டு, பமேலாவை முத்தமிட்டுவிட்டு, விடைபெற்று வெளியே சென்று, விசில் அடித்துக் கொண்டு நடந்தபோது, நிழலாய் தொடர்ந்தது பொலிஸ் உளவுப் பிரிவு.

(திருப்பங்கள் அடுத்த வாரம்)

# ஹலோ டாக்டர்

"வாருங்கள். அதிக நேரம் காத்திருக்க வைத்து விட்டேனா? மன்னித்துக் கொள்ளுங்கள்!"

"பரவாயில்லை, நோயாளியிடம் ஏதோ சூடு பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்களே டாக்டர். எங்காவது தாக்குதலா?"

"சேச்சே, சூடு வைத்துக்கொள்ளும் சிகிச்சை முறை பற்றி விளக்கிக் கொண்டிருந்தேன்."

"என்ன, புதிய சிகிச்சை முறையா டாக்டர்?"

## பிடிப்போ இது சுளுக்கோ

"இல்லையில்லை; பழைமையான சிகிச்சை முறைதான். சூடான தண்ணீரை போத்தலில் அடைத்து காயம்பட்ட பகுதியில் ஒத்தடம் கொடுப்பதைப் பார்த்திருப்பீர்கள். சுடு தண்ணீரில் துணியைப் பிழிந்து ஒத்தடம் தரும் முறையும் உண்டு. இதையெல்லாம் வீட்டிலேயே செய்யலாம். நவீன மருத்துவ முன்னேற்றத்தால் வெப்ப சிகிச்சைக்கும் நவீன கருவிகள் வந்துவிட்டன."

"எவ்வாறான நோய்களுக்கு வெப்ப சிகிச்சை உதவுகிறது என்று சொல்லுங்கள் டாக்டர்?"

"கை, கால், தோள், கழுத்து, இடுப்பு போன்ற பகுதிகளில் தசைப் பிடிப்பு, நரம்பு முறுக்கிக் கொள்வது போன்றவை ஏற்படுவது சகஜம். இதே போல அடி வயிற்றிலும் இழுத்துப் பிடித்துக் கொள்ளும். அதற்கெல்லாம் வெப்ப சிகிச்சையை வீட்டிலேயே செய்யலாம். சூடான நீரை தோல்பையில் நிரப்பியும் வயிற்றுக்கு ஒத்தடம் கொடுக்கலாம். எலும்பு சேரும் இடங்களில் மூட்டு வலி ஏற்பட வாய்ப்புண்டு. அதனை வெப்ப சிகிச்சை போக்கிவிடும்"

"சில சமயங்களில் இரத்தமும் கட்டிவிடுமல்லவா டாக்டர், அதற்கும்....?"

"வெப்ப சிகிச்சை நிச்சயம் உதவும். இரத்தம் கட்டிய இடத்தில் ஒத்தடம் கொடுக்கும் போது இரத்தக் கட்டி கரைந்து விடுகிறது. இரத்த ஓட்டம் சீராகிவிடும். வெப்ப சிகிச்சையோடு உடற்பயிற்சியும் செய்து வந்தால் தசை, நரம்புப் பிடிப்புக்கள் தானாகவே சரியாகிவிடும்."

"உங்களிடம் வரவேண்டிய தேவை இருக்காது என்று சொல்லுங்கள். நஷ்டம்தான் உங்களுக்கு."

"சாதாரண தசைப்பிடிப்பு, சுளுக்கு போன்றவற்றுக்கு வீட்டில் வைத்தே வெந்நீர் ஒத்தடம் தரலாம். பெரியளவில் தசைப் பிடிப்பு, நரம்பு இழுத்துக் கொள்வது, இரத்தக் கட்டி ஏற்படுவது போன்ற பாதிப்புக்களுக்கு டாக்டரிடம் காண்பிக்க வேண்டும்."

"உங்கள் உதவியும் தேவை என்கிறீர்கள். விடமாட்டீர்களே! சரி டாக்டர், வெப்ப சிகிச்சையை எவ்வாறான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தக் கூடாது என்றும் விதிகள் இருக்குமல்லவா?"

"விபரம் தெரிந்த ஆள்தான் நீர். சொல்கிறேன். இரத்தக் கட்டியை கரைக்க டாக்டர் மருந்து தந்துள்ள போது, டாக்டரின் ஆலோசனை இல்லாமல் வெப்ப சிகிச்சை செய்யக் கூடாது."

"செய்தால்?"

"இரத்தக் குழாய் விரிந்து அதிக இரத்தப் போக்கு ஏற்படலாம். தோல் பகுதியில் உணர்வு இல்லாத இடத்தில் வெப்ப சிகிச்சை கூடாது. கர்ப்பிணிப் பெண்களுக்கு வயிற்றில் தசைப் பிடிப்பு ஏற்பட்டால் ஒரு போதும் வெப்ப சிகிச்சை செய்து விடாதீர்கள். கெண்டைக்கால் பகுதியில் இரத்தம் கட்டியிருந்தால், அங்கு வெப்பத்தைக் காட்டும்போது இரத்தக் கட்டி அங்கிருந்து



நகர்ந்து வேறு பகுதிக்குப் பரவும் வாய்ப்பு உண்டு. எனவே டாக்டரின் ஆலோசனை கேட்பது நல்லது."

"வயிற்றுவலியைப் போக்கவும் வெந்நீர் போத்தல் ஒத்தடம் கொடுக்கலாமா டாக்டர்?"

"கொடுக்கலாம். மனைவி ஒத்தடம் தரும்போது 'ஆஹா சுகம்' என்று தூங்கி விடக்கூடாது. அதிக வெப்பம் பாதிப்பைத் தரும்."

"முதுகுப்பிடிப்பு எனக்கிருக்கிறது டாக்டர். சுடுநீர் குளியல் நல்லதா?"

"நல்லதுதான். அதற்கும் தீரா விட்டால் வாருங்கள். கவனிக்கிறேன்."

"பிடிப்பு, சுளுக்கு என்றவுடன் வயதானவர்களின் ஞாபகம் வருகிறது. அவர்களும் உடற்பயிற்சிகளை மித மாகவென்றாலும் செய்து வந்தால் பிடிப்புக்கள் வராதல்லவா டாக்டர். வயதாகிவிட்டால் 'செக்ஸ்' கூடாதா டாக்டர்?"

"யாசீர் அரபாத்துக்கு எத்தனை வயது? வாரிசை உருவாக்கி விட்டார் பார்த்தீர்களா? மனம் உண்டானால் இடமுண்டு. நீங்கள் சொன்னது போல உடலை பயிற்சி கொடுத்து அடிக்கடி புதுப்பித்துக் கொண்டிருந்தால் அறுபதிலும் இளமைதான். மருத்துவ ரீதியாகவும் அதில் ஒரு தவறும் இல்லைப் போதுமா?"

"போதும் டாக்டர்.வருகிறேன்."

# இந்த வாரச் சூடு

## அதற்காக இப்படியா? சப்பாத்தும் சாப்ரேயும்

இந்தியாவில் தற்போது சூடு கிளப்பியிருக்கும் சமாச்சாரம் ஒரு விளம்பரப் புகைப்படம் தொடர்பானது.

நயினா சஹானி கொலைக்குப் பிறகு பம்பாயில் சுவாரசியமான சர்ச்சை இதுதான்.

சர்ச்சைக்குரிய சம்பவத்தின் சுருக்கம் இதுதான்.

பம்பாயின் பிரபல மொடல் அழகி மது சாப்ரே. மொடலிங் செய்வது எப்படி என்பதையெல்லாம் இலண்டனில் போய் விலாவாரியாகப் படித்துவிட்டு வந்தவர்.

"நிர்வாணமாக நடிக்கவும் தயார்"

என்று பேட்டி கொடுத்து சர்ச்சையில் மாட்டிக் கொண்டு திணறியதுதான் முதல் அனுபவம்.

விளம்பரப் படங்களில் நடித்து கை நிறையச் சம்பாதித்த மதுவுக்கு காதல் விவகாரத்தில் மட்டும் தொடர்ச்சியான தோல்விகள்.

1992 இல் இந்திய அழகுராணிப் பட்டம் கிடைத்தது. உலக அழகிப் போட்டியில் மூன்றாவது இடம் கிடைத்தது. அதனால் மது சப்ரேக்கு மவுசு ஏறியது.

காதல் தோல்விகளால் ஏற்பட்ட காயங்களை மெல்ல மெல்ல ஆற்றிக் கொண்டு தீவிர மாடலிங்கில் குதித்தார் மது சப்ரே.

அப்போதுதான் இன்னொரு விபத்து. காதல் விபத்து! மாடலிங் துறையில் வசீகர இளைஞனாக இருந்த மிலிந்த் சோமன் மதுவைக் கவர்ந்துவிட்டார். இருவரும் நெருக்கமானார்கள்.

இவர்களது நெருக்கத்தை பயன்படுத்திக் கொண்டன விளம்பரப் படம் எடுக்கும் கம்பனிகள்.

இருவரும் நெருக்கமாக அணைத்துக் கொண்டு நிற்பது போன்ற காட்சிகளை கமராக்களால் சுட்டுத் தள்ளினார்கள். மதுவும், சோமனும் தமது நெருக்கத்தை கமராக்களுக்குக் காட்டுவதில் தயங்கவேயில்லை.

அதனால் துணிச்சலான விளம்பர நிறுவனமொன்று இருவரையும் நிர்வாணமாக்கி புகைப்படம் எடுத்துவிட்டது.

'ஃபினிக்ஸ்' என்னும் சப்பாத்து விளம்



பரத்திற்கு இருவரும் கொடுத்த அந்த 'போஸ்' தான் இப்போது சூடான சர்ச்சைகளை கிளப்பிவிட்டது.

இருவரும் தமது நிர்வாண உடலில் மலைப்பாம்பை மட்டுமே போட்டுக் கொண்டு எதிரெதிரே நின்று கட்டியணைத்துக் கொண்டிருந்தார்கள். இருவரது கால்களிலும் ஃபினிக்ஸ் சப்பாத்து.

பிரபல பத்திரிகை ஒன்றில் அந்தப் படத்தோடு விளம்பரம் வர, வெகுண்டெழுந்தன மகளிர் அமைப்புக்கள்.

மகளிர் அமைப்பொன்று ஊர்வலமாகப் போய் மதுசாப்ரேயின் வீட்டிற்குப் போய் சேலைகளை அன்பளிப்புச் செய்தது.

மது வீட்டில் இல்லை, எனவே அவரது தந்தையிடம் சேலைகளை ஒப்படைத்து, "மகளிடம் கொடுங்கள் தாராளமாகக் கட்டிக் கொள்ளட்டும்!" என்று சொல்லிவிட்டு திரும்பி விட்டார்கள்.

மகாராஷ்டிரா மாநில முதல்வரும் சீறியிருக்கிறார். சர்ச்சைகள் தீவிரமாகியதால் மது சப்ரேயும், அவரது காதலன் மிலிந்த்சோமனும் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர்.

"நாங்கள் இருவரும் காதலர்கள். விரைவில் திருமணம் செய்யப் போகிறோம். எனவே நிர்வாணமாகப் போஸ் கொடுத்ததில் என்ன தவறு?" என்று இருவரும் நீதிமன்றத்தில் வெகு அலட்சியமாக கேள்வி தொடுத்தனர்.

இருவரையும் பிணையில் விடுவித்திருக்கிறார் நீதிபதி.

இத்தனை சர்ச்சைக்கும் காரணமான விளம்பர நிறுவனத்திடம் சிலர் கேட்டார்கள். 'சப்பாத்து விளம்பரத்திற்கு நிர்வாணப் போஸ் தேவைதானா?'

"தேவைதான். மலைப்பாம்பை உடலில் அணிந்திருப்பவர்கள் போல் பயமற்றவர்கள் 'ஃபினிக்ஸ்' சப்பாத்து அணிபவர்கள். மலைப்பாம்பை அணிந்துள்ள ஜோடியின் தோல் போல உறுதியானது 'ஃபினிக்ஸ்' சப்பாத்தின் தோல் என்பதன் அடையாளமே அந்த விளம்பரப் புகைப்படம்" என்கிறது விளம்பர நிறுவனம்.

மது சாப்ரேயும் வருத்தப்படவேயில்லை. 'இதில் என்ன தவறு' என்கிறார். மிலிந்த் சோமனோ "மது சாப்ரேமீது எனக்குள்ள காதலை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் அவை. விரும்பாவிட்டால் பார்க்காமல் இருப்பதுதானே. கூர்ந்து கவனித்ததால்தானே குதிக்கிறார்கள்" என்கிறார்.




ஒட்டகச் சிவிங்கியாருக்கு ஜலதோஷம். "அடடடடே....என் செல்லச் சிவிங்கியாருக்கு ஜலதோஷமோ, எங்கே மூக்கைக் காட்டு" என்று கைக்குட்டையெடுத்து கரிசனையாடு துடைத்து விடும் அழகி ஜோன்பேர்கெஸ்.

அவுஸ்திரேலியாவின் தலைநகர் 'சிட்னி'யில் 'ரொறொங்கோ' மிருகக் காட்சி சாலையில் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சி இது. அழகியின் அன்பை குத்தகை எடுத்துக் கொண்ட சிவிங்கியாருக்கு ஆறு வயது.

# ஒரே ஒரு குட்டி மட்டும்



இது ஒரு வித்தியாசமான குரங்கு. நம் நாட்டிலெல்லாம் அதிகம் காண முடியாது. காண வேண்டும் என்று ஆசையிருந்தால் ஆபிரிக்காவுக்குப் போக வேண்டும். 'சாவன்னா பபூன்' என்று இதனை அழைப்பார்கள். 1 1/2 அடி முதல் 3 1/2 அடிவரை வளரும். இவற்றில் ஆண் சாவன்னா பபூன்கள் நல்ல புஷ்டியாக இருக்கும். எடை, 55 இறாத்தல் வரை. பெண் சாவன்னா பபூன்கள் சற்று நோஞ்சான்கள், 26 முதல் 30 இறாத்தல்தான். இனப் பெருக்கத்தில் ஒரு சோம்பல். ஒரே பரு குட்டிதான ஈனும். தாவரங்களோடு, சிறிய விலங்கு கள் மாட்டினாலும் விரும்பிச் சாப்பிடும்.

# இந்த மானைப் பாருங்கள் அழகு



துள்ளியோடும் சாதாரண மான்கூட வியப்பை நம் மனதில் அள்ளிப்போடும். ஆனால், படத்தில் இருப்பதுவோ வெள்ளை நிற மான். வெள்ளை நிறத்தில் மான் இருப்பது அபூர்வம். ஜப்பான் நாட்டில் "வெள்ளை மானை கடவுளின் தூதுவர்" என்று அழைப்பார்கள். அந்தளவுக்கு காண அரிதான மான். வெள்ளை மான். இதன் மூக்கு மட்டும் குங்கும நிறத்தில் அசத்தும். மானில் அழகு பெண்மான். அதனிலும் அழகு இந்த வெண் மான்.

## தகவல் பெட்டி

# கல்லறை -வாசிகளுக்கு கடிதம் போடலாமா?




கல்லறைக்கு யார்தான் கடிதம் போடுவார்கள். பின்னர் எதற்கு கல்லறை மத்தியில் ஒரு தபால் பெட்டி? பைத்தியத்தை அடக்கம் செய்தவர்களுக்கும் பைத்தியம் பிடித்திருக்குமோ? என்றெல்லாம் சந்தேகங்கள் வருவது நியாயம்தான்.

ஆனால், மன்னிக்க வேண்டும்; படத்தில் இருப்பது கல்லறையல்ல. உடலைப் புதைத்த இடத்தில் நினைவுக் கற்கள் நாட்டுவது தெரியுமல்லவா. அந்த நினைவுக் கற்களைத் தயாரித்து, பெயர் பொறித்துக் கொடுக்கும் தொழிற்சாலைதான் இது. நினைவுக் கற்களை செய்து அடுக்கிவைத்திருக்கிறார்கள். தொழிற்சாலை உரிமையாளரின் தபால் பெட்டிக்கு அருகில் அவற்றை அடுக்கி வைத்துத் தொலைத்துவிட்டார்கள், அதனால்தான் அடுக்கடுக்கான சந்தேகங்கள் வந்து தொலைத்துவிட்டன.



# அட. ராசாவே இது தேவையா?

'டைனோசோர்ஸ்' ஒன்றை கம்பியூட்டர் மூலம் உருவாக்கி 'ஜு" ராசிக் பார்க்' படத்தில் ஒரு கலக்குக் கலக்கினார்கள் அல்லவா. அமெரிக்காவில் உள்ள மியாமி சயன்ஸ் மியூசியத்தில் கம்பியூட்டர் மூலம் இராட்சத எறும்பொன்றை உருவாக்கியிருக்கிறார்கள். அமெரிக்க விஞ்ஞானிகளது ஆராய்ச்சிக்காகவே இந்தத் தயாரிப்பு. சிற்றெறும்பின் தொல்லையே தாங்க முடியாது, அட....ராசாவே இராட்சத எறும்பும் வேறு தேவையா? பயப்படாதீர்கள் இந்த எறும்பு குறும்பெதுவும் செய்யாது. கடிக்கவும் மாட்டாது.

# சின்ன நிலம் போதும்



சாதாரண விமானங்களுக்கும், சண்டை விமானங்களுக்கும் தரையில் இறங்குவதற்கு நீண்ட ஓடு பாதை தேவை. அதை மாற்றியமைத்தால் என்ன? நான்கு ஐரோப்பிய நாடுகள் கூட்டுத் தயாரிப்பில் இறங்கி வெற்றியும் பெற்றுவிட்டன. பிரிட்டன் விமான தளத்தில் குறைந்த நீள ஓடு பாதையில் இறங்கியது இந்தப் புதுத் தயாரிப்பு. 'யூரோஃபைட்டர் 2000.' என்று இந்த யுத்தவிமானத்திற்கு பெயரிட்டுள்ளார்கள், விமானத்தின் பின்புறம் தெரிகிறது பாருங்கள் பாரசூட், அதுதான் காற்றை தடுத்து குறைந்த நீள ஓடுபாதையில் விமானம் இறங்க உதவி செய்கிறது. யுத்த விமானங்களும் நாளொரு மேனி, பொழுதொரு ரகமாக உற்பத்தியாகிக் கொண்டுதான் இருக்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com

# சினிவிசி

## முதன் முதலாக ஜோடி சேருகிறார் ரோஜா பெ... பெரிய்ய்ய்ய மீசையோடு பிரபு!

பிரபுவோடு முதன் முதலாக ரோஜா ஜோடி சேரும் படம் 'பரம்பரை'. 'நாட்டாமை' வெற்றிப் படத்தின் கதை-வசனத்தை உருவாக்கிய ஈரோடுசவுந்தர் கதை-வசனம் எழுதுகிறார். இயக்கப் போவது கே.எஸ். ரவிக்குமார். இவரும் நாட்டாமை இயக்குநர். தற்போது ரஜினியை வைத்து 'முத்து'வை இயக்கி வருகிறார். பிரபுவை வைத்து 'பெரிய குடும்பம்' படத்தையும் இயக்கி முடித்துள்ளார். 'பரம்பரை' படத்திற்காக பெரிய மீசையோடு நடிக்கப்போகிறார் பிரபு. 'நாட்டாமை' போல 'பரம்பரை'யும் சூப்பர் ஹிட்டாகும் என்று சொல்கிறார் கே.எஸ்.ரவிக்குமார்.

படத்தைத் தயாரிப்பது கே.பி.பிலிம்ஸ். 'சின்னத்தம்பி' படத்தை தயாரித்ததும் இந்த நிறுவனம் தான்.

இதே நிறுவனம் சத்யராஜ்-சவுந்தர்யா நடிக்கும் 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்' படத்தையும் தயாரித்து வருகிறது. குங்குமப் பொட்டுக் கவுண்டரில் பெரிய பொட்டோடு நடிக்கிறார் சத்யராஜ். கே.பி.பிலிம்ஸ் உரிமையாளர் பாலு, சத்யராஜ் ரசிகர் மன்றத் தலைவராகவும் இருக்கிறார்.

'பரம்பரை' படத்தின் தொடக்க விழா அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.




பிரபுதேவா-ரோஜா
படம்: ராசய்யா

## தீபாவளிக்கு 'மாமன் மகள்'

சத்யராஜ் நடித்து அடுத்து திரைக்கு வரப்போகும் படம் 'மாமன் மகள்'.

முதல் கட்டப் படப்பிடிப்பு முடிவடைந்துவிட்டது. கொடிய குணம், பணத்திமிர்! தலைகால் புரியாமல் ஆடுகிறார் மாமியார். அடக்கிக் காட்டுகிறான் மருமகன். 'மாமன் மகள்' படத்தின் கதைச் சுருக்கம் அதுதான். திமிர் பிடித்த மாமியார் வேஷத்தில் நடிப்பவர் ஜெயசித்ரா.

'மாமன் மகள்' படத்தில் இந்தியாவின் பஞ்சாப் மாநில 'பங்கரா' நடனமும் இடம்பெறுகிறது. 'பங்கரா' நடனம் ஆடுவதில் வல்லவரான குரு தாஸ்கான் இப்படத்தில் அறிமுகமாகிறார். தமிழ் படத்தில் அவர் நடிப்பது இதுவே முதல் முறையாகும்.

தீபாவளி தினத்தன்று திரையிடத் திட்டமிட்டு படப்பிடிப்புக்கள் சூடுபிடித்துள்ளன.



## காதோடு சொல்லுகிறோம்

'ச'வில் தொடங்கி 'கவி'யில் முடியும் பெயருடைய நடிகை ஒரு படத்தில் டவலை உடம்பில் சுற்றிக் கொண்டு நடித்தாராம். படப்பிடிப்பின் போது 'டவல்' கழன்று விழுந்துவிட்டது. கூட நடித்த 'ராம்' நடிகர் கதி கலங்கிப்போனார். படப்பிடிப்பு குழுவினரும் திறந்த வாய் மூடவில்லை. நடிகை மட்டும் அசரமேயில்லையாம். 'டவலை' எடுத்துக் கட்டிக்கொண்டு "நான் ரெடி" என்று படப்பிடிப்புக்கு தயாரானாராம்.

'தூரி' என்று பெயர் முடியும் நடிகை தற்போது வீட்டில் ஈயடித்துக் கொண்டிருக்கிறார். அமைதியான படையில் 'அல்வா' சாப்பிடும் காட்சி பிரபலமானதே தவிர, தான் மட்டும் பிரபலமாகவில்லையே என்று வருந்துகிறாராம். சமீபத்தில் இளம் ஹீரோக்களில் ஒருவரான 'வி' நடிகரைச் சந்தித்து அவரைப் பாராட்டும் சாக்கில் சான்ஸ் கேட்டாராம். புது நாயகிகள் உள்ள போது இவருக்கு அவர் ஏன் சிபாரிசு பண்ணப்போறார்?

மனியான நடிகைக்கு சென்னை ஒத்துவரவில்லையாம். பம்பாயில் என்றால் தினம் ஒரு விருந்துக் கேளிக்கை என்று பொழுது ஜாலியாகப் போகுமாம். ஒரு தினுசான கவலைதான்.

ஊர் என்று அவர் பெயர் ஆரம்பிக்கும். அந்த நடிகை கிசு-கிசுவில் சிக்காமல் இருப்பதற்காக கவனமாக இருக்கிறாராம். படப்பிடிப்பு இடைவேளையில் குழைந்து பேசும் நடிகைகளின் உத்திகளை எல்லாம் அவர் தவிர்த்து வருகிறாராம்.




பிரபுதேவா-நக்மா
படம்: காதலன்




பிரபுதேவா-நக்மா
படம்: லவ் பேட்ஸ்

## ஐஸ்வர்யா சம்மதம்

ஆடினகாலும், பாடின வாயும் சும்மா இருக்காது என்பார்கள். நடிகை ஐஸ்வர்யாவுக்கும் அது பொருந்தும். ஒரு குழந்தைக்கு அம்மாவாகி விட்ட ஐஸ்வர்யா மக்களாட்சி படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடியிருக்கிறார். சரவணன் நடிக்கும் அர்ஜுன் என்ற படத்தில் ஐஸ்வர்யாதான் ஜோடி. திருமணத்தின் முன்பே ஒப்புக் கொண்ட படம் அது. இடையிலே தடைபட்டு நின்றபடம் மீண்டும் எடுக்கப்படப் போகிறது. 'நடித்துத்தர சம்மதம்' என்று சொல்லி விட்டார் ஐஸ்வர்யா. அதோடு மீண்டும் நடிப்பில் குதித்தாலும் 'நோ' ஆச்சரியம்.

## நக்மா ராசி ஜோருதான்

'காதலன்' படத்தில் பிரபுதேவா-நக்மா ஜோடி ரசிகர்களை அசத்தியது பழைய கதை. அதே ஜோடி மீண்டும் அதைவிட உச்சமாக அசத்தப்போகும் படம் 'லவ்பேட்ஸ்' ராசய்யாவை அடுத்து திரைக்குவரும் 'லவ்பேட்ஸ்' படத்தில் வசூல் தூள் கிளப்பினால் பிரபுதேவாவுக்கு நக்மா ராசியில் நம்பிக்கை வந்துவிடும். தமிழில் நக்மாவுக்கு பிடித்த ஹீரோ பிரபுதேவாதானாம்.

நக்மா-பிரபுதேவா நெருக்கம் கமராவுக்குப் பின்னாலும் தொடரக்கூடாதே என்று ரொம்ப வருத்தப்படுகிறார் பிரபுதேவாவின் அப்பா சுந்தரம்.

ரசிக மகாஜனங்களுக்கு பிரபுதேவா-நக்மா ஜோடிதான் பிடிக்குமென்றால் சுந்தரமும் பிடிவாதத்தை தளர்த்த வேண்டியதுதான். பிரபுதேவாவோடு நடிக்கும் போது நக்மாவிடம் ஒரு ஈடுபாடு தெரிவதாக ரசிகர்கள் பலர் அபிப்பிராயம் சொல்கிறார்கள். உங்கள் அபிப்பிராயம் எப்படி? படங்களைப் பார்த்துச் சொல்லுங்கள் அன்றைவிட இன்று ஈடுபாடு அதிகம் போல தெரிகிறதோ? வாழ்க, வளர்க.

## அப்பாவே குரு

'இளையராகம்' படத்தில் ஜோதிசங்கர்-ஸ்ரீஷா ஜோடி எவ்வளவு இயல்பாக அணைத்துக் கொண்டிருக்கிறது பாருங்கள். பார்த்துவிட்டீர்களா? இனி ஒரு தகவல். ஸ்ரீஷாவை அணைப்பது எப்படி என்று ஜோதி சங்கருக்கு சொல்லிக் கொடுத்தது யார் தெரியுமா? ஜோதி சங்கரின் அப்பாதான். அவர்தான் இயக்குநர். அவரது பெயர் சிவாஜி பலராம். ஜோதி சங்கர் கூச்சப்பட்டுக் கொண்டிருக்க, "மகனே இதோ பாரடா" என்று ஸ்ரீஷாவைப் பிடித்து அணைத்து நடித்துக் காட்டினாராம் சிவாஜி பலராம். படத்தைப் பார்த்துச் சொல்லுங்கள், மகன் தேறிவிட்டார் தானே?!

## ஐஸ்வர்யா ராய்க்கு வலை வீச்சு

உலக அழகி ஐஸ்வர்யாராய் இந்திப் படமொன்றில் நடிக்க ஓ.கே. சொல்லிவிட்டார்.

அவரை தமிழில் கொண்டுவர பிரபல தயாரிப்பாளர்கள் வீசியிருக்கிறார்கள் வலையை! 'இந்தியன்' படத்தில் கமலுக்கு ஜோடியாக ஐஸ்வர்யாராயை நடிக்கவைக்க பலத்த முயற்சிகள் நடந்தன. அது தோல்வியாகிவிட்டது. இப்போது பிரபுதேவாவோடு ஐஸ்வர்யாராயை நடிக்க வைக்க முயற்சி நடக்கிறது. ஆனால் ஐஸ்வர்யா பிடிகொடுக்காமல் நழுவிக்கொண்டிருக்கிறார்.

## வெள்ளித் திரை நிலவரம்

'ராஜாவின் பார்வையிலே' (விஜய்-இந்திரஜா) 'மாயா பஜார் 1995' (ராம்கி-ஊர்வசி) ஸ்ரீட் பைட்டர் (விஜயசாந்தி) ஆகிய படங்கள் தமிழ்நாட்டில் திரைக்கு வந்து இரு வாரங்களை தாண்டிவிட்டன. 'இந்திரா' படம் நூறாவது நாளை தாண்டிவிட்டது. ஆனாலும், சென்னையில் மூன்று திரையரங்குகளிலும் பகல் காட்சியாகவே நூறு நாளை தொடமுடிந்தது. 'அசுரன்' 25 நாளைத்தாண்டி சென்னையில் நான்கு திரையரங்குகளில் மூன்று காட்சிகளாக ஓடிக் கொண்டிருக்கிறது. 'காந்தி பிறந்த மண்' 50 நாளை நோக்கி வெற்றி நடை போடுகிறது.



ஜெயராம்-வினிதா
படம்: புதுநிலவு

## அர்ஜுன் போட்டுள்ள தி...

வெகு அ...
இதனால் இருவருக்...

ஒன்றரைவருட காலம் வீட்டில் இருந்தே... மீண்டும் வருவான் அப்படிங்ற நம்பிக்கை... இருக்கவில்லை. நடிகர் அர்ஜுனைக் கா... தயாரிப்பாளர் அர்ஜுன் தான்! சொந்தப்படம் எடு... முயற்சிக்கு உறுதுணையாக இருந்து வெற்றியை... பேட்டியளித்திருக்கிறார் அர்ஜுன்.

தற்போது அர்ஜுன் நடித்துவரும் படங்கள் '...

"வருடத்திற்கு நான்கு படம் பண்ணலாம் என்... படங்களும் வேறு இயக்குநர்களின் படமாக இரு...

## இன்னொரு ஆட்...

தொட்டாச்சிணுங்கி படத்தில் ரேவதியோடு... ரகுவரன். கெட்ட பழக்கம் அனைத்துக்கும் ஒரு கும்பிடு... நடிப்பில் கவனம் செலுத்துகிறார் ரகுவரன். இது ... முறை) ரேவதியோடு நடிப்பதால் தனது திறமைக்கு... எடுத்துக் கொண்டு வெளுத்துக் கட்டுகிறாராம்... வெளியான பின்னர் மீண்டும் ஒரு ஆட்டம் ... சரிதான்.

## சரத் அரசியலி...



படிப்பகம்

www.padippakam.com


# மினி சினி

* தெலுங்கில் கமல் நடித்த சுபசங்கல்பம் (தமிழில் 'பாசவலை') வெற்றி பெற்றதைத் தொடர்ந்து கமல் நடித்து சென்ற வருடம் வெளியான 'நம்மவர்' தெலுங்கில் மொழிமாற்றப்படுகிறது.
* 'நாட்டுப்புறப் பாட்டு' 'வர்றாரு சண்டியர்' ஆகிய படங்களில் கிராமத்துப் பெண் வேடத்தில் நடித்துவரும் குஷ்பு, தற்போது புதிதாக ஒப்பந்தமான 'இரட்டை ரோஜா' படத்தில் பத்திரிகை நிருபராக நடிக்க இருக்கிறார்.
* பிரபுதேவா நடித்த 'காதலன்' இந்தியில் 'ஹம் ஸே ஹை முக்காபலா' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெளியாகி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பிரபுதேவா நடித்த 'இந்து' படத்தையும் இந்தியில் மொழிமாற்றப் போகிறார்கள்.
* 'நாட்டாமை' படத்தின் இசையமைப்பாளர் சிற்பி தற்போது 'சுந்தரபுருஷன்' 'இருவல்லவர்கள்' உட்பட ஆறு தமிழ் படங்களுக்கும், 'அரபிக் கடலோரம்' என்ற மலையாளப்படத்திற்கும் இசையமைத்து வருகிறார்.
* பம்பாய் திரையுலகில் இருந்து வந்து இந்தி நடிகைகள் தமிழில் நடித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் வினிதா, கஸ்தூரி, இருவரும் தமிழில் இருந்து 'நஜர்' என்ற இந்திப்படத்தில் நடிக்க இருக்கிறார்கள்.
* கே.டி.குஞ்சுமோன் தயாரிக்க, கதிர் இயக்கும் 'காதல் தேசம்' படத்திற்கு ஒளிப்பதிவு செய்கிறார் கே.வி.ஆனந்த். இவர் சென்ற வருடத்தின் சிறந்த ஒளிப்பதிவாளருக்கான தேசிய விருது பெற்றவர்.
* இயக்குநர் பாஸில் முதன் முறையாக சொந்தமாகத் தயாரிக்கும் மலையாளப் படத்தில், நடிக்கும் மம்முட்டிக்கு ஜோடியாக நடிக்க முதலில் ரவளியை ஒப்பந்தம் செய்தார். தற்போது ரவளியை நீக்கிவிட்டு அந்த வேடத்தில் பிரியாராமனை நடிக்க வைத்திருக்கிறார்.
* தமிழில் அறிமுகமாகி, கன்னடப்படங்களில் நடித்து வருகிறார் மோகனா. இவர் கன்னடத்தில் கதாநாயகியாக நடித்து அண்மையில் வெளியான 'பல் நன்மகா' வெற்றிகரமாக ஓடுவதால் மேலும் மூன்று புதிய கன்னடப் படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார்.
* விஜய் கதாநாயகனாக நடிக்கும் 'கோயம்பத்தூர் மாப்பிள்ளை' படத்தின் இயக்குநரான ரங்கநாத், எஸ்.ஏ.சந்திரசேகரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர்.
* இம்முறையும் கடைசியாக ஒரு ஹொலிவூட் செய்தி; பிரபல ஹொலிவூட் இயக்குநர் ஜோயல் ஷ்மேஷர் இயக்கிய 'பற்மான் ஃபோர் எவர்' (மூக்ஷி வுக்ஷ' சூ நிநி) என்ற ஆங்கிலப் படத்தின் முதல் வார வசூல் ஐந்து கோடியே இருபது இலட்சம் டொலர் (நம்மூர் மதிப்புப்படி சுமார் 260 கோடி ரூபாய்)


சங்கர்-ஸ்ரீஷா
இளையராகம்

## வழிகாட்டும் நக்மா

நக்மாவுக்கு இரண்டு தங்கைகள். (நக்மா மாதிரியே மூக்கும் முழியுமாக... இருப்பார்களோ?) இருவரையும் தன்னைப் போலவே ஆளாக்கிவிட, அதாவது நடிகைகளாக்கிவிட கங்கணம் கட்டியிருக்கிறார் நக்மா. அதனால் படப்பிடிப்புக்களுக்கு செல்லும் போது கையோடு உடன் பிறந்த சகோதரிகளையும் கூட்டிச் செல்கிறார். இயக்குநர்கள் பார்வை பட்டால்தானே வாய்ப்பு என்ற கதவு திறக்கும். தந்திர நக்மா!


ஷொட் 1

## மனிஷா கொலை? தயாரிப்பாளர் திகைப்பு

'இந்தியன்' படத் தயாரிப்பாளர் ஏ.எம்.இரத்தினத்துக்கு இதயத் துடிப்பே நின்றுவிடும்போல இருந்தது. நெஞ்சை பிடித்துக் கொண்டார். காரணம், பத்திரிகையில் வந்த ஒரு செய்தி! 'மனிஷா கொலை செய்யப்பட்டார்' என்றிருந்தது செய்தி. செய்தியைப் படித்தவருக்கு மனிஷாவுக்கு முற்பணமாக அள்ளிக் கொடுத்த இலட்சங்களின் கதியை நினைக்க நெஞ்சு பதறிவிட்டது. பின்னர் மீண்டும் செய்தியைப் படித்த போதுதான் உண்மை புரிந்தது. மனிஷா கொய்ராலா-நாகார்ஜுன் நடித்த 'கிரிமினல்' தெலுங்குப்படம் இந்தியில் தயாராகி வெளியாகி இருக்கிறது. அதன் விளம்பரத்தில் ஒரு வித்தியாசத்துக்காக, 'மனிஷா கொலை செய்யப்பட்டார், என்று போட்டிருந்தார்களாம். தலைப்பு பார்த்துவிட்டு நீங்கள் யாரும் துடிக்கவில்லையல்லவா?

## மொட்டை அடிக்கிறார் கமல்
### குருதிப் புனலையடுத்து இந்தியன்

இந்தியன்' படத்தில் மீண்டும் சில காட்சிகளில் நடித்துக் கொடுத்திருக்கிறார் கமல். 'குருதிப்புனல்' படத்தில் கமல் பிஸியாக இருந்தமையால் மனிஷா கொய்ராலா சம்பந்தப்பட்ட காட்சிகளை சுட்டெடுத்து விட்டார்கள். மனிஷா நடித்த காட்சிகள் என்பதால் சூடு கொஞ்சம் அதிகம்தான்.

'இந்தியன்' படத்திற்காக கமல் இரண்டு காரியங்களைச் செய்யப் போகிறார். மீசை வளர்ப்பது, மொட்டை அடிப்பது. அவைதான் அந்த இரண்டு காரியங்கள்.

தற்போது 'குருதிப்புனல்' படத்தில் மீசை இல்லாமல் நடிக்கிறார்.

'குருதிப் புனல்' படத்தில் தேசத் துரோகி பாத்திரம் நாசருக்கு. அவருக்கும் மீசையில்லை. கமலோடு சேர்ந்து தேசத்துரோகிகளை மடக்கும் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார் அர்ஜுன். அவருக்கு மட்டும் அழகான சின்ன மீசை இருக்கிறது. கமலும், அர்ஜுனும் பொலிஸ் அதிகாரிகளாக கூட்டணி சேர்ந்து நடிப்பதால் சண்டைக்காட்சிகள் தூள் பறத்துவது நிச்சயம்.

ஆங்கிலப் படங்களுக்கு நிகராக பயங்கர ரயில் விபத்துக் காட்சியொன்றும் படமாக்கப்பட்டுள்ளது. கதை-வசனம் கமல். ஒளிப்பதிவு ஸ்ரீராம் (நாயகன் புகழ்) என்பதால் 'குருதிப் புனல்' சக்கை போடும் என்று நம்பப்படுகிறது.

குருதிப்புனல் படப்பிடிப்பு முடிந்ததும் இந்தியனுக்காக நிஜ மீசை வளர்ப்பார் கமல்.


ஷொட் 2
மனிஷா கொய்ராலா
படம்: இந்தியன்

## ஹொலிவூட் கிசு-சிசு

ஹொலிவூட் திரையுலக சூப்பர் ஸ்டார்களில் ஒருவர் ஸ்வாஸ்னேக்கர். கட்டான உடல்! ஆவேசமான ஹீரோ என்று அங்கீகாரம். ரசிகைகளும் அதிகம். இதனால் ஸ்வாஸ்னேக்கரின் மனைவி மரியாவுக்கு ரசிகைகள் மீது ஒரு கண். 'என் புருஷன் தான் எனக்கு மட்டும் தான்' என்று உஷாராக இருக்கும் மரியாவை சமீபத்தில் வெறுப்பேற்றிவிட்டார் ஒரு ரசிகை.

ஒரு விடுதியில் ஸ்வாஸ்னேக்கரும் மரியாவும் உணவு உண்டுகொண்டு இருந்த ...பாது சட்டென்று வந்து ஸ்வாஸ்னேக்கரை முத்தமிட்டுவிட்டார் ஒரு ரசிகை. ஸ்வாஸ்னேக்கர் ...ரியமாக 'அவள் என் ரசிகை மட்டுமே' என்று சொன்னதை மரியா நம்பத்தயாராக இல்லை. ... இடையில் பனிப்போர் ஆரம்பித்திருக்கிறது. எங்கு போய் முடியுமோ?

...டங்கள்

...அர்ஜுன் ...யாருக்கும் ...ாற்றியது ...ற ஐடியா இல்லேன்னா இந்நேரம் அர்ஜுன் இந்த பீல்ட்ல இருக்க முடியாது. அந்த ...தேடித்தந்தது இயக்குநர் அர்ஜுன். இவ்வாறு மனம் திறந்து ஒரு சஞ்சிகைக்குப்

...கோட்டை' 'தாயின் மணிக்கொடி' 'ஆயுத பூஜை' 'ஆகஸ்ட் 15' 'குருதிப் புனல்' ...க்கிறேன். அதில் ஒரு படம் சொந்த இயக்கத்தில் வெளியாகும். மற்ற மூன்று ...ம்." என்று தனது திட்டத்தை சொல்லியிருக்கிறார் அர்ஜுன்.

## இரு ஜோடி

'மிஸ்டர் மெட்ராஸ்' படத்தில் பிரபுவுக்கு இரு ஜோடிகள் ஒருவர் சுகன்யா. இன்னொருவர் வினிதா. இருவரும் அக்கா தங்கையாக நடிக்கிறார்கள், யார் அக்கா? சுகன்யா தான்

...ம்


...நடிக்கிறார் ...ாட்டுவிட்டு ...னையாவது ...சவாலாக ...ரன். படம் ...ாவிட்டால்

## பெயர் கிடைச்சிடுச்சு

சத்யராஜின் மனேஜர் ராமநாதன் தயாரிக்க, பாரதிராஜா இயக்கத்தில் விஜயகாந்த் ரோஜா-ஜோடியாக நடிக்கும் படத்திற்கு 'செந்தமிழ் செல்வன் IAS' என்று பெயர்வைத்திருக்கிறார்கள். 'வார்க்கப்பட்ட பூமி', 'திருமலை நாயக்கர்', 'பொன்விளையும் பூமி' என்று பல பெயர்களோடு பலத்த பரிசீலனை நடத்தி இறுதியாக வைத்துள்ள பெயர்தான் 'செந்தமிழ் செல்வன் IAS'

...?

நடிகர் சரத்குமாரை தமது கட்சிக்குள் கொண்டுவர அ.தி.மு.க பிரமுகர்கள் ஆவலாக இருக்கிறார்கள். ஜெயலலிதாவும் சரத்மீது நல்ல அபிப்பிராயத்தோடு இருக்கிறார். சரத் மாட்டுவாரா? மாட்டுவார் போலத்தான் தெரிகிறது.


ஆர்னோல்ட் ஸ்வாஷ்னேக்கர்

## குஷ்புவின் முரட்டுக் கணவர்

'வர்றாரு சண்டியர்' படத்தில் பிரேம் ஜோடியாக குஷ்பு நடித்து வருவது தெரியுமல்லவா. முரட்டுச் சுபாவமுள்ள கணவரை மனைவி எப்படித் திருத்துகிறாள் என்பது தான் கதையாம். (தலைப்பைப் பார்த்து விட்டு ஏதாவது கற்பனை பண்ணியிருந்தா நாமா பொறுப்பு?)

### சரிதான்

தமிழ் நாட்டில் வன் முறைக் கலாச்சாரம் அதிகமாகி வருவதாக ரஜினி பேசியது சரிதானா என்று நாசரிடம் கேட்டார்கள் நிருபர்கள். 'ரொம்பச் சரி' என்றுவிட்டு நழுவிவிட்டார் நாசர்.



மனிஷா கொய்ராலா

## அவசரத்துக்கு ரஞ்சிதா

'தாயகம்' படத்தில விஜயகாந்த் ஜோடியாக ரஞ்சிதா நடிக்கிறார் என்று ஏற்கனவே கூறியிருந்தோமல்லவா. ரஞ்சிதாவுக்கு எப்படி வாய்ப்புக் கிடைத்தது தெரியுமா? தீபாவளி வெளியீடாக 'தாயகம்' படத்தை வெளியிட நினைத்தார் விஜயகாந்த். படப்பிடிப்பு தடங்கலின்றி தொடர்ந்து நடக்க வேண்டுமானால் பிஸியான நடிகைகள் சரிப்பட்டு வரமாட்டார்கள். ரஞ்சிதாதான் ஓய்வாக இருந்தார். அடித்தது சான்ஸ்.


படிப்பகம்

www.padippakam.com

## ஆடவர் ஸ்பெஷல்

# எப்படிப் பட்டவர் நீங்கள்?

## சுவாரசியமான சுய பரிசோதனை

ஒரு முத்தம், ஒரேயொரு முத்தம் போதும் உங்கள் குணத்தையறிந்து விடலாம் என்று ஜப்பானில் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த வித்தியாசமான ஆராய்ச்சியை 'ரிலேஷன்ஸ்' ஜப்பானிய எண்கணித நூல் வெளியிட்டிருக்கிறது. விபரத்தை உங்களிடம் தந்துவிடுகிறோம்.

அன்பிற்குரிய ஆண்களே! நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதை அறிய ஒரு அரிய தகவல் இது:

உங்கள் மனைவியை, அல்லது உங்கள் காதலியை அன்போடு முத்தமிட எந்த இடத்தை தெரிவு செய்வீர்கள்? பதிலை மனதில் வைத்துக் கொண்டு தகவல்களைப் பாருங்கள்.

□□

**நெற்றி:** மெல்லிய உதடுகள்- நீண்ட நாசி-அகன்ற விழி கொண்ட பெண்களை உங்களுக்கு மிகவும் பிடிக்கும். பெண்களுக்கு தனி சாமர்த்தியம் உண்டு. பெண்கள் மிகுந்த மரியாதை தரம் தெரிந்தவர்கள். வீட்டுப் பொறுப்பை பொறுப்போடு, சலிப்பின்றி நடத்துபவர்கள் பெண்கள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்கள் நீங்கள்.

□□

**உச்சந்தலை:** இனிமையானவர். பழகமட்டும் கண்டிப்பானவர். எதிர்பாராமல் நடந்த சிறு தவறைக்கூட சகிக்க முடியாதவர். அன்பானவர். குழந்தைகளில் கொள்ளை பாசம் உள்ளவர். உறவுகளிடம் தனிப் பிரியம் உள்ளவர்.

பெண்களை தெய்வமாக மதிக்கும் நீங்கள்: அவர்களை மென்மையானவர்கள்; குழந்தைத்தனம் உள்ளவர்கள்; அப்பாவிகள்; நல்லவர்கள்; சுயமாக ஒன்றுமே செய்யத் தெரியாதவர்கள் என அடிமனதில் நம்பிக்கை வைத்திருப்பீர்கள்.

புத்திசாலித்தனமான பெண்களை உங்களுக்கு அறவே பிடிக்காது. உங்களைக் கேட்காமல் எந்தப் பெண்ணும் செயற்பட முடியாது. அப்படிச் செய்தால் அவர்களுக்கு அதிகப் பிரசங்கிப் பட்டம் சூட்டிவிடுவீர்கள்.

ஆனாலும் நீங்கள் இரக்கம் உள்ளவர். உங்கள் காலடி வந்தவரை உயிர் கொடுத்தும் காப்பாற்றும் தனித்தன்மை உங்களிடம் உண்டு.



**இடுப்பு:** குழந்தை உள்ளம் கொண்டவர். லேசில் கோபம் வராது. வந்தால் உணர்ச்சி வசப்பட்டு எதிராளியைக் கடித்தும் குதறிவிடுவீர்கள். ஆனால் அடுத்த நிமிடம் மன்னிப்பும் கேட்பீர்கள்.

கள்ளம் கபடமற்ற பழகும் குணம் கொண்டவர். எவரையும் நம்பிவிடுவீர்கள். உங்களை எவர் ஏமாற்றினாலும் எவர்மீதும் கோபமே கொள்ளமாட்டீர்கள். தாய்போல அரவணைத்து-பாசமூட்டி-குழந்தையாய் பார்க்கும் மனைவியே உங்களுக்குத் தேவை.

**கழுத்து:** ஆளுமை உடையவர். உங்கள் முடிவே முடிவானதாக இருக்கும். மற்றவர்களின் சிறிய தவறுகளைக்கூட பெரியதாய் குறிப்பிடுவீர்கள். எந்தக் காரியத்தையும் மற்றவரை விட சிறப்பாகச் செய்து பேர் வாங்கத் துடிப்பவர் நீங்கள். எந்த வேலையும் உங்கள் கைபட்டால் தான் உங்களுக்குத் திருப்தியாக இருக்கும். அழகான; வசீகரமான உங்கள் பேச்சுக்கு கட்டுப்பட்டு நடக்கும் பெண்ணே உங்கள் காதலியாகவோ-அல்லது மனைவியாகவோ முடியும்.

□□

**புறங்கை:** அறிவு; ஆற்றல்; விவேகம் புத்தியுடையவர்; நீதி; நியாயம்; நேர்மை; கடமை இவைகள் உங்களின் உயிர் மூச்சு. கவிதையில் மன்னராகவும், கணிதம், விஞ்ஞானம் முதலியவற்றில் வல்லவராகவும் இருப்பீர்.

அழகான பெண்களைவிட அறிவுள்ள பெண்ணே உங்களுக்குத் தேவை. மனைவியே ஆனாலும் அவளின் அனுமதியின்றி அவள் அந்தரங்க விஷயங்களை அறிய முற்பட மாட்டீர்கள்.

உங்களை மற்றவர்கள் வெறுக்கிறார்கள் என்ற எண்ணம் உங்களிடம் என்றும் இருக்கும்.

□□

**கன்னம்:** கலை உணர்வு நிரம்பப் பெற்றவர் நீங்கள். இசை, ஓவியம் இவற்றில் அதிமிகு ஈடுபாடு இருக்கும்..

சோக்குப் பேர்வழி. எவருடனும் எளிதில் பழகிவிடுவீர்கள். விடுமுறை நாட்களை மிகவும் இன்பமாகவே கழிக்க விரும்புவீர். மறந்தும் அலுவலகப் பொறுப்புக்களை தலையில் போட்டுக் கொள்ளமாட்டீர்கள். மன்னிக்கும் ஆற்றலும், மறக்கும் குணமும் உங்களுக்கு உண்டு. எவர் எந்தத் துரோகத்தை உங்களுக்குச் செய்தாலும் 'மன்னிக்கவும்' என்ற ஒரு சொல்லால் உங்களை மாற்றி உங்கள் அன்பை வாங்கிவிடவும் முடியும்.

என்ன-உங்கள் விடயத்தில் ஜப்பான் கண்டுபிடிப்பு ஓ.கேயா?

தகவல்-திருமலை சுந்தரப்பிரியா.

# தனக்கு நிகரில்லாத தாய்ப்பால்!

* தாய்ப்பாலுக்கு மாற்று உணவே கிடையாது என்று கூறும் அளவிற்கு அது சிறந்த சத்துணவாகும்.
* குழந்தை வளர்ச்சியின் போது முதல் ஆறு மாதங்களுக்குத் தேவையான எல்லா ஊட்டச் சத்துக்களும் தாய்ப்பாலில் அடங்கி இருக்கின்றன.
* குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதால், தடிமன், நிமோனியா, வயிற்றுக் கடுப்பு போன்ற நோய்கள் ஏற்படாமல் தடுக்க முடியும்.
* தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு வலிப்பு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக் குறைவு.
* தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு ஆஸ்துமா, அலர்ஜி, சொறி போன்ற நோய்களும் எளிதில் வராது.
* தாய்ப்பாலில் உப்புச் சத்து குறைவாக இருப்பதால் அதைக் குடிக்கும் குழந்தைகளுக்கு எளிதில் ஜீரணமாகும்.
* தாய்ப்பால் அருந்துவதால் குழந்தையின் பற்கள் பிற்காலத்தில் சொத்தையாகாது தடுக்க முடியும்.
* தாயிடம் பால் குடிப்பதால் குழந்தையின் தாடைகள் வலுப்பெற்று முகம் பொலிவு பெறும்.
* குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்துவதால் உலகில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10 இலட்சம் குழந்தைகள் இறந்து போவதாக யுனிசெப் நிறுவனம் கூறுகிறது.
* பல நாடுகளில் தாய்ப்பால் கொடுக்கும் பழக்கம் பெண்களிடம் குறைந்து வருவதாகக் கணக்கெடுப்புக்கள் கூறுகின்றன.



* குழந்தைக்கு தேவைப்படும் அளவுக்கு பால் கொடுக்க அநேகமாக எல்லாத் தாய்மார்களாலும் முடியும் என்று ஆராய்ச்சிகள் மூலம் முடிவு செய்யப் பட்டுள்ளது.
* தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்குத் தேவையில்லாமல் சதை போடாது.
* குழந்தையின் சரியான எடை வளர்ச்சியடைய தாய்ப்பால் உதவுகிறது.
* தாய்க்குச் சற்று உடல் நலக் குறைவு ஏற்பட்டாலும், குழந்தைக்குப் பால் கொடுக்கலாம்; பாதகமில்லை.
* குழந்தைக்குச் சற்று உடல் நலக்குறைவு ஏற்படும்போது கண்டிப்பாகத் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். ஏனெனில், நோய் எதிர்ப்புச் சக்தி தாய்ப்பாலில் நிறைய இருக்கிறது.
* ஒரு தாய் கருவுற்றிருக்கும் போது, தனது குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கலாம். அதனால் குழந்தைக்கோ, தாய்க்கோ, அல்லது கருவில் இருக்கும் சிசுவுக்கோ எந்த ஆபத்தும் வராது.
* தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளின் தலைமுடி, தோல், நகங்கள் பளபளவென்று ஆரோக்கியமாக இருக்கும்.
* கண்பார்வை மங்காமல் இருக்கும். இப்போது சொல்லுங்கள் தாய்ப்பாலுக்கு நிகருண்டோ?

# லேடீஸ் ஸ்பெஷல்

## அசத்தும் நடிகையின் அழகு இரகசியம்

**பம்பாய் படவுலகில் அசத்திக் கொண்டிருப்பவர் நடிகை ஜுகி சாவ்லா. நடிகைகள் வயது இரகசியத்தை மட்டும்தான் சொல்ல மாட்டார்கள். அழகு இரகசியத்தை சொல்லி விடுவார்கள். ஜுகிசாவ்லா சொன்ன அழகு இரகசியத்தை அறியலாமே!**

**• நீங்கள் அதிக அளவு மேக்கப் செய்வது பற்றிக் கூறமுடியுமா?**

நான் அதிகமாக மேக்கப் செய்வதில்லை. அப்படிச் செய்தாலும் எல்லா நேரத்திலும் அப்படி இருக்க முடியாது. இப்படி அதிக அளவு மேக்கப் செய்வதால் தோல் பாதிக்கப்பட்டு உடல் நலக்கோளாறு ஏற்படலாம். ஆகவே தேவையான பகுதிகளுக்கு மட்டும் கொஞ்சம் அதிகமாக மேக்கப் செய்வது அந்தப் பகுதியை அதிக தெளிவாக, அதிக கவர்ச்சியாகக் காட்டும்.

**• இதற்காக நீங்கள் எப்படி உங்களை பராமரித்து வருகிறீர்கள்?**

ஒரு நடிகைக்கு அடிக்கடி தன் முகத்தை பராமரித்துக்கொள்வது மிக அவசியமாகின்றது. தியேட்டரில் டிக்கட் வாங்கி படம் பார்க்கிறார்கள் என்றால் முதலில் என்னுடைய முகத்தைத் தான் காண்கிறார்கள். ஆக, முதலில் அழகான முகம் வேண்டும். இதற்காக நான் தினமும் என் முகத்தைப் பராமரிக்கிறேன். மருந்து சம்பந்தமான சோப்பைத் தான் பயன்படுத்துகிறேன். தூய நீரில் முகம் கழுவுகின்றேன். தினமும் பத்து டம்ளர் நீர் அருந்துகிறேன்.

**• சாப்பாட்டு விஷயத்தில் நீங்கள் எப்படி?**

எண்ணைப் பொருள் குறைந்த, கொழுப்புச் சத்து குறைந்த பொருட்களையே உணவாகக் கொள்கிறேன். அதிக நேரம் வேகவிடாத பக்குவத்தில் காய்கறிகளை சாப்பிடுவேன். தவிர, நான் மீனும், கோழி இறைச்சியும் சாப்பிடுவேன்.

**• தினமும் முகம் கழுவும்போது எதைக் கவனிக்க வேண்டும்?**

முதலில் ஹேர்பல் சோப்பினைப் பயன்படுத்தி முகம் கழுவ வேண்டும். பிறகு முகத்திற்குத் தேவையான கிறீமைத் தடவ வேண்டும். இப்படித் தடவுவதால் முகத்திலுள்ள கிருமிகள் ஒழிக்கப்படுகின்றன. இப்போது மீண்டும் சோப்பினைப் போட்டு முகம் கழுவுவதால், முகம் சம்பந்தமாக எந்தப் பிரச்சனையும் இருக்காது.

**• உலர்ந்த சருமம், எண்ணைப் பொலிவுள்ள சருமம்-எது பொலிவானது?**

என்னைப் பொறுத்தவரை உலர்ந்த சருமம்தான் சரியானது. விட்டமின்கள் கலந்த உணவுவகைகளை சாப்பிடுவதால் உண்மையிலேயே தோல் பளபளப்பாகிறது. இந்த நிலையில் விட்டமின் 'ஏ' தோலின் நிறத்தை மெருகூட்டப்பயன்படுகிறது. இது கரட், வாழைப்பழம், ஈரல் போன்றவற்றில் இருக்கிறது.



-ஜுகி சாவ்லா-

விட்டமின் 'பி' சருமத்தை உலர வைக்கும். முட்டை, பால், இறைச்சி, மீன், மற்றும் பருப்பு வகைகளில் இது இருக்கிறது.

விட்டமின் 'சி' தோலின் மெருகை எப்போதும் ஒரே மாதிரியாக வைத்திருக்க உதவுகிறது. ஒரேஞ்ச், எலுமிச்சம் பழம் போன்றவற்றில் கிடைக்கிறது.

விட்டமின் 'ஈ' தோலை மிகவும் மென்மையாக வைத்துக்கொள்ள உதவுகிறது. இது உருளைக்கிழங்கு, மீன், கோதுமை உணவுகளில் உள்ளது.

# எப்படி எப்படி சேமிப்பது எப்படி?

* நமது வருமானத்தில் ஒரு சதவீதமாவது மாதத்தின் கடைசி நாளில் நம் கையில் இருக்க வேண்டும்.
* நமது வருமானத்தில் இருபது சதவீதமாவது நம்மால் சேமிக்கப்பட வேண்டும்.
* மாதத்தின் முதல் செலவு சேமிப்பாகத்தான் இருக்க வேண்டும்.
* நாம் செலவு செய்வதை சரியாகக் கணக்கு எழுதி, தேவையற்ற செலவுகள் எவை எவை என்று கண்டு பிடிக்க வேண்டும்.
* நமக்குத் தேவையான பொருட்களை வாங்கவென்று தனி 'லிஸ்ட்' ஒன்று தயார் செய்து கொண்டு, கடைக்குச் செல்ல பழகிக் கொள்ள வேண்டும்.
* நமக்குத் தேவையான பொருட்களை நாமே நேரில் சென்று வாங்க வேண்டும்.
* வரவு-செலவுத் திட்டம் ஒன்று தயார் செய்து அதன்படி நடக்க வேண்டும்.
* எந்தக் கடையிலும் கடன் வைக்கக் கூடாது.
* எந்தப் பொருளையும் தவணை முறையில் வாங்குவது லாபகரமானது அல்ல.
* முக்கியமாக, நாம் செலவழிக்கும் ஒவ்வொரு காசுக்கும் கணக்கு இருக்க வேண்டும்.

# சிக்கனமான அவசிய யோசனைகள்

* கூந்தல் நல்ல வளர்ச்சி பெறாத நிலையில் உள்ள பெண்கள், தங்கள் உணவில் கொழுப்புச் சத்து நிறைய இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். என்றாலும் கொழுப்புச் சத்து எல்லை மீறினால் உடம்பு பெருத்துவிடும்.
* பதினாறு வயதிற்கு மேல் இருபத்தைந்து வயது வரையில் தான் பெண்களுக்கு தலைமுடி வேகமாகவும், அடர்த்தியாகவும் வளரும். பொதுவாக ஒரு இளம் பெண்ணுக்கு 1 இலட்சத்து 30 ஆயிரம் முடிகள் தலையில் இருக்கும். அதற்குக் குறைந்தால் ஆரோக்கியமான கூந்தல் இல்லை என்றே அர்த்தம்.
* கர்ப்பமாக இருக்கும் பெண்கள் அதிகம் சாப்பிடுவதைவிட, சத்து நிறைந்த உணவைச் சாப்பிடுவதுதான் நல்லது. வயிறு புடைக்க உண்டால் கருவில் வளரும் குழந்தையின் நலன் பெரிதும் பாதிக்கும்.
* தாய்ப்பால் கிடைக்காத குழந்தைகளுக்கு 15 அவுன்ஸ் பாலும், 10 அவுன்ஸ் நீரும் சேர்த்து அத்துடன் மூன்று அல்லது நான்கு தேக்கரண்டி தேனையும் கலந்து கொடுத்தால் குழந்தைகளுக்கான நல்ல சத்துணவாக இருக்கும்.
* பவளமல்லிகைப் பூவைக் கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து, அந்தச் சாற்றை வெயிலில் வைத்தால் சாந்து ஆகிவிடும். அதைக் கொண்டு நெற்றியில் திலகமிட்டுக் கொள்ளலாம்.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 01

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* இந்த வாரம் முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.


## சமைப்போம் சுவைப்போம்

### தீயல்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| சிறிய புடலங்காய் | - 1 |
| முருங்கைக்காய் | - 1 |
| கத்தரிக்காய் | - 1 |
| உருளைக்கிழங்கு | - 1 |
| தக்காளிப்பழம் | - 1 |
| தேங்காய் | - பாதி |
| மிளகாய் வற்றல் | - 3 |
| கொத்தமல்லி | - 1 தேக்கரண்டி |
| மிளகு | - 6 |
| மஞ்சள் தூள் | - 1 தேக்கரண்டி |
| புளி | - ஒரு பாக்களவு |
| கறிவேப்பிலை | - சிறிது |
| கடுகு | - 1 தேக்கரண்டி |
| வெந்தயம் | - 1 தேக்கரண்டி |
| உப்பு | - தேவைக்கேற்ப |

**செய்முறை**

புடலங்காய், முருங்கைக்காய், கத்தரிக்காய் போன்றவற்றையும் தக்காளி, கறிவேப்பிலையையும் முதலில் கழுவிக் கொள்ள வேண்டும். தேங்காயைத் துருவிக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் ஊற்றி கொதித்ததும் மிளகாய் வற்றல், கொத்தமல்லி, மிளகு ஆகியவற்றைக் கருகாமல் வறுத்து தேங்காய்த் துருவலைச் சேர்த்துச் சற்றுக் கரகரப்பாய் அரைக்கவும். காய்கறிகளை ஒரே அளவில் துண்டுகளாக வெட்டவும். புளியை ஒரு கரண்டி தண்ணீரில் நனைத்து வைத்துக்கொள்ளவும். களிம்பேறாத, சற்று அடிகனமான பாத்திரத்தை அடுப்பிலேற்றி ஆழாக்கு தண்ணீர் விட்டு அடுப்பில் வைக்கவும். தண்ணீர் கொதிக்கும் பொழுது காய்கள், உப்பு இரண்டையும் சேர்க்கவும். தக்காளிப்பழத்தைத் துண்டுகள் செய்து காய்களுடன் கூட்டவும். காய்கள் சற்று வெந்தபின் புளி, அரைத்த விழுது ஆகியவற்றைக் கூட்டவும். சேர்ந்து கொதித்துச் சற்றுக் கெட்டியான பின் தீயலை அடுப்பிலிருந்து இறக்கி கறிவேப்பிலையைப் போட்டு, எண்ணெயில் கடுகு, வெந்தயம் போட்டுத் தாளிக்கவும்.

# எலிசபெத்தின் மறுபக்கம்

## சில சுவையான சங்கதிகள்

உலகப் புகழ் பெற்ற நடிகை எலிசபெத் டெய்லர். நடிகையல்லவா. எனவே அவரைப்பற்றிய கிசு-கிசு தகவல்கள், சம்பவங்கள் அடங்கிய புத்தகங்கள் இரண்டு வெளிவந்து அமோக விற்பனையாகிவிட்டன.

இரண்டாவதாக வந்த புத்தகத்தில் உள்ள சில விபரங்கள்.

எலிசபெத்தை முதல் படத்தில் அறிமுகப்படுத்திய இயக்குநர் "இவரது கண்கள் மிகவும் வயதான தோற்றத்தை காட்டுகின்றன" என்றாராம். (உண்மைதானா பாருங்கள்)

18 வயதில் முதல் திருமணம். 19 வயதில் விவாகரத்து. 20 வயதில் ஒரு குழந்தைக்கு அம்மா. 26 வயதில் விதவை. 39 வயதில் பாட்டி. இதுவரை மொத்தம் ஒன்பது திருமணங்கள்.

சமையல் செய்வதில் எலிசபெத் டெய்லர் பல சாகசங்களை செய்திருக்கிறார். ஒரு முறை தனது கையாலேயே ரொட்டி சுட்டு சாப்பிட ஆசைப்பட்டார். ரொட்டி சுட்டாரோ இல்லையோ பெரிய தீ விபத்தே ஏற்பட்டு விட்டது. மற்றொரு முறை ரஷ்ய தலைநகரான மொஸ்கோவில் தங்கியிருந்தார். கோழிக்கறி சாப்பிட ஆசை வந்துவிட்டது. தகரடப்பாவோடு எண்ணையில் போட்டு வறுத்துவிட்டார். இதனால் லண்டனில் இவர் படப்பிடிப்பில் கலந்துகொண்டபோது இவருக்குத் தேவையான உணவுகள் மியாமி கடற்கரை உணவு விடுதியில் இருந்து விமானத்தில் பறந்து வந்தன.



நாய்-பூனை என்று ஏகப்பட்ட பிராணிகளை வளர்க்கிறார். ஒரு வாத்து இவரது வீட்டில் எப்போதும் உலாவிக் கொண்டிருக்கும்.

இதுவரை 50 படங்களுக்கு மேல் நடித்துவிட்டார். எலிசபெத் டெய்லரால் விடவே முடியாத பழக்க வழக்கங்கள்: அடிக்கடி விவாகரத்து, மது, சில போதை மருந்துகள், கிளுகிளுப்பான நாவல்கள் மற்றும் வீடியோப் படங்கள். நாய்-பூனை, வாத்து.



படிப்பகம்

www.padippakam.com

## பொறுத்திருங்கள்!

அஞ்சலிலே அன்பினது ஆழம் கண்டேன்
"சித்தத்தைச் சிறைப்பிடித்த சிலையே நீதான்
சித்திரமுன் நினைவுவரின் மறுநாள் மட்டும்
நித்திரையே இல்லை" யென்று எழுதிவைத்தீர்!
நினைக்கையிலே எந்தனுக்கும் கவலை அத்தான்!

"எத்தனைநாள் உனைப்பிரிந்து இருப்பதென்று
எழுதிவைத்தீர்! எழிலேயுன் விழிவீச்சுக்குச்
சொத்தும் சுகம் ஈடாமோ? சொர்க்கம் நீதான்!
சொப்பனத்தில் எனையணைக்கும் மானே" யென்று,
முத்து முத்தாய் எனைப்புகழ்ந்து தீட்டிவைத்த-
முடங்கலை யான்பல தடவை படித்துப் பார்த்தேன்!

திருமணத்து முதலிரவில் என்னை நீங்கள்
தீண்டிய அவ்வேளையிலே; 'வியர்வை முத்து
அரும்பிவர மேனியெங்கும்' அத்தா னென்று
ஆவலுடன் உங்களைநான் அணைத்த தெல்லாம்,
திருமுகத்தில் தெளித்திருந்தீர்! திருப்தி கண்டேன்!
தீராத இச்சைகளைத் தூண்டிவிட்டீர்!

"வரும் 'தீபா வளி'யன்று இலங்கை நாடு,
வந்திடுவேன்" எனநீங்கள் எழுதிவைத்த-
கரும்பான செய்தியினால் களிப்ப டைந்தேன்!
கண்ணான காதலரே என்னைக்காண
வரும் வரைக்கும் பொறுத்திருங்கள்! எங்கள்தூய
வாழ்க்கையிலே எந்நாளும் வசந்தமுண்டு!

அ.கௌரிதாசன்-ஆலங்கேணி கிழக்கு.



## என்னடா இது....

ச்சீ....
தரித்திரம் புடிச்ச வாழ்க்கை
சரித்திரம் எழுதிக்
கொண்டிருக்கிறது.
▫▫
எழுதுவதற்கு
எங்கள் எலும்புகளும்
குருதியும்தான் கிடைத்ததா?
▫▫
அர்த்தமில்லாத
அவசரம்
என்ன செய்ய
மனசு மட்டும்
மௌனமாய்
ஆதங்கப்பட்டுக் கொண்டே
இருக்கிறது.
▫▫
சனியன்...
அந்த சொறி நாய்கூட
அலுத்து விட்டது
என்று
அழுத்திச் செல்கிறது.
என்னவென்று கேட்டால்
மனுஷ பொணங்கள
பார்த்துப் பார்த்தே
அதுக்கு மனம் கெட்டுப் போனதாம்
போதாதற்கு
நசிந்து போன மனுஷனின்
ரத்தத்தை
நக்கி நக்கியே
நாக்கு மரத்துப் போய்
விட்டதாம்.
▫▫
நெலமையைப்பாரு
எல்லாம்
பெறுமதியாகிப் போனது
மனித உசிருகள்
மட்டும்....

கிண்ணியா சபருள்ளா




## "பெண்மையின் இன்னொரு பக்கம்"

உதடுகளில்
அன்பைத்தடவி
வார்த்தைகளில்
காதலை வீசியவளே!
உன்
நெஞ்சுக்குள் எப்படி
தீ வளர்ந்தது?
••
கூரைகள்
சேமித்துவைத்த
பனித்துளிகள்
உன்
முகத்திரையில்
விழுந்ததும்
ஏன்
வெந்நீராய்
கொதிக்கின்றது?
••
மென்மையான
உன்
மேனியில்
முட்களின்
விதைகளை
எப்போது
விதைத்தாய்?
••
பூக்களை
அழித்துவிட்டு
காம்பின் மீது
கருணைகாட்டாதே...!

ஹெந்தளை நவா



## இரவுகளே சிறகுகளாய்.....

வானம் தொலைந்து போனது.
நிலவு பொலிவிழந்து
பக்கத்து வீட்டு வாசலில்
குந்திக்கொண்டது;
தென்றல் சுட்டது!

பஞ்சணை பற்றி எரிய
தரையில் படுத்தேன்.
நிலம்கூட என்னைத்
தள்ளிவிட்டது....!

ச்சே! இப்போதெல்லாம்....
என்னையாருமே புரிந்துகொள்வதில்லை-
அம்மாவும்தான்.....!
அவள்தானே எனக்குப்
படுக்கை விரித்தாள்...?
அதற்குள் எப்படி முட்கள்?
உதறிப் பார்த்தேன்
ஒரு முள்ளையும் காணவில்லை!

என் கண்களுக்குள் வந்த-சில
மின்மினிப் பூச்சிகளுக்கு
இரவுகளே சிறகுகளாய் மாறி....
18 வயதுகளில்
நான் உருண்டுகொண்டிருந்தேன்.....
தனிமையில்!!

எம்.சுரேஷ்



## தாய் மனசு

பட்டியில் கட்டுப்பட்டு
ஒரு பசு
கண்ணீர் வடிக்கிறது!
துள்ளித் திரிந்த
கன்றுக் குட்டியை
புலையர்கள்
கழுத்தில் கயிறுபோட்டு
இழுத்துப் போனதை
பார்த்ததால் பசு
கண்ணீர் வடிக்கிறது!

இன்னேரம்
கொலை செய்திருப்பார்கள்;
இறைச்சியைக் கூட
விற்று முடித்திருப்பார்கள்!
எலும்புத் துண்டுகளையும்
வயல் வெளிக்குள்தான்
போட்டிருப்பார்கள்;
மண்ணுக்கு உரம் சேர்க்க...!

கன்று
'அம்மா' என்றுதான்
கடைசியாக அழுதிருக்கும்!

பால்கொடுத்த வேதனை
மாறாத தாய்ப்பசு
இன்னமும்
கண்ணீர் வடிக்கிறது!

மாவை வரோதயன்.

## இரவே வராதே!

அந்திக்குள் புகுந்து
அஸ்தமிக்கும் பகல் பொழுது
இரவிடமிருந்து
விடைபெற்றுக் கொள்ள.....
வேட்டுச் சத்தங்கள்
வேள்வி நடத்தும்!



விடியலை நோக்கி
விழித்திருக்கும்
மனித மனம்
அமைதிக்குள்
ஆழ்ந்திருக்கும்!

ஒவ்வொரு நெஞ்சம்
வேட்டுக்களாய்
சத்தமின்றி அதிரும்!

அழுகை மறந்து...
உணர்வுகள் மரத்து...
உயிருள்ள பிணங்களாய்
தினம் தினம்......
விடியலை நோக்கி
விழித்திருக்கும்....!

கு.சுகந்தி-களுவாஞ்சிக்குடி

## காலம் மாறியது

அவர்கள் வந்தனர்;
வானம் வெளுத்துக் கிடந்தது;
அடுப்பங்கரையில் உறங்கிய பூனை
வேறிடம் பார்த்தது;
நாயுடன் சிநேகங் கொண்டது!
பின்னிப்பின்னி சோர்ந்த சிலந்தி
திருப்தியுடன் ஓய்வெடுத்தது.
கோட்டான்களும் கோழிகளும் ஆடிப்பாடின;
வெங்கார வெக்கையில் குளித்தன.
பின்னர் தென்றலும் வருடியது;
இலைகள் மீண்டும் சலசலத்தன;
வானில் உலாப்போகும்
நிலாப் பார்க்கும் காலம்
எட்டிப் பார்த்தது!
பட்டென கருந்திரள் மேகங்கள்-
அவர்கள் சென்றனர்;
வானம் கறுத்துக் கிடந்தது!

இரா. பத்மரஞ்சன்

## காதலுக்குப்பின்...!

அவளுக்கும்
உரிமைகளை
பங்குபோடு...!
▫▫
வாழ்க்கையை
இரண்டாகப் பிரி...!
▫▫
பழமைப் பண்பாட்டை
துண்டாடு!
நீ போகுமிடமெல்லாம்
அவளையும்
அழைத்துச்செல்...!
▫▫
நவீன சிந்தனையை
கட்டம் கட்டமாக
அவளுக்குள் புகுத்து...!
▫▫
இயற்கையை
பரிசாகக்கொடு...!
▫▫
நிலா வெளிச்சத்தில்
கடற்கரை மணலில்
கால் நீட்டியிரு....!
▫▫
அவளை மடியில்
கிடத்து
குழந்தையைப்போல்
தாலாட்டு!
▫▫
காற்று நுழையாதபடி
இறுகப்பிடி....
முத்தம் கொடு..!
▫▫
இனி-
கட்டில் தலையணை
விரிப்பு
எதுவும் தேவையில்லை....!

ஸாபிறா.ஏ.மஜீத்-அக்கரையூர்.

## இனிவரும் கவிதைகள்

நேற்றும்
ஒரு கவிதைஎழுத-
உட்கார்ந்தேன்.

வாவிகளுக்குள்
அமுக்கப்பட்ட-
சவங்களுக்காய்
ஓர் அஞ்சலிக் கவிதையும்,

கேடயமான அப்பாவிகளுக்கோர்
இரங்கல் கவிதையும்,
முடமானவர்களுக்கான
பரிதாபக் கவிதையொன்றும்
எழுதியாயிற்று.

கருத்த எருமைமாடுகள்
அசைந்தசைந்து வந்து
அரிந்துவிட்டுப் போன
அனைத்து மக்களுக்குமான
ஈரக் கவிதையொன்றும்
ஈன்றெடுத்ததென் பேனா



பிறகென்ன
ராஜினிக்கும்-சொய்சாவுக்கும்
வருடா வருடம் எழுதப் போகும்
கவிதை ஒன்றுதான் பாக்கி
இப்போதைக்கு.

சரி இவர்களுடன்
சபாலிங்கத்தையும்
சேர்த்துக் கொள்
உள்ளுக்குள் கிடந்து
கத்தியது கவிதை!

கன்ஸியா






## மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | வீண்குறை கேட்டல், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மனக்குறை நீங்கும், காரிய சித்தி. | காலை 7 மணி |
| புதன்- | துயர் நீங்கும், பணவரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | வீண்விரயம் செய்தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| வெள்ளி- | பயனுள்ள செயல், கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், மனக்கலக்கம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், காரியத் தடை. | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, கடன்சுமை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, பணச்செலவு. | மு.ப. 9 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், மனக்குழப்பம். | காலை 8 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, மறைமுக எதிர்ப்பு. | பகல் 12 மணி |
| சனி- | துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | பெரியோர் பகை, மனவேதனை. | காலை 6 மணி |
| புதன்- | பணத்தட்டுப்பாடு, கௌரவக்குறைவு. | காலை 7 மணி |
| வியாழன்- | உயர்ந்த நட்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | செலவு மிகுதி, மனப்பயம். | காலை 6 மணி |
| சனி- | வீண்விரயம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் விரயம், காரியத் தடை. | காலை 6 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 8 மணி |
| புதன்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன் அதிஷ்ட இலக்கம்-4

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- | காரிய சித்தி, பொருள் இலாபம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | மனக்கலக்கம், பயனற்ற செயல். | காலை 6 மணி |
| வெள்ளி- | முயற்சி தடை, பொருள் விரயம். | பகல் 12 மணி |
| சனி- | பொருள் வரவு, செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள் செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

## இந்த வாரம் உங்கள் பலன்

(27.08.95 முதல் 02.09.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், வெள்ளி |
| கன்னி | - புதன் |
| துலாம் | - இராகு, செவ்வாய் |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |

சந்திரன்-சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | கடன்பயம், வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| புதன்- | காரிய சித்தி, கௌரவம். | மு.ப. 9 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. 10 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, மனக்கலக்கம். | காலை 6 மணி |
| திங்கள்- | வீண்சந்தேகம், துயர் நீங்கும். | காலை 7 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- | பொருள் நட்டம், முயற்சி தடை. | காலை 6 மணி |
| வியாழன்- | கௌரவக் குறைவு அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, மனப்பயம். | காலை 8 மணி |
| சனி- | இனசன விரோதம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -6

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, பொருள்வரவு. | காலை 8 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வீண் முயற்சி, கௌரவக் குறைவு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | புதிய நட்பு, தொழில் மந்தம். | பி.ப. 1 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி பலிதம், கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- | மனக்கலக்கம், வீண்துயரம். | காலை 7 மணி |
| வியாழன்- | பொருள் விரயம், கடன் பயம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | பெரியோர் பகை, மனக்கசப்பு. | காலை 7 மணி |
| சனி- | பயனற்ற செயல், உயர்ந்த எண்ணம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -7

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள்வரவு, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, உறவினர் உதவி. | காலை 8 மணி |
| புதன்- | பயனற்ற செயல், உயர்ந்த நிலை. | மு.ப. 9 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, தேகசுக நன்மை. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- | அந்நியர் பகை, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| சனி- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 8 மணி |
| திங்கள்- | வீண்குறை கேட்டல், பகைமை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | மனமகிழ்ச்சி, பொருள் விரயம். | மு.ப. 10 மணி |
| சனி- | தொழில் கேடு, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

## கன்னி: சுப நேரம்


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள்வரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | தொழில் மந்தம், பணவரவு தடை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | வீண் விரயம், மனக்கசப்பு. | காலை 7 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, பயனற்ற செயல். | காலை 6 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | இனசனவிரோதம், மனப்பயம். | காலை 7 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1



துன்பம் மறந்திடு
தூற்றுதல் ஒழி
தெய்வம் நீ என்றுணர்
தேசத்தைக் காத்தல் செய்
தையலை உயர்வு செய்.
சுப்பிரமணிய பாரதியார்.



## பட்டம் பார்



வானில் பறக்கும் பட்டம் பார்!
வடிவாய் அசைந்து பறக்குது பார்!
கானில் பறக்கும் பறவையைப்போல்
காற்றில் மெதுவாய்ப் பறக்குது பார்!

மஞ்சள் நீலம் சிவப்பென்று
மாறி வண்ணம் தெரியுது பார்!
அஞ்சு செய்த பட்டமது
அழகாய் ஆடிப் பறக்குது பார்!

கொஞ்சி மகிழும் சிறுவரெல்லாம்
கூடிப் பட்டம் விடுவதைப் பார்!
கொக்காய்ப் பருந்தாய்ப் பட்டங்கள்
வடிவம் பெற்றுத் திகழுது பார்!

-பசைறயூர் மல்லிகா பத்மநாதன்-

## இரண்டு சீடர்கள்

பாப்பா முரசு சிறு கதை

விஜயபுரி என்ற நாட்டை அடுத்து ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டில் ஒரு குடில் அமைத்து அதில் ஒரு முனிவர் வசித்து வந்தார். அவருக்கு ஏராளமான சீடர்கள் இருந்தனர்.

அவர்களில் இரண்டு சீடர்கள் மட்டும் குறிப்பிடத்தக்கவர்கள். ஒருவன் பெயர் கணபதி. இன்னொருவன் பெயர் கஜபதி.

இருவரும் முனிவருக்கு சாப்பாடு தயாரித்துத் தருவது, மற்ற எடுபிடி வேலைகளைப் பூர்த்தி செய்வது போன்ற வேலை களைத் தினசரி செய்வார்கள். ஆனாலும் அவர்கள் இருவரும் முழு முட்டாள்களாக இருந்தார்கள்.

அந்த வயோதிப முனிவர் அடிக்கடி படுத்துவிடுவார். அந்தச் சமயத்தில் கணபதியும், கஜபதியும் போட்டி போட்டுக் கொண்டு அவர் கால்களைப் பிடித்து விடுவார்கள். அப்படிப் பிடித்து விடும் போது இருவருக்கும் சண்டை வந்துவிடும்.

"டேய் கணபதி! நான்தான் குரு நாதருக்கு முதலில் தொண்டு செய்வேன். எனக்குத்தான் முதல் உரிமை!" என்று கத்துவான் கஜபதி.

கணபதி அதே உரிமைக்குக் குரல் கொடுப்பான்

முனிவர் அவர்களின் அன்பையும் சேவையையும் நினைத்து நினைத்துப் பூரித்துப் போவார். இருந்தாலும் அவருக்குச் சேவைசெய்யும் போது, 'நீ, நான்' என்று சண்டை போட்டுக்கொள்ளுவதால், அதைத்தீர்த்துவைப்பதே முனிவருக்குப் பெரும் பிரச்சனையாக இருந்தது.

ஒருநாள் அவர் கணபதியையும், கஜபதியையும் அழைத்து, "இனி எனக்குச் சேவை செய்யும்போது உங்களுக்குள் சண்டையே வரக்கூடாது. அதற்காகவே என்னுடைய இரண்டு கால்களையும் உங்களுக்கு ஆளுக்கு ஒன்றாகப் பிரித்துக் கொடுக்கிறேன். கணபதி நீ எனது வலது காலை மட்டும் பிடித்துவிடு. கஜபதி உனக்கு இடது கால். இனிமேல் இருவருக்கும் சண்டை வராது இல்லையா?" என்றார் முனிவர்.

"வராது குருவே!" என்றனர் கணபதியும், கஜபதியும்.

சில நாட்கள் சண்டையே இல்லாமல் கணபதியும், கஜபதியும் முனிவருக்குச் சேவை செய்து வந்தனர்.

ஒருநாள் ஏதோ வெளியூர் வேலையை முடித்து வரும்படி கஜபதியை வெளியே அனுப்பி வைத்தார் முனிவர்.

அப்பொழுது கணபதி மட்டும் முனிவரின் வலது காலைப் பிடித்து விட்டுக்கொண்டிருந்தான்.

இடதுகாலைப் பிடித்துவிட கஜபதி இல்லாததால் அது வெறுமனே கிடந்தது. ஆனால் முனிவருக்கோ தனது இடது காலையும் பிடித்துவிட வேண்டும் போல் இருந்தது. உடனே அவர் கணபதியை நோக்கி,

"டேய் கணபதி! எனது இடது காலையும் சிறிது பிடித்துவிடு" என்றார்.

"குருவே! எனக்குரியகாலை மட்டும் தான் நான் பிடிப்பேன். அந்த முட்டாள் கஜபதிக்கு உரிய காலை நான் பிடிக்க மாட்டேன்" என்றான் கணபதி.

"டேய் கணபதி அப்படிச் சொல்லாதே. கஜபதி வெளியூர் சென்றிருப்பதால்தான் அப்படிச் சொல்கிறேன். இடதுகால் ஒரே வலியாக இருக்கிறது. சிறிது பிடித்துவிட்டால் நன்றாய் இருக்கும். பிடித்து விடடா" என்றார் முனிவர்.



கணபதியோ மறுபடியும் மறுத்து விட்டான்.

முனிவர் மறுபடியும், மறுபடியும் வற்புறுத்தினார்.

இது கணபதிக்குப் பெரிய கோபத்தை உண்டாக்கியது.

"குருவே! அந்த முட்டாள் பிடிக்க வேண்டிய காலையா மறுபடி மறுபடி என்னைப் பிடிக்கச் சொல்கிறீர்கள். அந்தக் காலை என்ன செய்கிறேன் பாருங்கள்" என்று கத்திய கணபதி, தன் ஆத்திரத்தை எல்லாம் திரட்டி முனிவரின் இடது காலை ஓங்கி ஒரு மிதி மிதித்தான்.

"அம்மா" என்று அலறினார் முனிவர்.

அதே சமயம் குடிலுக்குள் நுழைந்த கஜபதி, விஷயத்தைக் கேள்விப்பட்டு ஆத்திரமடைந்தான்.

"டேய் அறிவு கெட்ட கணபதி. எனக்கு ஒதுக்கிக் கொடுத்த குருவின் காலையா மிதித்து வீங்கவைத்தாய். இப்போது உனக்குரிய காலை என்ன செய்கிறேன் பார்" என்று கத்திக் கொண்டே அருகில் கிடந்த பெரிய தடியை எடுத்து முனிவரின் வலது காலில் அடி அடியென்று அடித்தான்.

"அய்யோ அம்மா" என்று தன் காலைப் பிடித்துக்கொண்டு அலறினார் முனிவர்.

அவரது வலதுகால் பெரிதாக வீங்கி நோவு எடுத்தது. 'முழு முட்டாள்களை வேலைக்கு வைத்துக் கொண்ட எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்' என்று தன்னைத்தானே நொந்து கொண்டார் முனிவர்.

பிறகு மற்ற சீடர்களின் உதவியோடு அந்த இரு முட்டாள் சீடர்களையும் அடித்துத் துரத்திவிட்டார்.

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப் படுகின்றன. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
'பாப்பா முரசு'
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 02.09.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 105
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 102

பரிசுக்குரியவர்:
திமிசாநந்தன்
பெயாசெலை தமிழ் வித் தாவாரிகை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சி.திலீபன்<br>தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருகோணமலை | பி.எம். மாஸ்ஹூன்<br>அல்-ஹிதாயா வித். மீராவோடை, வாழைச்சேனை. |
| தே. லீமா ரம்யா<br>இறம்பைக்குளம் மகளிர் மகா வித். வவுனியா. | ஏ.கே. கிறிஸ்டி குமார்<br>றோயல் கல்லூரி, கொழும்பு-07. |
| எம்.எஸ்.எம். இம்தியாஸ்<br>தி/குட்டிக்கராச்சி மு.வி. கிண்ணியா | அன்ரன் டிலிஷ் தேவமனோகரன்<br>கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை |
| பு. ரதி<br>மட்/மண்டூர் மகா வித். மண்டூர் | றிஷ்டா பக்கீர்<br>பது/அல் அதான். ம.வித். பதுளை. |
| மு.ஹ. முஹாஜிர்<br>சாய்ந்தமருது-01. | பாலசுந்தரம் நிரஞ்சன்<br>காளிகோவில் வீதி, ஒந்தாச்சிமடம். |

## வாரம் ஒரு நாடு



### ஃபின்லாந்து

தலைநகர்: ஹெல்சிங்கி
பரப்பளவு: 3,37,032 சதுரகிலோ மீற்றர்
மக்கள் தொகை: 50,04,000
மொழி: ஃபின்னிஷ் மற்றும் சுவீடிஷ்
எழுத்தறிவு: 99%
சமயம்: கிறிஸ்தவம்
தனிநபர் வருமானம்: 24770 டொலர்கள்.
அமைவிடம்: வடக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள ஃபின்லாந்து பால்டிக் கடலின் கடற்பரப்புக் கொண்டுள்ளது. இதன் மேற்கே போத்னியா வளைகுடாவும்; தெற்கில் ஃபின்லாந்து வளைகுடாவும்; கிழக்கில் சுதந்திர சோவியத் குடியரசுகளும்; மேற்கில் சுவீடனும் எல்லைகளாக அமைந்துள்ளன. வடக்கே நோர்வேயின் ஒரு சிறுபகுதியை எல்லையாகப் பெற்றுள்ளது.

வரலாறு: 1809 இல் ரஷ்யாவின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. ரஷ்யப் புரட்சிக்குப் பின் 1917 டிசம்பரில் ஃபின்லாந்து தனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தது. தொடர்ந்து உள்நாட்டுக் கலவரங்கள். 1939 இல் ரஷ்யா ஃபின்லாந்தை மீண்டும் பிடித்தெடுத்தது. 1940 இல் ரஷ்யாவுடன் சமாதான ஒப்பந்தம். சில பகுதிகளை ரஷ்யாவுக்கு விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. இரண்டாம் உலகப்போரில் ஃபிந்லாந்து ஈடுபட்டதும், ரஷ்யாவுக்குக் கொடுத்த பகுதிகளை மீண்டும் கைப்பற்ற முயற்சித்தது. ஆனால் அது நிறைவேறவில்லை. 1944ல் மீண்டும் ரஷ்யாவுடன் சமாதான ஒப்பந்தம். மேலும் சில பகுதிகள் ஃபின்லாந்திற்கு நஷ்டமானது. தற்போது ஃபின்லாந்து ஒரு சுதந்திரக் குடியரசு. அதிபர் ஆறு வருடங்களுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

பொருளாதாரம்: ஃபின்லாந்தின் பொருளாதாரம் ஊசியிலை மரவகைக் (Conifer) காடு களைச் சார்ந்துள்ளது. மொத்த நிலத்தில் 65 சதவிகித நிலம் இக்காடுகளே. காகிதம், காகிதக்கூழ் தொழிற்சாலைகள் மிகுந்த வளர்ச்சியடைந்துள்ளன. கப்பல் கட்டுதல், உலோகங்கள், துணி ஆலைகள், தோல், இரசாயனத் தொழில்கள் போன்றவையும் வளர்ந்துள்ளன.

## அதிசயம்! ஆனால் உண்மை!



★ புராதன மனிதர்களின் பாதச்சுவடுகள் கற்களில் புதைபடிவமாகக் கண்டெடுக்கப்பட்டன.

★ கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் 'சுப்பர்சோரர்ஸ்' எனப்படும் விலங்குகள் 'டைனோசோர்ஸ்' இனத்தில் மிகப் பெரியனவாகும். இவை ஒவ்வொன்றும் 10 யானைகளின் எடை கொண்டவை.

★ புதைபடிவங்களில் 'டைனோசோர்ஸ்' பிராணிகளின் கால் அடையாளங்ளைக் கண்ட பண்டைக்கால மக்கள், அவை இராட்சதர்களின் காலடையாளங்கள் என்று எண்ணினர்.



★ பண்டைக்காலத்தில் வாழ்ந்த பிராணிகளுள் ஒன்று 'ஸ்ரெகோசோவர்ஸ்.' இதனுடைய நீளம் 9 மற்றர். ஆனால், இதன் மூளையின் அளவு ஒரு முந்திரிப்பருப்பின் அளவினதாக இருந்தது.

## டைனோசோர்ஸ்

★ டைனோசோர்ஸ் ஊரும் பிராணிகள் இனத்தைச் சேர்ந்தவை. உடல் முழுவதும் செதில்களை உடையது. இதுவே உலகில் வாழ்ந்த எல்லாப் பிராணிகளையும்விட மிகப்பெரியது.



★ தாவரங்களை மட்டுமே புசிக்கும் 'பிராச்சியோசோவர்ஸ்' மற்றும் 'டிப்லோடோக்கள்' ஆகிய வர்க்கங்களே மிக மிகப் பெரியவை. இவை 30 மீற்றர் வரை நீளமுடையவை.

★ மாமிசம் உண்ணும் டைனோசோர்ஸ் அளவில் சிறியவை. பின்னங்கால்களால் மட்டுமே ஓடும். இவற்றிலும் 'ரைறன்னோசோவர்ஸ் என்ற ரகம் 5 மற்றர் உயரமுடையன.

டைனோசோர்ஸ் இனம் 6 கோடி 50 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே அழிந்துபோய் விட்டதாக நம்பப்படுகிறது. இதற்குரிய காரணம் என்ன என்பதை இதுவரை சரியாகக் கூறமுடியவில்லை. எனினும் சில ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

**அவையாவன:**

★ மிகப்பெரிய வால் நட்சத்திரம் ஒன்று பூமியில் விழுந்த போது எழுந்த புழுதிமண்டலத்தினால் சூரியனுடைய ஒளிக்கதிர்கள் பூமிக்கு எட்டமுடியாமல் தடுக்கப்பட்டன. இதனால் பூமியின் பெரும்பாகத்திலிருந்த பயிர், மரம், செடி, கொடிகள் யாவும் அழிந்ததுடன் பெரிய பிராணிகளும் அழிந்தொழிந்தன.

★ பூமியின் உஷ்ண நிலை அதிகரித்தமையினால் உயிரினங்கள் அழிந்து போயின.

★ பாலூட்டும் பிராணிகள் பல்கிப்பெருகி டைனோசோர்சின் உணவினைத் தின்று தீர்த்தமையினால், உணவின்றியே மடிந்துபோயின.

www.padippakam.com



# ஒரு நிமிச நிசப்தம்

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

**கா**த்திருக்க ஆரம்பித்து -பதினைந்து நிமிஷம் வரைக்கும் கவலைப்படாமல் இருந்த அபிநயா பதினாறாவது நிமிஷத்தின் துவக்கத்திலிருந்து கவலைப்பட்டாள்.

உட்கார்ந்திருந்த பாறையினின்றும் கீழே இறங்கி தவிப்போடு இரண்டு நிமிஷம் உலவி-மறுபடியும் அதே தவிப்போடு பாறையின் மேல் ஏறி உட்கார்ந்தாள்.

மணிக்கட்டை உயர்த்தி ரேடியம் மின்னும் வாட்சைப் பார்த்தாள்.

மணி. 8.20

நிர்மலமாய் இருந்த வானத்தில் நட்சத்திரங்கள் கோஷ்டி சேர்த்துக் கொண்டு மின்ன-அரைவட்ட அஷ்டமி சந்திரன் கோபப்பட்ட தினுசில் தனியாய் ஒதுங்கியிருந்தான்....

காற்று சிலீரென்று பொட்டல் வெளி பூராவும் வேகமாய் அலைந்தது.

'ப்ரீப் கேஸை எடுக்க இவ்வளவு நேரமா...?'

'என்னதான் செய்கிறார் சபரி...?'

'போய் பார்க்கலாமா.....?'

'பொறு...ஒரு அஞ்சு நிமிஷம் பொறு.... சபரி இப்போ வந்துடுவார்' மனசுக்குள்ளிருந்து இன்னொரு அபிநயா சொன்னாள்.

அந்த ஐந்து நிமிஷமும் நகர்ந்தது.

அபிநயா வியர்க்க ஆரம்பித்து- பாறையினின்றும் இறங்கினாள்.

அதே விநாடி-

பாறையின் இடதுபக்க மறைவிலிருந்து யாரோ இருமினார்கள். ஒரு ஆணின் இருமல்.

உடம்பு பூராவும் உருகிவிட்ட மாதிரி அதிர்ந்தாள் அபிநயா...

படக்கென்று திரும்பினாள்.

பாறையின் மறைவிலிருந்து கையில் லாந்தர் விளக்கொடு யாரோ வெளிப்பட்டார்கள். உடம்பில் சால்வை, தலையில் முண்டாசு. இடது கையில் ஒரு நீண்ட கம்பு.

"யாரது...?" குரல் கரகரப்பாய் கேட்டுக் கொண்டே அபிநயாவை நெருங்கியது.

அபிநயா அசையாமல் நின்றாள்.

லாந்தர் விளக்கு அவளுடைய முகத்துக்கு நேரே வந்தது.

"அட பொண்ணு...! ஏம்மா இந்த நேரத்துல இங்கே நிக்கறே... காத்து-கறுப்பு உலாவற நேரம்... வூட்டுக்கு போம்மா..."

அபிநயா அப்போது தான் அந்த ஆணின் முகத்தைக் கவனித்தாள். நடுத்தர வயது. முகத்தில் கிராமியத்தனம். தொங்கலான மீசை.

அபிநயா பயத்தில் திக்கினாள்.

"ரோ....ரோ....ரோட்டுக்குப் போற வழி தெரியலை...."

"இப்படியே நேரா போம்மா.. அர கல்லு தூரம் போக ரோடு வரும்.... வயசுப் பொண்ணு கொஞ்சம் கூட பயமில்லாமே இப்படி இருட்டுல நின்னுட்டிருக்கியேம்மா....? படிச்ச பொண்ணுகளுக்கு தகிரியம் ஜாஸ்திதான்."

அந்த மனிதர் பேசப்பேச அபிநயா நகர்ந்தாள்.

"நேரே போம்மா...." சொல்லிக் கொண்டே, லாந்தர் விளக்கோடு பாறையின் அந்தப் பக்கமாய் போனவர், "ப்பா.... பா....பா... சனியன் பிடிச்ச குட்டி, வாரத்துக்கு ரெண்டு தபா இப்படி காணாமே போயிடுது... இந்த இருட்டுல எப்படிப் போய் தேடறது...?" சலித்துக் கொண்டார்.

அபிநயா பார்வையில் இருட்டை செலுத்திக் கொண்டே நடந்தாள்.

'சபரி... என்னாச்சு....ஏன் இவ்வளவு நேரம்? என்ன பண்றீங்க...?'

'ப்ரீப்கேஸை கொண்டுட்டு வர்றதுல என்ன ப்ராப்ளம்...?' கேள்விகளை மனசுக்குள் எழுப்பிக் கொண்டு கெட்டித்துப் போன தரையில் ஏற்ற இறக்கங்கள் பார்த்து வேகமாய் நடந்தாள்.

சில நிமிஷ நடை.

ரோட்டைத் தொட்டாள்.

ரோட்டுப் பிரதேசத்தில் மனித சஞ்சாரம் இல்லை.

கனமான நிசப்தம்.

நிலாவும் நட்சத்திரங்களும் கொட்டிய மங்கலான வெளிச்சத்தில் மருதமலை போகும் ரோடு கறுப்பு நாடாவாய் தெரிய 5-வது கி.மீ.கல்லைத் தேடினாள்.

இருபதடி தூரத்தில் கிடைத்தது.

அருகே பாலம் தெரிந்தது.

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு அபிநயா அந்த சரிவான பகுதியில் இறங்கினாள்.

அடித் தொண்டையிலிருந்து கிசு கிசுப்பாய் குரல் கொடுத்தாள்.

"சபரி...சபரி..."

காற்று 'ஸ் ஸ் ஸ்' என்றது.

"சபரி....."

நிசப்தம்.

பாலத்துக்குக் கீழே குனிந்து பார்த்தாள்- பாலத்துக்கு கீழே... எந்த அசைவும் இல்லை.

'சபரி.....நீங்க எங்கே போனீங்க...?' மனசுக்குள் பொருமிக் கொண்டே பாலத்திற்கு அடியில் குனிந்து நடந்தாள்.

தண்ணீர் பாயாத தரை பரப்பில் கல்லும் மண்ணும் கால்களை நெருடின. பாலத்திற்கு கீழே இருந்த காற்று நாறியது. பார்த்தீனிய புதர்க்குப் பின்னால் எதுவோ ஓடியது.

மூக்கைப் பொத்திக் கொண்டு- இன்னமும் உள்ளே போனாள்.

இடது கால் சட்டென்று எதன்மீதோ மோதிக் கொள்ள நின்றாள்.

பார்வையைக் கீழே போட்டாள்.

சபரி மெல்லிய இருட்டில் மல்லாக்காக விழுந்திருந்தான்.

செத்திருந்தான்.

அபிநயாவின் இதயம் ஸ்தம்பித்தது.

"சபரீ.....ஈ...ஈ....ஈ..."

நடுங்கிக் கொண்டே மண்டியிட்டு உட்கார்ந்தாள். சபரியின் நெஞ்சில் கையை வைத்துப் பார்க்க - உள்ளங்கை பூராவும் பிசுபிசுப்பாய் எதுவோ ஒட்டிக் கொள்ள -கண்களைத் தாழ்த்தி உற்றுப்பார்த்தாள்.

"சபரி..."

பதட்டத்தோடு உசுப்பினாள்.

சபரியின் உடல் சலனமில்லாமல் ஆடியது.

அபிநயா பீறிட்டு எழுகின்ற அழுகையோடு சுற்றும் முற்றும் பார்த்தாள். அந்த ப்ரீப்கேஸ் எங்கேயாவது தட்டுப்படுகிறதா வென்று கண்களைச் சுழற்றினாள்.

ப்ரீப்கேஸைக் காணோம்.

'யார் வந்திருப்பார்கள்?'

'எனக்கும் சபரிக்கும் தெரிந்த இந்த கடத்தல் நாடகம் வேறு யாருக்கோ தெரிந்து ஃபாலோ பண்ணியிருக்கிறார்கள். சபரியை பணத்துக்காகத் தீர்த்திருக்கிறார்கள்.'

கண்களில் நீர் சிதற-

மறுபடியும் சபரியைப் பார்த்தாள்.

"வேண்டாம்.... அபிநயா.... விளையாட்டு வினையாயிடும்.... இது விளையாட்டு காரியமில்லை..."-சபரி சொன்ன வார்த்தைகள் மனசைக் கீறி காயப்படுத்தின.

அபிநயா எழுந்தாள்.

அதே விநாடி-

யாரோ நடந்து வரும் சத்தம்.

'க்ரக்...க்ர்ர்க்...க்ரக்....'

அபிநயா திரும்பிப் பார்ப்பதற்குள்- யாரோ குபீரென்று அவள் மீது பாய்ந்து வாயைப் பொத்தினார்கள். ஈரமான கர்ச்சீப் மருந்து நெடியோடு நாசிப் பரப்பை அடைத்தது.

அபிநயா திமிற முயற்சித்து-

முடியாமல்

சோர்ந்தாள்.

கண்களுக்குள் இருட்டொன்று கரும்மேகமாய் வந்து உட்கார- உடம்பு காற்றில் மிதந்தது. சில நிமிஷப் போராட்டத்திற்குப் பின்- அப்படியே- தண்ணீரில் நனைந்த காகிதமாய் துவண்டு-சரிந்தாள்.

நீளமான மயக்கத்திற்குள் போனாள்.

அவளைத் தூக்கி தன் புஜத்தின் மேல் போட்டுக் கொண்ட அந்த உருவம் பாலத்தை விட்டு வெளியே வந்து வேகமாய் நடந்து - மரத்தடியில் நிறுத்தி வைத்திருந்த டெம்போ வேனை நோக்கிப் போனது.

வேனின் பின் சீட்டில் கிடத்திவிட்டு- டிரைவிங் சீட்டில் உட்கார்ந்தது.

அடுத்த விநாடி- டெம்போ வேன் வேகமான வீறிடலோடு கிளம்பியது.

**தோ**ள்பட்டையில் சுரக்கென்று இஞ்செக்ஷன் குத்தப்படும் உணர்வு. மூளைப் பிரதேசத்துக்கு உறைக்க கண் மலர்ந்தாள் அபிநயா.

ஜன்னல்களிலிருந்து பீறிட்ட வெளிச்சம் அறைமுழுவதும் பரவியிருக்க கண்கள் கூசியது. சிரமப்பட்டு இமைகளை பிரித்தாள்.

குடும்ப டாக்டர் மேனன் ஸிரிஞ்சில் தீவிரமாய் மருந்தை ஏற்றிக் கொண்டிருந்தார். சந்தானகிருஷ்ணன் மோவாயில் கைதாங்கி நாற்காலியில் சாய்ந்திருந்தார். அபிநயா கண்விழிப்பதைக் கண்டதும் சந்தோஷமாய் எழுந்து குனிந்தார்.

"அம்மா.... அபிநயா..." அவள் தலையை வருடினார்.

"அ.... அப்பா...."

"அப்படியே படும்மா.... ஒண்ணும் ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே..." சந்தான கிருஷ்ணன் சொல்லச் சொல்ல டாக்டர் மேனன் அபிநயாவின் வலது பக்கத் தோள்பட்டையைப் பற்றி இஞ்செக்ஷனை செலுத்தினார். புன்னகைத்தார் அவளைப் பார்த்து.

"ஒண்ணும் பயப்படாதேம்மா...மயக்க மருந்தை சுவாசிச்சதாலே ஏற்பட்ட மயக்கம்....பத்து நிமிஷத்துல போயிடும்....."

இஞ்செக்ஷனை செலுத்தி விட்டு தன் கிட்டை எடுத்துக் கொண்டார் மேனன். "அபிநயாவுக்கு குடிக்கிறதுக்காக ஏதாவது ட்ரிங்ஸ் தரலாம்.... சந்தானகிருஷ்ணன்..... நான் மறுபடியும் சாயந்திரம் வந்து பார்க்கிறேன்....."

சந்தானகிருஷ்ணன் தலையசைக்க டாக்டர் புறப்பட்டார். அவர் புறப்பட்டுக் கார் போர்டிகோவிலிருந்து நகரும்வரை காத்திருந்த சந்தானகிருஷ்ணன் திரும்பி அபிநயாவிடம் கேட்டார்.

"உன்னை அந்தப் பாவி எங்கேம்மா அடைச்சி வச்சிருந்தான்?"

"அ....அ....அப்பா..."

கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது அபிநயாவுக்கு. பேசமுடியாமல் திணறி கண்களை மூடிக்கொண்டாள். சில விநாடிகளுக்குப்பின் உதடுகளை பலஹீனமாய் அசைத்தாள்.

"அப்பா....நான் எப்படி வீட்டுக்கு வந்தேன்...?"

"நம்ம பங்களா காம்பௌண்ட் வாசல்ல மயக்கமா நீ விழுந்து கிடந்தேம்மா...! தோட்டக்கார பாலுசாமிதான் மொதல்ல உன்னைப் பார்த்துட்டு வந்து சொன்னான்.... ராத்திரியிலிருந்து உனக்கு மயக்கம் தெளியவே இல்லை..."

"அ...அப்பா...."

"அம்மா...அபிநயா....! உன்னை கடத்திக்கிட்டு போன ரெண்டு பேர்ல ஒருத்தன் இன்னொருத்தனை கொலை செஞ்சுட்டு பணத்தோட தலைமறைவாயிட்டான் போலிருக்கு....."

"ரெண்டு பேரா...."

அபிநயா அதிர்ந்தாள்.

"அப்பா..."

7

"என்னம்மா.....?"

அழுகிற குரலில் சொன்னாள் "என்னைக் கடத்தியது ரெண்டு பேரில்லை.. ஒருத்தர்தான். அதுவும் நிஜமான கடத்தல் இல்லை...."

முகம் மாறினார் சந்தானகிருஷ்ணன்.

"என்னம்மா சொல்றே?"

"அப்பா... இது நானும் சபரியும் விளையாட்டாய் போட்ட திட்டம்."

"சபரியா?"

அபிநயா வெடிக்கிற அழுகையோடும், விம்மலோடும் எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள். சொல்லிவிட்டு முழங்காலில் முகம் புதைத்து முதுகு குலுங்கினாள்.

சந்தானகிருஷ்ணன் அபிநயாவையே வெறித்தார். "படிச்ச பொண்ணு நீ என்ன காரியத்தைம்மா பண்ணியிருக்கே....? எனக்கு.....

"வரப்போற மாப்பிள்ளைக்கு பத்து லட்ச ரூபா சொத்து இருக்கணும்னு நான் கண்டிஷன் போட்டது அந்த புரோக்கர் சிவகுருநாதனுக்காகம்மா! அந்த கண்டிஷனைப் போட்டாத்தான் அந்த புரோக்கர் கொஞ்சம் ஒழுங்கான வரனைப் பார்ப்பான். நீ அந்த சபரியை விரும்புற விஷயம் எனக்குத் தெரிஞ்சிருந்தா இந்நேரம் கல்யாணத்தை முடிச்சு வெச்சிருப்பேனே- பைத்தியக் காரத்தனமா திட்டம் போட்டு உன்னோட வாழக்கையையே பாழ்பண்ணிக்கிட்டியேம்மா..." தலையில் அறைந்து கொண்டார் சந்தான கிருஷ்ணன்.

"அ....அப்பா.....!"

"உனக்கு விஷயமே தெரியாதாம்மா?"

"என்னப்பா சொல்றீங்க?"

(தொடர்ந்து வரும்)

சென்ற வாரத் தொடர்



## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ஜே. சுதர்சன்
வயது: 28
முகவரி: 25, மாக்கான் மாக்கர் ஆர்க்கேட், காலி முகம், கொழும்பு-03.
பொழுதுபோக்கு: புகைப்படம் பிடித்தல், கதைப்புத்தகம் வாசித்தல்.



பெயர்: எம். தம்ஸீன்
வயது: 18
முகவரி: இல.115, புளுகொற தென்ன, அக்குறணை.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை.



பெயர்: செல்வி.எம். பிரியா
வயது: 29
முகவரி: C/O. Mr . ALI TRUN-EL. CHEBBAK BEIRUT, LEBANON.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எம். தாஸீம்
வயது: 25
முகவரி: ATCO ENG' G, DVN, P.O.BIX-1296 ,DAMMAN 31431, K.S.A.
பொழுதுபோக்கு: டி.வி., வானொலி, பத்திரிகை.



பெயர்: என்.மிஸ்ருள் லாபி
வயது: 18
முகவரி: 78/1, கட்டுக்கெலியாவெவ, தம்பிரிகஸ்வெவ, அனுராதபுரம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: என்.சசிகரன்
வயது: 25
முகவரி: GOLDBURN STR.115, 8055 ZURICH, SWITZERLAND.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், நீச்சல், டி.வி.

பெயர்: ஆர். சங்கர்
வயது: 18
முகவரி: கோயில் வீதி, மூதூர்-03.
பொ.போ: வானொலி கேட்டல்.

பெயர்: ஐ. அப்துல் காதர்
வயது: 24
முகவரி: 93, அல்-முனவ்வரா லேன், அக்கரைப்பற்று-04.
பொ.போ: பாடல்கள் பாடுவது.

பெயர்: வி. பாஸ்கரன்
வயது: 24
முகவரி: P.O.BOX-60429, AL-KHOR, DOHA-QATAR, A.G.
பொழுதுபோக்கு: டி.வி., பேனா நட்பு.

பெயர்: எச். அஸ்வர்
வயது: 21
முகவரி: SABAH. AL.SALIM, P.O.BOX NO. 604, CODE NO. 44000, KUWAIT.
பொ.போ: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: என்.மணி
வயது: 20
முகவரி: 160, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: டி.வி., பத்திரிகை.

பெயர்: எம். நசீம்டீன்
வயது: 22
முகவரி: 112, ரத்மல்கமுவ றோட், கம்பொல.
பொ.போ: பேனா நட்பு.

www.padippakam.com

# தாய் 39

## மக்சீம் கார்க்கி

"ஆனால் குற்றவாளி நீங்கள் தான்; அவர்களல்ல. நீங்கள் தான் சிறைக்குப் போகவேண்டும்."

"நீ ஒரு எமகாதப் பேர்வழி!" என்று முழங்காலில் தட்டிக் கொடுத்துக் கொண்டு சிரித்துச் சொன்னான் ரீபின்: "என்னை யார் சந்தேகப்படுவது? முஜீக்குகள் இந்த மாதிரி விவகாரங்களில் ஈடுபடமாட்டார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். புத்தகங்கள் என்பது படித்த சீமான்களின் விவகாரம். அவர்கள் தான் அதற்குப் பதில் அளிக்க வேண்டும்."

ரீபின் சொல்வதை பாவெல் புரிந்து கொள்ளவில்லை என உணர்ந்தாள் தாய். பாவெல் தனது கண்களைச் சுருக்கி விழிப்பதை அவள் கண்டாள். அவன் கோபமுற்றிருப்பதை உணர்ந்தாள்.

"மிகயீல் இவானவிச் இந்த வேலையை தானே செய்து விட்டு, பிறர்மீது பழியைப் போடப்பார்க்கிறாரோ...?" என்று மெது வாகவும், எச்சரிக்கையாகவும் சொன்னாள் தாய்.

"அதுதான் சங்கதி!" என்று தன் தாடியைத் தட்டி விட்டுக் கொண்டு கூறினான் ரீபின். "தற்காலிகமாக!"

"அம்மா!" என்று வரண்ட குரலில் சொன்னான் பாவெல்; "நம்மில் யாராவது ஒருவன் - அந்திரேய் என்றுதான் வைத்துக் கொள்ளேன்- ஏதாவது ஒன்றைச் செய்துவிட்டு எனக்குப் பின்னால் வந்து ஒளிந்துகொண்டான் என்று வைத்துக் கொள், அப்புறம் அவனுக்குப் பதில் என்னைச் சிறைக்குக் கொண்டு போகிறார்கள் என்று நினைத்துப் பார், உனக்கு என்ன உணர்ச்சியம்மா உண்டாகும்.?"

தாய் திடுக்கிட்டு, ஒன்றும் புரியாதவளாய் மகனைப்பார்த்தாள்.

"தோழனுக்கு தோழன் இப்படித் துரோகம் செய்ய முடியுமா? சே! அது என்ன வேலை?" என்று தலையை அசைத்துவிட்டுச் சொன்னாள் அவள்.

"ஆஹா! பாவேல் உன்னை இப்போதுதான் தெரிந்து கொண்டேன்" என்று இழுத்தான் ரீபின். பிறகு அவன் தாயின் பக்கம் திரும்பி, கேலியாகக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு: "இது ஒரு நாசூக்கான விவகாரம்தான், அம்மா" என்றான். மீண்டும் அவன் பாவெலை நோக்கித் திரும்பி, உபதேசம் பண்ணுகிற தோரணையில், பேச ஆரம்பித்தான்: "தம்பி! உன் எண்ணங்கள் எல்லாம் இன்னும் பிஞ்சாய்த் தானிருக்கின்றன, பழுக்க வில்லை. சட்டவிரோதமான காரியம் என்று வரும்போது. கௌரவத்தையோ நாணயத்தையோ பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நீயே யோசித்துப்பார். முதன் முதல் அவர்கள் சிறையில் தள்ளப் போவது எவன் கையில் புத்தகம் இருந்ததோ அவனைத்தான்; உபாத்தியா யர்களை அல்ல. இது முதலாவது. இரண்டாவது, உபாத்தியாயர்கள் அங்கீ கரிக்கப்பட்ட புத்தங்களை மட்டுமே கற்றுக் கொடுக்கிறார்கள் என்றே வைத்துக் கொள். அந்தப் புத்தகங்களிலும் தடை செய்யப்பட்ட புத்தகங்களில் உள்ள உண்மைகள் இருக்கத்தான் செய்யும். வார்த்தைகள்தான் வித்தியாசமாயிருக்கும். விஷயம் ஒன்றுதான். வேண்டுமானால், நீ தரும் புத்தகங்களில் இருப்பதைவிட, அதில் உண்மை கொஞ்சம் குறைவாக இருக்கலாம். சுருங்கச் சொன்னால், நான் எந்தக் கொள்கைக்காக வாழ்கிறேனோ அதே கொள்கைக்காகத்தான் அவர்களும் வேலை செய்கிறார்கள். அவர்கள் சுற்றிவளைத்துத் திரிகிறார்கள். நான் நேர் பாதையில், விரைந்து முன்னேறிப் போகிறேன். அவ்வளவுதான். முதலாளிகளின் கண்ணோட்டத்தின்படி பார்த்தால், எங்கள் இருவரையுமே தண்டிக்க வேண்டியதுதான். சரிதானே? இது இரண்டாவது. மூன்றாவதாக ஒரு விஷயம் இருக்கிறது. அவர்களுக்கும் எனக்கும் தொடர்பே கிடையாது. நடந்து செல்லும் தரைப்படை, குதிரைப்படையாட்களோடு சிநேகம் கொள்ள முடியாது. முஜீக்காயிருந்தால் நான் அந்த மாதிரி நடந்துகொள்ள மாட்டேன். ஆனால் அந்த உபாத்தியாயரோ ஒரு பாதிரியாரின் பிள்ளை; உபாத்தியாயினியோ ஒரு பண்ணையாரின் மகள். அவர்கள் இருவரும் ஜனங்களை ஏன் தூண்டிவிடப் போகிறார்கள்? என்னைப் போன்ற ஒரு முஜீக்குக்கு அந்தக் கனவான்களின் மனதில் இருப்பது எட்டாது. எனக்கு நான் செய்கின்ற காரியம் நன்றாய்த் தெரியும். அவர்கள்-அந்தப் படித்த சீமான்கள்-எதை நோக்கிச் செல்கிறார்கள் என்பது எனக்குக் கொஞ்சம் கூடத் தெரியாது. புரியாத விஷயம். ஆயிரம் வருஷ காலமாக அந்தக் கனவான்கள் தங்கள் இடத்தில் சுகமாக வாழ்ந்து கொண்டு, முஜீக்குகளின் முதுகுத்தோலை உரித்தெடுக்கிறார்கள். இப்போது மட்டும் அவர்கள் திடுதிப்பென்று முஜீக்குகளின் கண்களை மறைத்திருக்கும் திரைகளைத் தங்கள் கைகளாலேயே விலக்கி விடுவார்களா? எனக்கு அந்த மாதிரியான கட்டுக் கதைகளில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. அவர்கள் அப்படிச் செய்வார்கள் என்று சொல்வது அபாரமான கற்பனை. ஆமாம்! சீமான்களுக்கும் எனக்கும் வெகுதூரம். நீ குளிர் காலத்தில் வயல் வெளி வழியாகக் குறுக்கே நடந்து செல்கிறாய் என்று வைத்துக்கொள். ரோட்டுக் கரைக்கு வந்தவுடன் உனக்கு எதிராக ஏதோ ஒன்று தெரிகிறது என்றும் நினைத்துப்பார். அதென்ன அது? ஒரு நரி, அல்லது ஓநாய். இல்லாவிட்டால் ஒரு நாயாக இருக்கும். என்னவென்று தெரியவில்லை.

தாய் தன் மகனைப் பார்த்தாள். அவன் மகிழ்ச்சியற்றுக் காணப்பட்டான்.

ரீபினின் கண்களில் ஒரு கரிய ஒளி பிரகாசித்தது. அவன் ஆத்ம திருப்தியோடு பாவெலையே பார்த்துக் கொண்டும் தாடியைத் தடவிக் கொடுத்துக் கொண்டும் இருந்தான்.

"நல்லொழுக்கத்தைப் பற்றி நினைப்பதற்கு இது காலமில்லை." என்று தொடங்கினான் ரீபின்; "வாழ்க்கையோ ஒரே சிரமமயமாயிருக்கிறது. நாய்கள் ஒன்று கூடினால் ஆட்டு மந்தையாகி விடாது. ஒவ்வொரு நாயும் அதனதன் இஷ்டப்படி குலைத்துத் தள்ளும்."

"சாதாரண மக்களின் நலத்துக்காக, படித்த சீமான்களில் பல பேர் மரணத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்." என்று தனக்குத் தெரிந்தவர்கள் முகங்களையெல்லாம் மனக் கண்முன் கண்டவாறே பேசினாள் தாய்; "அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையுமே சிறையில் கழித்துவிடுகிறார்களே...."

"அவர்களெல்லாம் ஒரு தனி ரகம்" என்றான் ரீபின். "முஜீக் பணக்காரனாகி,

> **என்றும் முதலிடம்**
>
> உலகில் மிகச் சிறந்த நாவல் எது ?
> ஒரே பதில்- தாய்! தாய்!! தாய்!!!
> உண்மைகள் எப்போதும்
> வசீகரமானவை-
> அது தான்'தாய்' நாவல்
> எப்போதும் முதலிடத்தில் இருக்கிறது !!
>
> ஆ-ர்

படித்த கனவான்களோடு சரிசமானம் பெறுகிறான். படித்த கனவான்கள் ஏழைகளாகி, முஜீக்குகளின் நிலைக்கு தாழ்ந்து விடுகிறார்கள். பணமில்லாவிட்டால் மனம் சுத்தமாயிருக்கும். பாவெல், நீ எனக்குச் சொன்ன விஷயம் ஞாபகம் இருக்கிறதா? ஒரு மனிதன் எப்படி வாழ்கிறானோ, அப்படியேதான் சிந்திக்கிறான் என்று சொன்னாயே, அதுதான் சங்கதி! தொழிலாளி 'இல்லை' என்று ஒரு விஷயத்தைச் சொன்னால், முதலாளி அதே விஷயத்தை 'இருக்கிறது' என்பான். தொழிலாளி 'ஆம்' என்று சொன்னால் முதலாளி தன் குணத்துக் கேற்ப 'இல்லை' என்று கத்துவான். இதே முரண்பாடுதான் முஜீக்குகளுக்கும் படித்த சீமான்களுக்கும் இடையில் நிலவுகிறது. முஜீக் ஒருவன் வயிறுநிறையச் சாப்பிடுவதைப் பார்த்தால் உடனே பண்ணையாருக்கு வயிற்றைக் கலக்கிவிடும். ஒவ்வொரு வர்க்கத்திலும் சில நாய்ப்பிறவிகள் இருக்கத்தான் இருப்பார்கள். நான் ஒன்றும் எல்லா முஜீக்குகளுக்காகவும் பரிந்து பேசவில்லை..."

அவன் தனது பலம் பொருந்திய கரிய முகத்தைத் தொங்க விட்டவாறே எழுந்து நின்றான். பற்களைப் பட்டென்று கடித்த மாதிரி, அவனது தாடி நடுங்கி அசைந்தது. எழுந்து நின்று கொண்டு அவன் மெதுவான தொனியில் மேலும் பேசினான்:

"ஐந்து வருச காலமாக நான் ஒவ்வொரு தொழிற்சாலையாய் இடம்மாறித் திரிந்தேன். கிராமப்புறம் எப்படி இருக்கும் என்பதே எனக்கு மறந்து போயிற்று. கிராமத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமையைப் பார்த்த போது, அந்தச் சூழ்நிலையில் உயிரோடுகூட வாழ முடியாது என்று உணர்ந்தேன். புரிகிறதா? என்னால் வாழ முடியவே இல்லை. நீ இங்கே வாழ்கிறாய் அங்கு நடக்கின்ற அநியாயங்கள் எல்லாம் உனக்குத் தெரியாது. அங்கே பசிக் கொடுமை மக்களை நிழல் போலத் தொடர்ந்து வாட்டுகிறது. தின்பதற்கு ஒரு ரொட்டி-ஒரு சீனியும் கிடைப்பதில்லை. கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. பசிப்பேய் அவர்களது இதயங்களையே தின்று விழுங்குகிறது; முகங்களைக் கோரமாக்குகிறது. அந்த ஜனங்கள் வாழவில்லை; எட்டாத தேவைகளில் அழுகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே சமயம் அவர்களைச் சுற்றியுள்ள அதிகாரிகளோ, அவர்கள் கையில் ஒரு சிறு ரொட்டித் துண்டு கூடச் சிக்கிவிடாதபடி, கழுகுகளைப் போல கண்காணித்து வருகிறார்கள்! அப்படியே தப்பித் தவறி ஒரு முஜீக்கின் கையில் கொஞ்சம் உணவு கிட்டிவிட்டால், உடனே அதனைத் தட்டிப்பறிப்பதோடு அவனது கன்னத்திலும் அறைகிறார்கள்...."

ரீபின் மேசைமீது கையைத் தாங்கியவாறு திரும்பி பாவெலை நோக்கித் தலையைச் சாய்த்தான்:

"அந்தக் கொடிய வாழ்க்கையைக் கண்டு என் வயிறுகூட உள்ளடங்கிப் போயிற்று. அந்த வாழ்க்கையை என்னால் தாங்க முடியாது என்று நினைத்தேன். அப்புறம் எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்: 'இல்லை. நீ அப்படிச் செய்யக்கூடாது. மனதைத் தளரவிடக் கூடாது. இந்த வாழ்விலிருந்து நீ பிரிந்து செல்லக்கூடாது. உன்னால் அவர்களுக்கு உணவு அளிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் நீ அவர்களைச் சிந்திக்க வைக்க வேண்டும்! அதனாலேயே அங்கு தங்கினேன். மக்களுக்காகவும், மக்களின் மீதும் எனக்கு ஏற்பட்டுள்ள பகைமை, வெறுப்பு எல்லாம் என் இதயத்துக்குள்ளே பொருமிப் புகைந்து கொண்டுதான் இருக்கிறது. அந்த வெறுப் புணர்ச்சி இன்னும் என் மனத்தை-ஏன் இதயத்தைக் கத்திபோல் குத்திக் கொண்டிருக்கிறது!"

மெதுவாக அவன் பாவெலின் அருகே சென்று அவனது தோள்மீது கையைப் போட்டான். அவனது நெற்றியிலிருந்து வியர்வை வழிந்தது. கைகள் நடுங்கியது.

"பாவெல், எனக்கு உன் உதவி தேவை. நீ எனக்குப் புத்தகங்கள் கொடு. ஒரு முறை படித்தாலும், இரவெல்லாம் தூக்கமில்லாமல் தவித்து, சிந்தித்துச் சிந்தித்து வெறி கொள்ளச் செய்யும் புத்தகங்களாகக் கொடு. அவர்களது மூளையிலே ஒரு முள்ளம் பன்றியைக் குடியேற்ற வேண்டும். தனது முட்களைச் சிலிர்த்துக் கொண்டு நிற்கும் முள்ளம் பன்றி! அப்போதுதான் அவர்கள் விழிப்படைவார்கள். உங்களுக்காக எழுதுகின்ற நகரவாசிகளிடம் கிராமாந்திர ஜனங்களுக்காகவும் ஏதேனும் புத்தகங்கள் எழுதச் சொல். அவர்கள் எழுதுகின்ற எழுத்துக்கள் ஒரே துடிப்பும் உணர்ச்சியும் உஷ்ணமும் பொருந்தியனவாக இருக்கட்டும். கொள்கைக்காக கொலை செய்யவும் தயாராகும் வெறியை அந்த நூல்கள் மக்களுக்கு உண்டாக்கட்டும்!"

அவன் தன் கையை உயர்த்தி, ஒவ்வொரு வார்த்தையையும் நிதானமாக நிறுத்தி, தெளிவோடு அழுத்தத்தோடு சொல்ல ஆரம்பித்தான்:

"மரணம் தான் மரணத்தை வெல்லும்! அதாவது மக்களை மறுவாழ்வு எடுக்கச் செய்வதற்காக, மக்கள் சாகத்தான் வேண்டும்! பூமிப்பரப்பிலுள்ள இலட்ஷோப இலட்சமான மக்கள் புனர் ஜென்மம் எடுத்து, புது வாழ்வு வாழ்வதற்காக, நம்மில் ஆயிரம்பேராவது சாகத் தயாராயிருப்போம்! அதுதான் சங்கதி! மக்களின் புனர் ஜென்மத்துக்காக, விழிப்புப் பெற்ற மக்கள் குலத்தின் எழுச்சிக்காகச் சாவது மிகவும் சுலபம்!"

தாய் தேநீர் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்தாள்; ரீபினை ஏறிட்டுப் பார்த்தாள். அவனது பேச்சின் கனமும் வேகமும் அவளை அழுத்தி நசுக்கிக் கொண்டிருப்பதாக அவளுக்குத் தோன்றியது. அவனைப் பார்த்தவுடன் தனது கணவனை ஞாபகமூட்டும் ஏதோ ஓர் அம்சத்தை அவனிடம் காண்பது போல் இருந்தது. அவளது கணவனும் இப்படித்தான் தன் பற்களைத் திறந்து காட்டிக் கொண்டிருப்பான்; தனது சட்டைக் கைகளை சுருட்டி விடும்போது, இந்த மாதிரித்தான் கையை வீசிக் கொள்வான். அவனிடமும் இதே மாதிரிதான் பொறுமையற்ற கொடூரம் காணப்பட்டது. அது ஓர் ஊமைக் கொடூரம். ஆனால் இதுவோ ஊமையல்ல. இவனைக் கண்டு, அவளுக்கு பயம் தோன்றவில்லை.



"நாம் இதைச் செய்யத்தான் வேண்டும்." என்று தன் தலையை ஆட்டிக் கொண்டே சொன்னான் பாவெல். "நீங்கள் எங்களுக்குச் சகல புள்ளிவிபரங்களையும் கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஒரு பத்திரிகையை நடத்துவோம்."

தாய்க்குத் தன் மகனைப் பார்த்ததும் உள்ளூர மகிழ்ச்சி பொங்கிச் சிரிப்பு பிறந்தது. அவள் எதுவுமே பேசாமல் உடை உடுத்திக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பிப் போனாள்.

"நல்லது! நாங்கள் உனக்குச் சகல விபரங்களும் அனுப்புகிறோம். வாண்டுப் பிள்ளைகளுக்குக்கூட புரியும்படியாக, அவ்வளவு எளிமையான நடையில் நீங்கள் புத்தகங்களை எழுதி வெளியிடுங்கள்" என்றான் ரீபின்.

சமையலறையின் கதவுதிறந்தது. யாரோ உள்ளே வந்தார்கள்.

(தொடர்ந்து வீரும்)

---

## "சொல்லு கண்ணே..."

கவிதை

ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி

"உங்களோட பிறந்தநாளுக்கான எனது சிறிய அன்பளிப்புடன் கூடிய வாழ்த்துக்கள்: இதய பிராத்தனைகள்" மெதுவாய் இனிமையாய் அழகிய உதடுகளை அசைத்தாள் சஹானா.



"ஓ...!" என புருவமுயர்த்தி மகிழ்வுடன் ஏற்றான் ரகு. "எனது மனமார்ந்த நன்றிகள்...." அவள் பேசியது போலவே அவனும் மெதுவாய் உதடசைத்து புன்முறுவல் பூத்தான். அது ஒரு கவிதைப் புத்தகம். பளபளவென்ற அட்டையில் புதுக்கவிதைக் கோர்வையாய் இனிய புத்தகம்.

ரகுவின் விரல்கள் புத்தகத்தின் அட்டையைத் தடவின. கண்களில் ஒருவித இனம் புரியாத வேதனையின் சாயல் மெலிதாய்...... மிக மெலிதாய்.... தாளைப் பிரித்தவன். புதிய வாசனை முகர்ந்து பார்த்தான், மூடினான். மடியில் வைத்துக் கொண்டான். கண்கள் எங்கோ வெறித்தன. என்னவோ ஓர் கண்ணுக்குத் தெரியாத நினைவலைக்குள். வீழ்ந்ததாய் அவன் உணர்வுகள். பெருமூச்சை வெளிவிட்டான். தலை கவிழ்ந்தான்.

சஹானா திகைத்துப் போய் விழித்தாள். "என்ன ரகு....? ஏன் திடீரென? என்ன இப்படி?" வினவினாள்.

"ப்ச்....ஓ... ஒண்ணுமில்ல....சும்மா ஐ'ம் ஸொரி சஹா... உன்னப்பயங்காட்டினேனா?" திரும்பி வினவினான்.

அவள் ஆதரவாய் அவன் விரல்களைப் பற்றினாள். "சொல்லுங்க ரகு.. என்னவோ ஒரு மனக்கவலை உங்கள வாட்டுது. இல்ல.... நான் கொடுத்த இந்தப் புத்தகம் உங்க பழைய ரணங்களை அல்லது ஏதோ துயரத்தை மீட்டுது.. இல்ல....?"

"நீ நெனக்கிற மாதிரி எதுவுமில்ல சஹா....." பெருமூச்சு மீண்டும் வெளியேறியது. கண்களில் சிறியதாய் ஒரு கசிவு.

"சின்ன வயசிலிருந்தே எனக்கு கதை, கவிதைப் புத்தகங்களல உயிர். நிறைய்ய. வாங்கினேன். சேமிச்சேன். வாசிப்பு தான் என் மூச்சு. அப்பா கொடுக்கிற ஒவ்வொரு காசா சேர்த்துச் சேர்த்து புத்தகம் வாங்குவேன். படிப்பேன். கவனமா சேர்த்து வைப்பேன். என்னைத்தவிர வீட்டுல யாரும் அதை தொடக்கூடாது. தொட்டா எனக்கு பயங்க ரமாக் கோபம் வரும். பின்னால படிச்சு, தொழில் கெடச்சப்போ இன்னும் முன் னேற்றம். என் அறை பூராவும் புத்தகங்கள். என் 'ப்ரெண்ட்ஸ்' எல்லாருமே என்னோட அறைய 'மினி லைப்ரரி'ன்னு சொல்லி சிரிப்பாங்க..... ஆனா எனக்கோ என்னோட அறைதான் புனிதமான இடம். தேவா லயம்..... ரொம்ப பெருமையா எல்லா புத்தகங்களையும் வெச்சிருந்தேன்..... ஆனா....." சொல்லி நிறுத்த, சஹானா எதிர்பார்ப்போடு நோக்கினாள். "என்ன ஆச்சு....?" கலக்கமாய் வினவினாள். "யுத்தத்தோட கொடிய பிடியில எங்க வீடும் அகப்பட்டது. விழுந்த 'ஷெல்' வீட்டை மட்டுமல்ல என்னோட இதயத்தையும் நொறுக்கி தீக்கிரையாக்கிடுச்சு. எல்லாமே எரிஞ்சு போயாச்சு.." கண்ணீரோடு தொடர்ந்தான். "இப்ப கொழும்புல 'லொட்ஜுல' அஞ்சுபேர் ஒண்டியடிச்சு ஒரு அறையில இருக்கோம். எங்கம்மா நான் இந்த புத்தகத்தைக் கொண்டு போய் பத்திரமா வெக்கிறது?" மௌனம்!

---

## பிரிவினையின் விளைவு

உருவகக் கதை

கல்லாறு குலேந்திரன்

கூட்டில் கிடந்த முட்டைகளைத் தன் சிறகுகளால் அணைத்து வெப்பமூட்டி அடைகாத்த தாய்ப்பறவை குஞ்சுகளின் பிறப்பை எதிர்பார்த்திருந்தது.


முட்டைகளுக்குள்ளே போராட்டம் எழுந்தது. "நான் உன்னால் படும் துன்பங்கள் கொஞ்சமில்லை. இனியும் உன்னுடன் ஒத்துவாழ முடியாது. என்னைப் பிரிந்து போகவிடு" என்றது மஞ்சட்கரு.

இதனைக் கேட்ட வெண்கரு "ஏய் பேசாமல் இரு! நீயும் நானும் ஒன்றாய்ப் பிறந்தவர்கள். ஒரு வீட்டில் வாழ்பவர்கள்; ஒருவருக்கு ஒருவர் உதவியாய் இருக்க வேண்டியவர்கள்; குழப்பம் செய்யாமல் இரு" என்று புத்தி சொன்னது.

"நானா குழப்பக்காரன்? இது என் உரிமைப் பிரச்சனை! ஒரு வீட்டில் இருந்தாலும் நான் வேறு நீ வேறு. என் நிறம், குணம் வேறு: உன் குணம், நிறம் வேறு; உன்னுடன் ஒத்துவாழ என்னால் முடியாது" என்று மீண்டும் கூறியது மஞ்சட்கரு.

வெண்கரு பலமாகச் சிரித்தது. "அடேய் முட்டாளே! சிந்தித்துப்பார்! இந்தச் சிறிய வீட்டிற்குள் எல்லை போடச் சொல்கிறாய். இது சரியா? நான் பலம் மிக்கவன். நினைத்தால் அப்படியே நசித்து விடுவேன்." என்று சற்று உறைப்பாகச் சொன்னது.

மஞ்சட்கரு விடுவதாயில்லை. "நீ பலம் மிக்கவன்தான். அதற்குப் பயந்து அடிமையாக வாழ நான் விரும்பவில்லை. நான் இல்லாவிட்டால் உன்னால் குஞ்சை உருவாக்க முடியாது. எனது உதவியுந்தேவை. ஆனாலும் நீ என்னை அடிமையாக்க நினைக்கின்றாய்" என்றது.



"உன்னால் மட்டும் தனியாக என்ன செய்ய முடியும்? வீட்டைப்பிரிக்க நான் விடமாட்டேன். முடியுமானால் முயற்சி செய்து பார்" என்றது வெண்கரு.

வாக்குவாதம் முற்றி கைகலப்பில் நிறைவுற்றது.

நாட்கள் சில ஓடி மறைந்தன. குஞ்சுகளைப் பார்த்துக் காத்திருந்த தாய்ப் பறவை துக்கம் அடைந்தது. சந்தேகம் வலுக்க முட்டைகளைத் தன் அலகினால் கொத்தி உடைத்தது. ஏமாற்றம்! எல்லா முட்டைகளும் அழுகி, கூழாகி துர்நாற்றத் துடன் ஒழுகிக்கொண்டிருந்தன.

கருக்களின் "பிரிவினைச் சண்டையால்" குஞ்சு உருவாகாமல் முட்டைகள் பழுதான விடயத்தைப் புரியாமலே, நீண்ட பெருமூச்சுடன் தாய்ப்பறவை எங்கோ பறந்து சென்றது.



படிப்பகம்

# எல்லையில் இரண்டு தென்னை மரங்கள்

## அன்பு ஆனந்தி

"இந்த இரண்டு தென்னை மரங்களை விட்டுக் குடுக்கிறதாலை உனக்கு எதுவும் நஷ்டம் வராதுதானே?"

கௌரி கோபத்தில் பத்திரகாளி மாதிரி நின்றாள். கணவன் ரகுவோ அவளை வியப்புடன் பார்த்தபடி கதிரையில் அமர்ந் திருந்தான்.

"அம்மா எனக்கென்று நீ தந்த காணிக் குள்ள என்ன இருக்கு? அந்த இரண்டு மாமரம், இரண்டு பனைமரம் மட்டும்தான். ஆனா அக்காவோட காணிக்குள்ளதான் பலா, மா, தென்னை, பனை என்று வரிசையா நிற்குது" என்றாள் ஆத்திரமாக.

"அதுக்கு நான் என்ன பிள்ளை செய்யிறது. உன்ர காணிக்குள்ள வேண்டிய மரங்களை நடன். அது வளர்ந்து உனக்கு பலன் தரும்தானே?" என்றாள் கௌரியின் தாய் கோமதி.

"அது வளர்ந்து வர எத்தனை காலம் செல்லும்? இந்தக் கதையெல்லாம் எனக்கு வேண்டாம்."

"அப்ப என்னை என்னதான் செய்யச் சொல்றே?" கோமதி அலுத்துக் கொண்டாள்.

"நீங்க ஒன்றும் செய்ய வேண்டாம். அந்த மூலையில நிற்கிற இரண்டு தென்னை மரங்களையும் என்ர வளவுக்குள்ள நிற்கிறமாதிரி வேலியை அடிச்சுத்தரச் சொல்லி அக்காட்டச் சொல்லுங்க."

"நீ சொல்லுறது உனக்கே சரியாப் படுதா? எல்லைக் கல்லு வைச்சுத்தான் வேலி அடிச்சிருக்கு. உன்ர இஷ்டத்துக்கு மாத்த முடியுமே?" கோமதிக்கு கோபம் வந்தது.

"ஏன் முடியாது? வேலிக்கம்பியோட மரம் போறதால கம்பியை அந்தப்பக்கமா சுத்தி அடிச்சாப் போச்சுத்தானே."

இதுவரை வேலியில் நின்று இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த கௌரியின் அக்கா கல்யாணி "ஓஹோ அவ்வளவு தூரத்துக்கு வந்தாச்சோ. என்ர காணியிலிருந்து ஒருகிளை தன்னும் உன்ர வளவுக்குள்ள வரவிட மாட்டேன்" என்று கத்தினாள்.

கோமதியின் பாடு தர்மசங்கடமாய் போய்விட்டது. இந்த இரண்டு தென்னை மரத்துக்காக சகோதரிகள் சண்டைபிடிப்பது அவளுக்கு வெறுப்பாக இருந்தது. இருக் கிறதக் கொண்டு வாழத் தெரியாத முட்டாள் கள்.

கோமதி இளைய மருமகன் ரகுவை நிமிர்ந்து பார்த்தாள்.

அவனுக்கு இதை எப்படித் தீர்ப்பது என்றே புரியவில்லை. தன் மனைவியின் வேண்டாத நியாயமில்லாத ஆசையைப் போக்க அவனும் எத்தனையோ சொல்லிப் பார்த்துட்டான். அவள் கேட்ட மாதிரி இல்லை. மனைவியை அடித்து வழிக்குக் கொண்டு வரும் கணவன் அவனில்லை.

அக்காவும் தங்கையும் கொஞ்ச நேரம் தர்க்கப்பட்டு அமைதியானார்கள். கோமதி கல்யாணியை நாடிச் சென்றாள்.



"கல்யாணி! தங்கச்சி சொல்றமாதிரி அவளோட காணிக்குள்ள வருமானம் இல்லைதான். உனக்கு அப்படியில்லை. இந்த இரண்டு தென்னை மரத்தை விட்டுக் கொடுக்கிறதால உனக்கு எதுவும் நஷ்டம் வராதுதானே"

"முடியாது அம்மா. எதுக்காக நான் விட்டுக் கொடுக்க வேணும். அந்த இரண்டு தென்னை மரத்தால எனக்கு தேங்காய்ச் செலவு மிச்சம்."

"அப்படி நீ பார்க்கிறாய். உன்ர புருஷனுக்கு வேண்டிய வருமானம் வருகுது. ரகுவுக்கோ கூலி வேலை. சாப்பாட்டுக்கே அந்த வருமானம் போதாது. நீ விட்டுக் கொடுத்தா அந்தச் செலவை தங்கச்சி சமாளிப்பாள்."

"ஏன் நான் வசதியா வாழ்றது உனக்கும் தங்கச்சிக்கும் பொறுக்குதில்லையா? என்னால எதுவும் விட்டுக் கொடுக்க முடியாது. இந்தக் கதையை இனிமே கதைக்காத." கல்யாணி பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டாள்.

ரகு தன் மனைவியிடம் சமாதானம் பண்ணிக்கொண்டிருந்தான். "வேண்டாம் கௌரி மற்றவர்களின் பொருள்ல ஆசைப் பட்டா நமக்குத்தான் நஷ்டம். நாளைக்கே நான் நாலைந்து தென்னை மரங்கள வாங்கிக் கொண்டு வந்து நாட்டி விடுறன்."

கௌரி தலையசைத்தாள். கணவன் சொல்வதில் இருந்த உண்மை விளங்கி அமைதியானாள்.

அன்றிரவு மழை மெதுவாக பெய்யத் தொடங்கி அதுவே பெருத்த மழையாகி விட்டது. மக்கள் எல்லோரும் வீட்டிற்குள் முடங்கி விட்டனர். அதிகாலை நான்கு மணியளவில் காற்று பலமாக வீச, மரக்கிளைகள் முறிந்த பயங்கரச்சத்தம் கேட்டது. பொழுது விடியும் பொழுதுதான் காற்றும் மழையும் ஓய்ந்து அமைதியானது. கோமதி சேலையால் உடலைப் போர்த்தியபடி வெளியே வந்தாள். அவளின் கண்கள் கண்ட காட்சி திகைக்க வைத்தாலும் உள்ளூர சந்தோசமாய் இருந்தது.

வேலி எல்லையில் நின்ற அந்த இரு தென்னை மரங்களும் பலத்த காற்றினால் வேரோடு சாய்ந்து விட்டிருந்தன. 'என்னால் இனிப் பிரச்சனை வராது' என அத் தென்னை மரங்கள் கூறுவது போலிருந்தது கோமதிக்கு.

---

பத்மாவின் முடிவைக்கேட்டு ஒரு கணம் பிரதீப் கூட திடுக்கிட்டுத்தான் போயிருந்தான். ஒரு வகையில் அவள் சொன்ன முடிவிலும் தப்பில்லைதான். தொடர்ந்தும் இந்த சோகத்தை அவளால் எப்படித் தாங்கிக்கொள்ளமுடியும்? பல பேருக்கு முன்னால் எத்தனை காலந்தான் தொடர்ந்தும் அவளால் அவமானப்பட்டுக் கொண்டிருக்க முடியும்?

பத்மா-பிரதீப் திருமணம் காதல் திருமணமாக இருந்தாலும் இருவீட்டாரும் பூரணமாக சம்மதம் தெரிவித்திருந்தார்கள். திருமணம் முடித்து எட்டு வருட இல்லற வாழ்க்கையில் இவள் தன் கணவனால் ஒரு நிமிடம் கூட கண்ணீர் விட்ட சந்தர்ப்பங்கள் ஏற்படவே யில்லை. அந்தளவுக்கு இருவரும் ஒருவருக் கொருவர் தூய்மையான அன்பு செலுத்தி வாழ்ந்திருந்தார்கள்.

பொருளாதாரத்தில் கூட அவர்களுக்கு எந்தக்குறையும் இருக்கவில்லை-கொஞ்சி மகிழ ஒரு குழந்தையில்லை என்ற குறையைத் தவிர...!

"ஏன்டியம்மா... பத்மா.... நீ எப்பதான் எங்களுக்கு ஒரு பேரன பெத்து கொடுக்கப் போற?" மாமி கூற பத்மா மௌனித்து அழுதுதீர்ப்பாள்.

அன்றும் அப்படித்தான். பத்மாவின் தோழியின் பிறந்த நாள் வீட்டுக்கு சென்றிருந்த போதும் இதே விடயமாகத்தான் அவளால் பெரிதும் அவமானப்பட வேண்டி யிருந்தது.

கூறிவிட்டு கைகூப்பி அழுதவளை தூக்கி நிமிர்த்தி உதட்டில் முத்தமிட்டான். அவள் பாசத்துக்காய் சம்மதித்து...!

□□

பிரதீப்பின் இரத்தத்தில் குடும்ப வாரிசு உருவாக்குவதற்காய் வாடகைத் தாயாக விதுஷா அமர்த்தப்பட்டிருந்தாள்.

விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறி விட்ட இக்காலத்தில் பத்மா, பிரதீப் தம்பதியின் கருமுட்டையையும் விந்துவையும் கருக் கட்டச் செய்து வாடகைத்தாயான விதுஷாவின் கருப்பையினுள் விடப்பட்டிருந்தது.

□□

பிரசவம் நடந்து அன்று பத்தாவது நாள். பிரதீப்பின் வீட்டில் சகல வசதிகளும் இருந்ததால் பிரசவம் கூட வீட்டில் தான் நடந்திருந்தது.

"விதுஷா! இங்கபாருங்க... நாங்க ஒப்பந்தம் செய்தபடி இதுல 5 லட்சம் பணமிருக்கு.... வாங்கிட்டு குழந்தைய நீங்க எங்களுக்கு கொடுத்திட்டதா இதுல கையெழுத்து போட்டுத்தரணும்...." பிரதீப் காசை நீட்ட காசையும் குழந்தையையும் மாறி மாறிப் பார்த்தாள் அவள்.

"ம்... காச பிடிங்க...." பத்மா கூறி முடிக்க அவள் விழிகள் லேசாக நனையத் தொடங்கின.

"முடியாது.... என்னால முடியாது.!" அவள் கூற பத்மா ஒரு கணம் அப்படியே ஆடிப்போனாள்.

"பைத்தியகாரத்தனமா பேசாதீங்க...

# வாடகைத் தாய்....!



## ஹப்புத்தளையூர் எஸ். ஜெனாட்குமார்

இந்த வகையில் அவள் எடுத்த முடிவு தனக்கே சரியானதாகவே அவளுக்குப் பட்டது. ஆனாலும் பிரதீப்தான் மிகவும் குழம்பிப் போயிருந்தான்.

"பத்மா மடத்தனமா பேசாத...! உன்னத் தவிர வேற யாரையும் நான் கனவுல கூட நினைச்சிப் பார்த்ததில்ல... அப்படிப்பட்ட என்ன...!" அவன் முடிப்பதற்குள் அவள் குறுக்கிட்டாள்.

"அத்தான் பிளீஸ்... நீங்களே என்ன தப்பா நினைக்கக்கூடாது. என்மேல நீங்க வச்சிருக்கிற பாசம் எனக்கு நல்லாவே தெரியும். என்ன இந்த அவமானத்தில இருந்து காப்பாற்ற வேற வழியே இல்ல. இது தப்பே இல்ல. நீங்க எடுத்துக் கொள்ளத்தான் வேணும் அத்தான்"

5 லட்சம் போதாட்டா இன்னும் காசு தாரம். குழந்தைய முதல்ல எங்களுக்கு தாங்க...." பத்மா அழுதபடி கூற அவள் இருகரம் கொண்டு குழந்தையை அணைத்துக் கொண்டாள்.

"முடியாது என்னால... கொடுக்க முடியாது... பத்து மாதம் சுமந்து பெத்த குழந்தைய எந்தத்தாயும்... காசுக்காக விற்கமாட்டா...! தயவு செஞ்சி என்ன போகவிடுங்க.... பிளீஸ்..!" வடிந்துகொண்டு வந்த கண்ணீரோடு குழந்தையைத் தூக்கிக்கொண்டு அறையை விட்டு வெளியேறிய வாடகைத் தாயை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான் பிரதீப்,

அதுவும் பத்மா மயங்கி கீழே விழும் வரை...!

---

# கனவுகள் வாழ்க்கையல்ல.....!

முரசு 113 இல் கிண்ணியா சபருள்ளா எழுதிய 'காற்றில் நடக்கும் கனவுகள்' கதைக்குப் பதிலாக அமைகிறது இக்கதை.

சபா நீங்க நலமா?

இடிமன் நண்பன் அரபாத்திடம் இரண்டு ரூபாய் கடன் வாங்கி அனுப்பி வைத்த காதல் மடல்கண்டு மிக்க மகிழ்ச்சி. மிகவும் நன்றி.

நிஜத்தையே காற்றில் நடக்கும் கனவுகளாக்கித் தினமுரசில் தந்திரமாய்த் தந்திருந்



தீர்! பலே கில்லாடிதான் நீர்!

நானில்லாமல் காற்றுக்கூட உங்களுக்கு கரிவாயுவாகின்றதோ? மூக்குத் துவாரங்களுக்கிடையே உறிஞ்சப்படும் ஒட்சிசன்-நான் வெளித்தள்ளும் காபன் துணிக்கைகளாய் இருக்கக் கூடாதா.... என ஒவ்வொரு வினாடியும் கனவு கண்டு கொண்டிருக்கும் இனிய கவிஞனே! என்னாசைக் காதலா!

"என் பாதம் பட்ட இடத்தில் உங்கள் கண்கள் வட்டம் போட்டு ஒற்றி... உங்கள் ஆண்மையின் புனிதம் அதிகப் படுத்தப் படுகின்ற அதிசயங் கண்டு என் பெண்மை பெருமிதமடைகிறது!" உடைந்த ரெனோல்ட் 'பேனா உளி'யால் நீங்கள் செதுக்கி அனுப்பும் கவிதைச் சிற்பங்கள்... உடையாத நம் காதலுக்கு உறுதி கூறும் கடிதங்கள்.

உங்கள் உயிர் வழியிலே ஓடும் இரத்த அமேசன் நான்தானென்று ஊசி குத்திக் குருதி குடிக்கும் ராட்சத... சொறி.... பீட்ரூட் சதை நிறத்தழகரே!

நான் துப்பும் எச்சில் காற்றில் இனிமையின் நாற்றுக்கள்.

ஹிருதயத்தைக் கிழித்துக் கொண்டு போகின்றதோ?

வாஸ்த்தவம்தான்!

'வா கண்மணி! நாமிருவரும் காஷ்மீரத்துப் பனி நதியில் கட்டி எழுப்பப்பட்ட மல்லிகை மஞ்சத்தில் மனந்திறந்து பேசிக் களிப்போம்...!' என்று எழுதியிருந்தீர்கள். இந்த இடத்தில்தான் நீங்கள் தப்புப் பண்ணுகிறீர்கள். காஷ்மீரில் தற்போது பிரச்சனை.

அங்கே வேண்டாம்.

உங்களூரில்....

## வரக்காபொல - அமீருன்னிஷா

பெரியாற்றுமுனைச்-'சிப்பிமலை' உச்சியிலேறிக் கன்னாமரநிழலின் கீழமர்ந்து 'கண்ணா' என்று கொஞ்சி மகிழ்வதைப் போல் கனவில் நான் மிதக்க-என்னை நீங்கள் காஷ்மீருக்கழைப்பது நியாயமா கண்ணா...?

என்னது... எனக்கான தாஜ்மஹால் அவுஸ்திரேலியப் புல்வெளிகளில் அமைக்கப் பட்டுக் கொண்டிருக்கிறதோ.... ஐயோ... வேண்டாம்.

கிண்ணியாவில்....

காக்காமுனை-அரை ஏக்கர்ப் பக்கம் ஒரு சின்னக் குடிசை போதும்! (எனக்குத் தாஜ்மஹால் கட்டும் என் சாஜஹானே! முதலில்-உன் வீட்டு ஓலைப் பொத்தலால் ஒழுகும் மழைநீரை ஒடுக்குவதற்கு ஒரு வழி பண்ணு! பாவம் என் மாமியும்- மதினியும்!)

இந்தியாவின் அஜந்தா, இளகிப்போகும் எழில்கொண்ட சீகிரியச் சிற்பமான நான்-நயாகரா நதியில் சிறகு விரித்திருக்கும் அதீனா தேவதையோ....?

அதீதமான கற்பனை.

அதிகபட்ச வர்ணனை! வரக்காபொல-பஸ் நிலையத்தில் வறுத்த கடலை விற்கும்-மரியத்தின் மகளான என்னைப்போய்...

என்ன தலைவா! கற்பனையில் சிரிக்கின்ற கவிஞனே!

'கனவுகள் வாழ்க்கையல்ல-நிஜத்துக்கு வா!

வானத்தில் பறக்காதே
நிலத்துக்கு வா!'

என் கால்கொலுசில் கனவுகளை சப்தித்துக் கொண்டிருப்பவனே! பூக்களால் நமக்காகப் பேராதனைப் பூங்காவில் புதுப் பிக்கப்பட்டிருக்கும் புஷ்பக விமானம் தேவையில்லை...

ஞாபகங்களுடன் ஒரு தேவலோகப் பயணம் போக.. உன் வரக்காபொலக் காதலிக்கு... உங்களூர் ஊற்றடித் துப்பல் நானாவின் தோணி போதும்!

மூணு நாளா அடுப்பு எரியல்லன்னு பெத்த வயிறு பத்தி எரிய.... அவுஸ்திரேலியப் புல்வெளியில.... தாஜ்மஹால் கட்டுகிறா ராம்...

'கற்பனை செய்வதால் கோடிசுகம்!- இந்தக் காசினியில் கைகூடிவிடும்!' என்று பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராஜன்' பாடல் எழுதுவார். அவருக்கென்ன.. நமக்குச் சரிவருமா...?

"இருவரும்- பனிமேகங்களுக்கிடையே பறந்து செல்வோம்! இந்தத் தீய்ந்த மண் நமக்கு வேண்டாம்!" என்று எழுதியிருந்தாய்!

தீமைகளைத் தீய்க்க வேண்டிய சமகாலக் கவிஞனே!

புல்லாங்குழலின் மூச்சைப்
புயலாக்கிக் காட்டு என்றால்... நீ
பல்லாங்குழி விளையாடப்
பெண்களையா தேடுகிறாய்?
வேண்டாம்.... வேண்டவே வேண்டாம்.

உன் உடைந்த ரெனோல்ட் பேனா உடையாத ஓர் உலகத்தை உருவாக்கட்டும்... உன்னால் புதுயுகம் மலரட்டும்!

**கனவுலகில் மிதக்கின்ற கவிஞனே!**
**வானத்தில் பறக்காதே!**
**நிலத்துக்கு வா!**
**கனவுலகில் மிதக்காதே**
**நிஜத்துக்கு வா!**

---

# நித்தமும் இந்த நிழல்

## கமலினி-பாண்டிருப்பு

மாட்டுவண்டிகள் தங்கள் சில்லுவரிசையைக் காட்டியதால் சிதறிப்போய் குழிகள் கிண்டிய கிறவல்பாதை, அநாதைகளாய் படுத்துறங்கும் தெருநாய்கள், ஆதாம் ஏவாளின் நகல்களாய் ஆடையில்லாத சிறார்கள், தெருவோரம் பெட்டிக்கடை போட்டு கடலை விற்கும் மூதாட்டி, கண்கள் குழிவிழுந்து தொப்புள் சென்று முதுகை விசாரிக்கும் வறுமைப்பள்ளி மாணவனாய் அந்த வயோதிபர், கால்களிலே பாதணிகளின்றி சுடுமணலிற்கு சுவை கொடுக்கும் பள்ளிச் சிறார்கள். இவைதான் ஒவ்வொருநாளும் நான் காரியாலயம் செல்லும் போது என்னை வரவேற்கும் கிராமத்துத் தோரணங்கள்.

சிந்தனைகள் பலவாறு சிறகடிக்க காரியாலயத்தை நோக்கி நடக்கிறேன். எனது சகஊழியரொருவர் மிக அன்பான புன்னகைப் பூவை என்மீது உதிர்க்கிறார். மனது கொஞ்சம் இதமானது. வரவுப் புத்தகத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு எனது கடமையைச் செய்யத் தொடங்குகிறேன்.

மதிய உணவுவேளை அவசரமாய் எதையோ விழுங்கி அது பொறுத்தபோது தண்ணீரைக் குடித்து சாப்பாட்டு வேளையை முடித்து மீண்டும் அலுவலக வேலை.

சூரியன் ஓய்வெடுத்துக்கொள்ள மேற்கு வீட்டுக்குச் செல்லுகிறான். என் கடமையை முடித்துவிட்டு நானும் வருகிறேன். வழியில் அந்த சவுக்குத்தோப்பு. காலையில் காற்றுத் தேவதை வந்து கைகுலுக்கிக் கொள்ளாததால்



சோர்ந்து நின்ற தோப்பு, இப்போது தென்றல் பெண்ணின் முந்தானை தழுவ முகம்மலர்ந்து தலையாட்டி சிலிர்த்துச் சிரிக்கிறது. ஆகா! என்ன இதம். தென்றல்பெண்ணும் சவுக்குத் தோப்பும் சரசம் புரிவதை ஒளிந்தொளிந்து பார்க்கிறானோ கதிரவன், என்றல்லவா எண்ணத் தோன்றுகிறது.

என்ன இது? இந்த சவுக்குமரத் தோப்பின் காற்றுச் சங்கீதத்தையும் மீறி ஒரு கொலுசுக் கச்சேரி. பார்க்கிறேன். நான் கற்பனையில் காதலிக்கின்ற அதே பெண் ஆம்! அவளே தான். பட்டுப்பாதங்கள் பூமியில் படுவதும் மிக மெதுவாக எழுவதுமாய் ஒரு மந்திர நடைபோட்டு என்னை நோக்கி வருகிறாள். என் மேனியெல்லாம் யாரோ பூக்களை தூவுகிறார்கள். என் உள்ளத்திவிற்குள் மயிலாட, குயில் பாட, அருவியொன்று சலசலக்க, ஒரு வசந்தராகம் நடக்கிறது.

அவள் அருகில், மிக அருகில்....என் இதயப்பறவை நெஞ்சுக் கூட்டை விட்டு வெளியேறப் படபடக்கிறது. நான் நகரவில்லை. அவள் அருகில் வந்துவிட்டாள். அந்த இமைக்குடைகளின் கீழே நான் பத்திரப் படுத்தப்படுகிறேன். அவள் இதழ்கள் மெதுவாக விரிய மகரந்தக் குறுநகை மெதுவாகச் சொரிகிறது. எனக்குள்ளே ஆயிரம் பௌர்ணமிகள் முகங்காட்ட, அவள் மூச்சுக்காற்றை ஸ்பரிசிக்க ஒருஅடி முன்னே வைக்கிறேன்.

அடுத்த கணமே பாதாளத்தில் நிலை தடுமாறி விழுவதாய்.....

விழுவதாய்....அம்மா! அலறிவிட்டேன். விழிக்கதவு திறந்து கொண்டது. அறையில் ஒரே இருட்டு. கனவு அழகான கனவு. இந்த இயந்திர வாழ்க்கையில், என் ஏழைமக்களின் நிர்க்கதியைக் கண்டு நான் நிலைதடுமாறும் போது, நிம்மதிக்காக என் கற்பனைக் காதலியை பாாத்துக் கொண்டிருப்பேன். அவள் பார்வை என் இதயக் குஞ்சுக்குத் தலை தடவும்.

கடிகாரம் நள்ளிரவில் முள் காட்டி நின்றது. புரண்டு படுக்கிறேன். விடியும். விடிந்ததும் மறுபடியும் ஆரம்பமாகும் இந்தக் கிராமத்து நாடகம், சவுக்குத்தோப்பின் சரசம், என் கற்பனைக் காதலி அலுவலகம் எல்லாமே மாறி.....மாறி....

www.padippakam.com

# மூன்றாம் கை ஆனால் முதலாம் கை

"செல்லத்தான் வேண்டுமா சேரலாதா?"

என்றான் மன்னன் மருதுநாயக்கன்.

"ஆம், மன்னா. முடிவு உறுதியானது."

என்றான் சேரலாதன்.

இருவர் விழிகளிலும் குளம்.

"உற்ற நண்பனாய் உடனிருந்தாய். வீழ்ந்த என் முடி, வெற்றிக்கனி பறித்து, மறுபடி என் சிரமேறும் வரை, வலது கரமாய் கூடவே வந்தாய்! இப்போது ஏனடா போகிறேன் என்கிறாய்?"

"போதும் மன்னா- போருக்குள் வாழ்ந்தது. சூதும், வாதும், நாசமும், மோசமும் நிறைந்ததே அரசியல்! வேண்டாம் எனக்கு இதிலொரு பங்கு!"

"புயலுக்குள் தோள் கொடுத்தாய்; அலைச்சுழலுக்குள் கைகொடுத்தாய். பூநாகம் என்மீது விழுந்தபோதெல்லாம், விலகாமல் அருகிருந்தாய்! இன்று பூமாரி பொழிகிறது என்மீது; பொன்மாரி பொழிகிறது நம்மீது; போய் வருகிறேன் என்று நீ சொல்லும் ஒரு வார்த்தை பொல்லாத வேலாகப் பாய்கிறதே என்மீது!"

மன்னித்துக்கொள்ளுங்கள் மகாராஜா. போர்க்களத்தில் நிற்கும்வரை எதிரிகளால் மட்டும்தான் ஆபத்து; புகழ் களத்தில் நிற்கும்போதோ நண்பர்களாலும் ஆபத்து!"

"புரியவேயில்லையே சேரலாதா?"

என்றான் மருதுநாயக்கன் புருவங்களை உயர்த்திக்கொண்டு....!

"முகஸ்துதிகள் செய்ய நூறுபேர். வாய்உதிர்க்கும் வார்த்தைக்கு வரவேற்பு சொல்லி 'ஆமாம்' போட ஆயிரம் பேர். சிரிக்க வைக்கும் 'விகடம்' சொல்ல சில நூறு பேர். படையெடுத்தால் புகழ்பாடி பொன்கறக்க பலநூறு பேர். செருக்களத்தில் பகைவனின் வாள் சிரசை மட்டும்தான் அறுக்கும்; தருவதைப் பெறும் நோக்கில் தருமத்தை சூது கவ்வும்போதும் 'ஆகா' என்று ஆலாபனை செய்வோரின் நாவோ நாட்டையே அழித்துவிடும்! பெரும் கேட்டையே விளைவிக்கும்."

"முகஸ்துதி என்னும் மகுடிக்கு மயங்கும் நாகமல்ல நான்!"

"மன்னித்துக்கொள்ளுங்கள்! படுகளத்தில் வெல்லப்பட முடியத மகுடாதிபதிகள் பலர் பஞ்சணையில் வெல்லப் பட்டார்கள். இதம் சித்தம் மறக்கச் செய்யும்! பொல்லாத வாளுக்கு முன் குனியாத தலையும் பூமாலைக்கு முன் குனிவதுண்டல்லவா! புகழ் மொழிகளும் அப்படித்தான்!"

மன்னன் யோசித்தான். சமீப காலத்தில் சேரலாதன் போக்கே அவனுக்கு விசித்திரமாய்த் தெரிந்தது.

நம்பிக்கையாக நினைத்து உறவாடுகிறவர்கள் மீதெல்லாம், சேரலாதனோ பகையாடுகிறான்.

தற்காலிகமாய் விலகியிருக்கட்டும். புத்திதெளிந்தபின் திரும்பிவரட்டும். மன்னன் தீர்மானித்தான்.

மார்போடு அணைத்துக்கொண்டு முதுகில் தட்டி விடைகொடுத்தான்.

தினம் ஒரு விருந்து. மல்லிகைப் பஞ்சணையில் தினம் ஒரு தாமரை.

"வித்தகன் நீ! மதன கலைகள் மொத்தமும் கற்றவன் நீ! அணைப்பது ஒரு விதம், உன்னோடு ஆடிக் களைப்பதில் தனிச் சுகம்! ஆயர்பாடிக் கண்ணனும் ஆஜராகி உன்னிடம் காமன் கலை படிக்கலாம்!"



## தருவது — ரசிகன்

பூஜைக்கு வந்த மலர்கள் புகழ் பாடி மகிழ்ந்தன.

"உறவில்லா இரவில்லை. பருகும் இதழ் இல்லையென்றால் பஞ்சணையில் தூக்கமில்லை! நிறைவில்லா பொழுதாகும், சிறையாக ஒரு பாவை மார்மீது இல்லையென்றால்!"

என்றானது மன்னன் நிலை.

"பட்டுக் கன்னம் இதோ! பருவ மஞ்சம் இதோ! தொட்டுப் பாருங்கள்; தோகை விலகட்டும்; தொடர்ந்து பாருங்கள், விடியும் வரை சுகமே!"

பஞ்சணைப் பாவைகள் வஞ்சனையின்றி வாடிக்கையாகக் கிடைத்தார்கள்.

"நிலா முகம் இதுவோ? கலா மயில் இதுவோ? உலாப் போகும் நினைவில், இன்பச் சிகரம் வரை செல்வோம்!"

அணைத்தான், அணைத்தார்கள். அழைத்தான், குழைந்தார்கள்.

"சுவைகள் பல விதம்; சுவைப்பது உன் திறம்! கனிகள் உன் வசம்; பசியாறலாம் இனி நிதம்!"

சொல்லச் சொல்லப் பசித்தது. உண்ண, உண்ண இனித்தது. நித்தமும் இரவு சுவையால் நிறைந்தது.

"கள்ளூறுதோ, இல்லை தேனூறுதோ, அல்லது, பாலூறுதோ இந்தப் பனியிதழில்?"

மன்னன் மருதுநாயக்கன் வண்ண மேனிகளின் ஆராய்ச்சி நாயகனாகினான்.

"வாழைத் தண்டாடுதோ; அதன் மேலே கோலக் கனியாடுதோ; அம்மாடி என் உள்ளம் சதிராடுதே, சரச நினைவாகுதே!"

ரசித்துக் கொண்டேயிருந்தான். தகித்துக் கொண்டேயிருக்க, தேன் குடங்களை தருவித்துக் கொண்டேயிருந்தான்.

"கால்கள் நான்கும் பின்ன, கரங்கள் தேவை சொல்ல, புலன்கள் களிப்பில் துள்ள. இது ஒரு புதுக்கதைதான். முடிவில்லாத தொடர்கதைதான்."

என்றனர் மங்கையர்.

"பூஞ்சோலைக்குள் அழைத்தது இளமை! பொன்தாமரை மலருக்குள் வண்டு விழுவது வழமை! நாள் என்ன, பொழுதென்ன, நமக்கென்ன, இன்பத்தை வரவுவைப்போம், இளமையை செலவு செய்வோம்! சலவைக்கு போட்ட துணிபோல நம்மனதினை நாளும் புதுமை செய்வோம்!"

## இலக்கிய நயம்

மன்னன் நாட்டை மறந்துபோனான்.

ஒரு நாள் இடி விழுந்தது. எல்லையில் எதிரிப்படைகள்.

கோட்டையிலே முரசு அதிர்ந்தது. வளைகரங்களோடு விளையாடிக் கொண்டிருந்தவனை வாளேந்த வா என்று அழைத்தது.

□□



எதிரியின் வியூகத்திற்குள் மன்னன் மருதுநாயக்கனின் படைகள்.

மூன்று நாள் போரில் வேற் படை அழிந்தது. விற்படை வீழ்ந்தது. குதிரைப் படையும், யானைப் படையும் பாதியாகக் குறைந்தது.

மருதுநாயக்கனின் புகழ் பாடியவர்கள் இப்போது, எதிரி நாட்டு வேந்தனுக்கு வெண் சாமரம் வீசப் போய்விட்டார்கள்.

மருதுநாயக்கன் என்ற பெயருக்குப் பதிலாக, எதிரி நாட்டு வேந்தனின் பெயரை குறித்துக் கொண்டு, தங்கள் ஆலாபனையை மாற்றிக் கொண்டார்கள்.

நாலாம் நாள் போர்.

முரசுகள் முழங்கின.

பாய்ந்தன படைகள், படுகளம் விரிந்தது.

தோல்வி உறுதி என்று முடிவு செய்தான் மருதுநாயக்கன்.

எதிரிப்படையின் தளபதியோடு போர் செய்த மன்னன், தடுமாறி தேர்த்தட்டில் மல்லாந்து சாய்ந்தான்.

இதுவே தருணம்.

எதிரிப்படை தளபதி அம்பு தொடுத்து, மருதுநாயக்கனின் மார்பை குறிபார்த்தான்.

வில்லிலிருந்து அம்பு புறப்பட தயாரானபோது, கணைதொடுத்த தளபதியின் கரம் அறுந்து நிலத்தில் வீழ்ந்தது.

இரத்தம் தோய்ந்த வாளோடு நின்றான் சேரலாதன்.

போரின் போக்கு மாறியது. எதிரிப் படை விட்டால் போதும் என்று விரைந்தோடியது.

மருதுநாயக்கனின் விழிகளில் இருந்து அருவி கொட்டியது.

"ஆடை நழுவும்போது, நாம் சொல்லாமலேயே நமது கரம் அதனைச் சரிசெய்யும். தூய நட்பும், துன்பம் வரும்போது, நாம் அழைக்காமலேயே வந்து துணை நிற்கும். திருவள்ளுவர் சொன்ன குறளுக்கு அர்த்தமானாய் சேரலாதா!"

என்றான் மன்னன். சேரலாதனின் வலது கரம் எடுத்து, முத்தமிட்டான்.

"இது எனக்கு மூன்றாம் கை. ஆனால் முதலாம் கையாக என்றும் முன்வந்து உதவும் கை."

என்றான் விழிகளை துடைத்தபடி.

**"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு"**

குறள் - 788, அதிகாரம் - 79

## குறுக்கெழுத்துப் போட்டி இல-115

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ■ | 2 | | | 3 | 4 |
| 5 | | | | ■ | | |
| 6 | | | | 7 | ■ | |
| | ■ | | ■ | | 8 | |
| | ■ | | ■ | | | ■ |
| 9 | | ■ | 10 | | | |
| ■ | 11 | | | | | ■ |

### இடமிருந்து வலம்

01. உலக இன்ப, துன்பங்களைத் துறந்து வாழ்பவர்.
05. இது பிள்ளையாருக்கும் இருக்கிறது.
06. ஒருவகைத் தானியம்.
09. சிற்றரசர்கள், சக்கரவர்த்திகளுக்குக் கொடுப்பது.
10. ஒருவர் ஒரு செயலைச் செய்ய முன்னர், இதைச் செய்ய வேண்டும்.
11. குசேலரின் 27 பிள்ளைகளில் ஒருவர்.

### மேலிருந்து கீழ்

01. மங்கள விழாக்களிலும் ஆலயங்களிலும் நறுமணம் பரப்புவது.
02. வண்டி ஓடுவதற்கு இது அவசியம்.
03. ஓர் இசைக்கருவி.
04. முரசில் இதற்காகவும் பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது.
07. பணியாள் என்றும் அழைக்கப்படுவார்.
08. ஒரு வீட்டை சிலகாலம் பயன்படுத்த ஏற்படுத்தப்படும் ஒப்பந்தம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 02.09.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-115
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-113ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சு | ர | ங் | 2 க | ம் | ■ | 3 ஆ |
| ண் | ■ | ■ | 4 த | ர | 5 க | ர் |
| 6 ட | மா | ர | ம் | ■ | தி | வ |
| ல் | ■ | 7 உ | ப | கா | ர | ம் |
| ■ | 8 பா | ல | ம் | ■ | வ | ■ |
| ■ | க் | க | ■ | 9 ப | ன் | றி |
| ■ | 10 கு | ம் | ப | ல் | ■ | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 113இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. ரி. கோபிராஜ், கொழும்பு-06..
2. செல்வி. வதனா கனகராஜா, திருகோணமலை.
3. செல்வி. ஜாரியலா றியால், பதுளை.
4. சி. ஹபீபுர் ரகுமான், தெஹிவளை.
5. என். யோகராஜா, வவுனியா.
6. என். மன்சூர், புத்தளம்.
7. நூருல் ஷிபா ரஷீத், உடுதெனியா.
8. ரீ. பரிமளா தேவி, ஹல்கரன் ஓயா.
9. என். மகாலிங்கம், வாழைச்சேனை.
10. திருமதி. கே. மனோன்மணி, மஸ்கெலியா.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்



சிந்தியா! காதலையும் ஒரு கலை என்று சொல்லலாமா?

எம்.மனாஸிர்-மாத்தளை

சொல்லலாம் மனாஸிர். திருட்டுக்கூட ஒரு கலைதானாமே. இதயத் திருட்டு மட்டும் சற்றுவித்தியாசமானது. திருடிய இதயத்திற்குள்ளேயே சிறைவாசமும்.

□□

கண்ணடித்தால் காதல் வரும் என்று பாட்டு. என் காதலும் அப்படியே பிறந்துள்ளது. தொடரலாமா?

ச.பரமலிங்கம்-முனைக்காடு

கண்ணடித்தேன் காதல் ஓ.கே. என்கிறீர்கள். கன்னத்திலடித்தால் என்ன செய்வீர்கள்? அதையும் யோசித்துவிட்டுத் தொடருங்கள்.

□□

இவ்வுலகில் போட்டியில்லாத பதவிகள் ஏதாவது உண்டா சிந்தியா?

ஏ.எச்.ராஸின் மொகமட்-ஏத்தாளை

உண்டே, அது மிக உயர்ந்த பதவி, அதுவே இறுதியான பதவியும் கூட. சட்டென்று புரிந்திருக்குமே!

□□

சிந்தியா-உமக்கு நீச்சல் தெரியுமா?

வ.தேவகி-மட்டக்களப்பு

தெரிந்தும் என்ன பயன் தேவகி? நீந்தக்கூடிய நிலையிலா கடலில் தூக்கிப் போடுகிறார்கள்?

□□

கடி ஜோக் ஒன்று சொல்லுங்களேன்?

ஆர்.மகேஸ்வரன்-புத்தளம்

ஹலோ- யாரங்கே டாக்டரா? கடி ஜோக்ஸ் கேட்கிறாரே மகேஸ்வரன், எடுத்து விடட்டுமா? வேண்டாம் சிந்தியா-தடுப்பூசி தீர்ந்து போச்!

□□

நவாலி தேவாலயம் தரைமட்டமானது என்கிறது ஒரு செய்தி. தாக்கப்படவேயில்லை என்கிறது இன்னொரு செய்தி. இதில் எது பொய்?

க.தெய்வேந்திரம்-திருக்கோணமலை

இரண்டுமே பொய்! நவாலி தேவாலயம் தாக்கப்பட்டு அந்த அதிர்வில் ஜன்னல்கள் தூக்கிவீசப்பட்டன. கூரையும் சேதமானது. தேவாலயத்தில் இரத்தம் தோய்ந்து கிடந்தது என்று யாழ் ஆயர் சொல்லியிருக்கிறார். தாக்கப்பட்டது உண்மையும்கூட. நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலய வளாகத்திற்குள் தேவாலயத்தை ஒட்டியதாக ஒரு பாடசாலையும் இருந்தது. அதன் பெயர் சென் பீற்றர்ஸ் பாடசாலை. தஞ்சம் தேடிய மக்கள் அந்தப் பாடசாலைக்குள் புகுந்தார்கள். தாக்குதலில் அவர்கள்தான் கொல்லவும் பட்டார்கள். பாடசாலையும் இடிந்து போனது. எல்லாம் இருக்கட்டும், தேவாலயம் தாக்கப்படவில்லை என்பதை மட்டுமே திரும்பத் திரும்ப சொல்பவர்கள், மக்கள் கொல்லப்பட்டதை பற்றி மட்டும் ஏன் மூச்சே விடவில்லை.

□□

மனிதர்கள் காணாமல் போனால் எப்படியிருக்கும்?

ஏ. வாசீட்-கொழும்பு-10

இப்போது மட்டும் என்னவாம்? அடிக்கடி காணாமல் போய்க்கொண்டு தானே இருக்கிறார்கள்.

□□

இஸ்ரேலிய-பாலஸ்தீன பேச்சுக்களின் இன்றைய முன்னேற்றம் எப்படி?

எம்.சுதர்ஸன்-கண்டி

ஜெருசலேத்தில் குண்டுவெடித்திருக்கிறது. ஹமாஸ் இயக்க தீவிரவாதிகளைப் பிடிக்க யாசீர்அரபாத் ஆள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்.

□□

பேச்சுக்குத் தயார் என்று புலிகளது ஆலோசகர் அறிவித்திருக்கிறார் அல்லவா? என்ன நினைக்கிறீர் சிந்தியா?

செல்வி.கு.மஞ்சுளா-நீர்கொழும்பு

அரசுக்கு கிடைத்துவரும் வெளியுலக ஆதரவை எந்தக் கோணத்திலிருந்து கிள்ளிப் போடலாம் என்று புலிகள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

□□

புத்தளத்தில் முஸ்லிம் மக்களை புலிகள் எச்சரித்திருக்கிறார்கள் என்பது உண்மையா?

உ.பதியூதின்-மருதானை

வெறும் புரளி! முஸ்லிம் மக்கள் மீது தாம் நடத்திய தாக்குதல்களுக்கே புலிகள் உரிமை கோரியது கிடையாது. அப்படியிருக்க 'லெட்டர் ஹெட்'டில் கடிதம் எழுதிவிட்டா தாக்குதல் நடத்துவார்கள்? புலிகளைப் பற்றித் தெரியாதவர்கள் புலிகளது பெயரில் ஆடும் நாடகம்தான் அந்தப் புரளி.

□□

காதலிக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமா?

சி.மதிவேந்தன்-சிலாபம்

பெயரிலேயே மதியை வைத்துக் கொண்டா இப்படியொரு கேள்வி? காதலைக் கற்றுக் கொள்ளவும் காதலிக்க வேண்டும்.

□□

வேலூர் சிறையுடைப்பைப் பற்றிச் சொல்ல முடியுமா சிந்தியா?

பா.தவமலர்-மாத்தளை

காரணமானவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்தான். அவர்தான் "பூட்டிய கதவம் திறந்தது வேங்கையே வெளியே வா" என்று பாடியிருக்கிறார். அவர் பாடியது தமக்காக என்று புலிகள் நினைத்ததற்கு அவரை குற்றம் சொல்ல முடியாது என்கிறார் எதிர்தரப்பு வக்கீல் தமிழ் பித்தன். பாடியவர் யார்? பாரதிதாசன்.



படிப்பகம்

www.padippakam.com

# மகாபாரதம்

அங்கம் 91

இவ்வாரம் (27.08.95 ஞாயிறு மாலை 7.00 மணி) எம்.ரீ.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும். அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:**

தானத்தில் தலைசிறந்த தன்னிகரில்லா வீரன்
தன்னுயிரைத் தானீந்து தர்ம நெறிதனைக் காத்தான்!
கதிரவனின் ஒரு மகனாய் கர்ணனவ னுதித்தாலும்
காலமெலாம் கொடுங்கவலைக் கடலாடியே மறைந்தான்!
உயர்குடியில் பிறந்தாலும் உத்தமனாய் வாழ்ந்தாலும்
உலகவனை ஏற்கவில்லை; உருக்குலைந்தே வருந்தியது!
மித்திரனுக்கே தன்னை அர்ப்பணித்து மரணித்த
உத்தமனையின்று உலகனைத்தும் போற்றுதம்மா!

—காட்சி தொடக்கம்—

போர்க்களம்- பாண்டவர்கள் படைகளுடன் அணிவகுத்து முன்னேறுகின்றனர். கவுரவர் படைகளை காணாது முன்னேறாமல் யுதிஷ்டிரர் நிறுத்தும்படி கூறுகிறார்.

**யுதிஷ்:** கவுரவர் படைகள் பாசறையை விட்டு வெளிவராதது புதுமையாக இருக்கிறதே!

**பீமன்:** அப்போ அவர்களுடைய பாசறை சென்று பார்க்கலாமே அண்ணா!

**திஷ்ட:** (நகைத்தவண்ணம்) துரியோதனன் பாசறையை விட்டு ஓடிவிட்டான் போல் தெரிகிறது!

**கிருஷ்:** இளவரசர் திஷ்டத்துய்மனே! துரியோதனனிடம் பல குறைபாடுகள் இருக்கலாம்! ஆனால் அவனைக் கோழை என்று கணக்கிட முடியாது! அவன் ஒரு சுத்த வீரன். வெற்றிவாகை சூடியவனாகவோ அல்லது வீரமரணமடைந்து சடலமாகவோதான் துரியோதனன் போர்க்களம் விட்டு வெளியேறுவான். எதிரியானாலும் ஒரு வீரனை இகழ்வாகப் பேசுதலாகாது!

**திஷ்ட:** அப்போ அவர்கள் வெளியே வரும்வரை காத்திருக்க வேண்டியது தானா....?

**யுதிஷ்:** துரியோதனன் ஒரு வேளை எம்முடன் சமாதானம் பேச நினைத்திருக்கலாம்! காவலா! துரியோதனன் எங்கிருக்கிறான் என்று பார்த்து வா!....

—காட்சி மாற்றம்—

கவுரவர் பாசறை-அஸ்வத்தாமன் அமைதியற்றவனாக தடுமாறுகிறான்.

**அஸ்வ:** இளவரசர் துரியோதனன் எங்கு சென்றார் என்பது தெரியவில்லையே!

**கீர்த்திவர்மன்:** இளவரசர் எங்கு செல்ல வேண்டியிருந்தாலும் படை நடத்துவதற்கான தளபதியை நியமித்து விட்டுச் சென்றிருக்கலாமே! ஆச்சாரியார் அவர்களே! தாங்களாவது படைத் தளபதியை நியமிக்கலாமே!

**கிருபா:** எனக்கு அந்த அதிகாரம் இல்லையே!

**கீர்த்தி:** தாங்களேன் தளபதியாக இருக்க முடியாது?

**கிருபா:** படைத்தளபதிப் பதவியை எவரும் தாங்களாகவே பொறுப்பேற்பதில்லை! அப்பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும்!

**அஸ்வத்:** அவர்கள் முன்னேறி வந்து நம்மை இம்சைப்படுத்தும்வரை பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?

**கிருபா:** தர்ம நியாயங்களின் இருப்பிடமான யுதிஷ்டிரர் அத்தகைய நிலைக்குச் சம்மதமளிக்க மாட்டார்! துரியோதனன் உயிருடன் உள்ளவரை அவர் இங்கு வரப்போவதில்லை!

—காட்சி மாற்றம்—

போர்க்களம் - ஒரு வேட்டைக்காரனுடன் காவலன் ஒருவன் யுதிஷ்டிரரிடம் வருகிறான்.

**வேட்டை:** வணக்கம் மகாராஜா! சூரியோதயத்துக்கு முன்னர் இளவரசர் துரியோதனர் ஏரிக்குள் இறங்குவதைப் பார்த்தேன்!

**யுதிஷ்:** அப்போ துரியோதனன் தற்கொலை செய்துவிட்டானா?

**கிருஷ்:** துரியோதனன் மாயாஜாலங்கள் தெரிந்தவன். தன்னிடம் படைபலம் அதிகம் இல்லை என்பதை அவன் அறிவான். அவனுடைய அணியில் அவனுடன் அஸ்வத்தாமன், கிருபாச்சாரியார், கீர்த்திவர்மன் ஆகியோரே எஞ்சியுள்ளனர். ஆகவே ஏரியில் புகுந்து சற்று ஓய்வெடுக்க துரியோதனன் சென்றிருக்கலாம்!

பாண்டவர்கள் கிருஷ்ணருடன் வேட்டைக்காரனைத் தொடர்ந்து ஏரிக்கரையை அடைகின்றனர்.

**வேட்டை:** இதோ! இங்குதான் இளவரசர் புகுவதைக் கண்டேன்!

**யுதிஷ்:** வாசுதேவா! வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டிய இக்கால கட்டத்தில் என்மனம் வேதனைப் படுகிறது. பிதாமகர் பீஷ்மர், துரோணாச்சாரியார், எங்கள் மூத்த அண்ணன் கர்ணனைப் போன்ற மாபெரும் வீரர்களைக் கொண்ட படை இத்தகையதொரு முடிவினை அடைந்திருப்பதை எண்ணி கவலை கொள்ளாமல் இருக்க முடியவில்லையே!

**கிருஷ்:** மூத்தண்ணா! துரியோதனன் உயிருடன் இருக்கும்வரை தாங்கள் வெற்றி பெற்று விட்டதாகக் கருதுவது தவறு! போர் முனையில் உயிரிழந்த வீரர்களையிட்டுக் கவலைப்படுவதும் சரியல்ல. போரில் வெற்றி பெறுவது மட்டுமே இலக்காகப் போவதில்லை. தூய்மையான-ஒளிபொருந்திய புதிய சமுதாயத்தை உருவாக்குவதே முக்கியமான குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்! அதுதான் தர்மம்! அரசரே! தர்மத்தின் உச்சத்தை அடைவதற்கான உங்கள் கடமையைச் செய்யுங்கள்!

இவ்வேளை கவுரவ வீரர்களும் ஏரிக்கரைக்கு வந்து சேர்கின்றனர்.

**கீர்த்தி:** குலகுரு அவர்களே! பாண்டவர்கள் இங்கு ஏன் வந்துள்ளனர்.?

**கிருபா:** துரியோதனன் இங்குதான் மறைந்திருக்கிறான் போலும்!

**அஸ்வத்:** மாமா அவர்களே! துரியோதனனைப் போன்ற ஒரு வீரன் சாவைக் கண்டு பயந்து ஒளிந்து கொண்டான் என்று கீழ்த்தரமாக பேசலாகாது. சுத்தவீரர்கள் தங்கள் சாவினை அணைக்க தாங்களாகவே முன்வருவார்கள்.

**கீர்த்தி:** துரியோதனன் இந்த ஏரியில்தான் இருக்கிறார். அவருக்கு நாம் துணை புரிய வேண்டும்!

**அஸ்வ:** துரியோதனன் பெருமைக்கு நாம் அவ்வாறு களங்கம் ஏற்படுத்துவது அழகல்ல. அவருடைய வாழ்க்கையில் மிக முக்கியமானதும் இறுதியானதுமான போர் இது! துரியோதனனைப் போன்ற வீரர்கள் ஒரு தடவைதான் பிறப்பார்கள். பாண்டவர்கள் எல்லோரும் சேர்ந்து துரியோதனன் மீது பாய்ந்தால் மட்டுமே நாம் இதில் தலையிட வேண்டும்!

**கிருபா:** அஸ்வத்தாமன் கூறுவதுதான் சரி! நாம் மூவரும் உயிருடன் இருப்பது துரியோதனனுக்குத் தெரியும். அவசியம் ஏற்பட்டால் அவர் எம்மை அழைப்பார். அதுவரை காத்திருப்போம்!

* * *

**யுதிஷ்:** ஓ மதுசூதனா! துரியோதனன் அவனுடைய சக்தியினால் ஏரியின் நீரை அமைதியாக வைத்திருக்கிறான். வேடுவன் கூறியது போல் துரியோதனன் இங்குதான் இளைப்பாறுகிறான். தெய்வேந்திரன் இன்று துரியோதனன் துணைக்கு வந்தாலும் நான் எதிர்த்துப் போராடுவது உறுதி!

**கிருஷ்:** (சிரித்தவண்ணம்) பாவம்-தெய்வேந்திரன் உங்களுக்கு என்ன தீங்கிழைத்தார்? இந்தத் தர்மயுத்தத்தில் அவர் உங்களுக்கு உதவவில்லையா? கர்ணனின் கவசகுண்டலங்களை இந்திரன் யாசித்துப் பெற்றிராவிட்டால், அவனை எவரும் கொன்றிருக்க முடியாது; துரியோதனனுக்கும் இக்கதி ஏற்பட்டிருக்காது. பெரியண்ணா! அநீதியின் சின்னம், கொடுமையின் அவதாரம், பொறாமையின் இருப்பிடமான துரியோதனன் எவ்வகையிலும் கொல்லப்படுவது அவசியம்!

நீருள் அமர்ந்திருக்கும் துரியோதனனுக்கு கேட்கக்கூடியதாக யுதிஷ்டிரர் குரல் கொடுக்கிறார்.

**யுதிஷ்:** துரியோதனா! சமாதான சகவாழ்வுக்குரிய அத்தனை வழிகளையும் அடைத்து இந்தக் கொடிய போருக்கு வழி சமைத்தவன் நீயே! பிதாமகர் பீஷ்மர் அம்புப்படுக்கையில் வேதனைப்படுவதும், பரசுராம மாமுனியின் சீடரான எமது குருநாதர் எம்மிடமில்லாமல் போனதும், எமது பெரியப்பா மாமன்னர் தனது 99 புதல்வர்களைப் பறிகொடுத்ததும் உன்னால் ஏற்பட்ட துயரங்களே! இந்த யுத்தத்தின் உச்சக்கட்டத்தில் இந்த நீர் நிலையுள் ஏன் பதுங்கிக் கொண்டிருக்கிறாய்? தோல்வியை ஒப்புக்கொள்; அல்லது வந்து எம்முடன் போரிடு! சாவுக்குப் பயந்து உன் வீரப்பரம்பரைக்கு இழுக்குத் தேடாதே! உனக்கு இராச்சியம் வேண்டுமானால் உன்னுடைய மூத்த சகோதரனான என்னிடம் இருந்து பெற்றுக்கொள்! அது எமது உறவுடன் கூடிய உறவாகக் கருதப்படும்! சத்திரியனாகப் பிறப்பதால் மட்டும் பயனில்லை; ஒருவருடைய செயல்களே சத்திரியன் என்ற பட்டத்தைத்தரவல்லது!

**துரி:** (கோபமாக-பலமாகக் கத்தியவண்ணம்) யுதிஷ்டிரரே! நான் பயத்தினால் இங்கு வந்து பதுங்கியிருக்கிறேன் என்றா கருதுகின்றீர்கள்? இல்லை! இல்லவே இல்லை! பாண்டவர்களே! உங்களுடைய பிறப்பே சந்தேகத்துக்குரியது. நீங்கள் கோழைகள் என்பதை பல சந்தர்ப்பங்களில் நிரூபித்து விட்டீர்கள்! பிதாமகரை சூதினால் அம்புப்படுக்கையில் வீழ்த்தினீர்கள்! குரு துரோணாச்சாரியாரை சூழ்ச்சியால் கொன்றீர்கள்! எனது சகோதரனின் நெஞ்சைப் பிளந்து இரத்தம் குடித்ததனால் நீங்கள் மனிதர்களே அல்ல என்பது நிரூபணமாகிவிட்டது. எனது நண்பன் கர்ணனையும் வஞ்சகமாய் வீழ்த்தினீர்கள்! மாதா குந்தியின் வயிற்றிலுதித்த நீங்கள் அந்தத் தாய்க்கே அவமானத்தைத் தேடித் தந்தீர்கள்! இத்தகைய கொடுமைகளை எண்ணியே என் உடல் கொதிக்கிறது. அதனால் ஏற்பட்ட உஷ்ணத்தைத் தணிக்கவே இந்த நீர் நிலைக்குள் புகுந்தேன். குந்தி மைந்தர்களே! எந்தவித எதிர் விளைவுகளையும் கருதாமல் உங்களுடன் இப்போ போர் புரியப்போகிறேன். நான் வென்றாலும் அஸ்தினாபுரி சிம்மாசனம் இனி எனக்குத் தேவையில்லை. அந்த அரியணையில் என்னை அமரச் செய்து அழகு பார்க்க ஆசைப்பட்ட எனதருமைத் தம்பிமார்கள் இப்போது இல்லை. எனதருமை மாமா இன்று உயிருடனில்லை. உயிருக்குயிரான என் நண்பன் கர்ணனும் மறைந்து விட்டான்! நான் மேலானவன் என்பதை இந்த உலகறியச் செய்ய நான் உங்களுடன் போரிடுவதே எனது தலையாய கடமை!



**அர்ச்:** (கோபமாக) துரியோதனா! இப்பொழுது நீ பேசவில்லை! உனது தோல்விதான் பேசுகிறது. எங்களிடம் தரப்போவதாகக் கூறுகிறாயே...! அந்த இராச்சியம்-அது உனக்குரியதாக என்றுமிருக்கவில்லை-இன்றும் அது உன்னுடையதல்ல; எங்களுக்குரியது-அதனை நாங்கள் அடைந்து விட்டோம். இப்போது உன்னால் தரக்கூடியது ஒன்றே ஒன்றுதான்! அதுதான் உன் உயிர்!

**துரி:** அர்ச்சுனா! உன் நாவை அடக்கு! நான் இப்போது அந்த நாராயண சைனியத்தைப் பார்க்கிலும் அதிக பலம் பெற்றவனாக இருக்கிறேன்!

இவ்வாறு கர்ஜித்த வண்ணம் ஏரியுள்ளிருந்து வெளியேறி கரைக்கு வருகிறான் துரியோதனன். துரியோதனனின் நிலை கண்டு கிருஷ்ணர் சிரிக்கிறார்.

**துரி:** உண்மையில் நீங்கள் அனைவரும் கோழைகளே! எல்லோரும் ஆயுதபாணிகளாக வந்திருக்கிறீர்கள்! நான் நிராயுதபாணியாய்...காயங்களுடன் ...களைத்துப்போய் நிற்கிறேன்! எனது 99 சகோதரர்களை இழந்து, எனதருமை நண்பன் கர்ணனைப் பறிகொடுத்து, குரு துரோணாச்சாரியாரின் முடிவினைக்கண்டு, மாமா சகுனியின் சாவினைக்கண்டு துயரத்துடன் இருக்கிறேன். பெருமைக்குரியவர்களையெல்லாம் பறிகொடுத்து விட்டு தனிமையில் நிற்கிறேன்...! எனினும் வாசுதேவா! உமது வீரர்களிடம் கூறும்..! நான் எவருக்கும் பயந்துவிடவில்லை...!

**யுதிஷ்:** துரியோதனா! எனது அன்புக்குரிய அபிமன்யுவும் அன்று நிராயுதபாணியாக, எதுவுமற்று, உதவி எதுவுமின்றித்தான் நின்றான்!

**துரி:** உண்மைதான்.....அண்ணா! வார்த்தை ஜாலங்களில் வீண்பொழுது போக்க வேண்டாம்! கோழைகளாகிய நீங்கள் என்னுடன் ஒரே தரத்தில் மோதப் போகிறீர்களா...? அல்லது தனித் தனியாகப் பொருதப் போகிறீர்களா?

**யுதிஷ்:** தம்பி! நீ கோழையல்ல என்பது எமக்குத் தெரியும்! அதனால் மகிழ்ச்சியடைகிறேன். நீ தனித்து நின்று எம்முடன் போர்புரிய வல்லவன் என்பதும் தெரிந்ததே.....! ஆனால் நான் அதற்குச் சம்மதிக்க மாட்டேன்! எம்மில் எவருடன் நீ போரிட விரும்புகிறாயோ-நீயே தெரிவு செய்துகொள்! அவனை நீ ஜெயித்துவிட்டால், நாங்கள் தோல்வியினை ஏற்றுக் கொள்ளத்தயார் என்று உறுதியாகக் கூறுகிறேன்! யாரோடு மோதவிரும்புகிறாய்? ஆயுதம் என்ன என்பதையும் கூறு!

**துரி:** பெரியண்ணா! நான் எண்ணியிருந்தது போல் நீங்கள் அத்தகைய மோசமானவரல்ல என்று தெரிகிறது. கதாயுத யுத்தத்தையே விரும்புகிறேன்!

**யுதிஷ்:** யாருடன் மோதவிரும்புகிறாய்?

**துரி:** உண்மையில் உங்கள் எல்லோரையும் கொல்வதையே நான் விரும்புகிறேன்! உங்களில் முதலில் மரணத்தைத் தழுவ யார் விரும்புகிறாரோ அவரே முன் வரலாம்.

**கிருஷ்:** (யுதிஷ்டிரரிடம்) பெரியண்ணா! எதையும் யோசித்த பின்னர் தான் முடிவுக்கு வரவேண்டும்! கதாயுதப் போரில் துரியோதனனை வெல்ல உங்களில் எவராலும் முடியாது!

**யுதிஷ்:** வாசுதேவா! வாக்களித்து விட்டேன்!

**கிருஷ்:** அந்த மகாதேவனும் இப்படித்தான்! இந்த இக்கட்டான சூழ்நிலையில் என்ன செய்வதோ நானறியேன்!

**யுதிஷ்:** நான் மகாதேவனல்லவே கிருஷ்ணா!

**பீமன்:** கவலை விடுங்கள் அண்ணா! துரியோதனனை உருத்தெரியாமலாக்கி அவனை உருவாக்கியவனிடமே அனுப்பிவைக்கிறேன்.

**துரி:** (சிரித்தவண்ணம்) அண்ணா! பயந்தீர்களானால் எல்லோரும் ஒன்றுசேர்ந்து என்னோடு மோதிப்பாருங்கள்! இந்தச் தேர்ச்சாரதி, யசோதை மைந்தனையும் சேர்த்துக் கொள்ளுங்கள்!

அர்ச்சுனன் சினத்துடன் முன்னேற அவனை ஒதுக்கிவிட்டு பீமன் முன்வருகிறான்.

**துரி:** வா....வா....பெரிய மூடனே! வா...! உன்னைத்தவிர என்னுடன் கதாயுதப் போரில் ஈடுபட வேறு எவராலும் முடியாதுதான்!

பீமன் கதாயுதத்தால் தாக்க ஆயத்தமாகும் போது துரியோதனன்-யுதிஷ்டிரரைப் பார்த்து..

**துரி:** பொறு...! இதுதான் என்னுடைய இறுதிப்போர்! அண்ணா! இதற்கு யார் நடுநிலை வகிக்கப்போகிறார்?

**பீமன்:** துரியோதனா! நடுநிலையாளர் ஏன்? இது விளையாட்டல்ல- போர். ஒன்றில் நீ என்னைக் கொல்வாய் - இல்லையேல் நான் உன்னைக் கொல்வேன்! மோதல் தொடங்குமுன் ஒன்றை மனதில்வை! அரக்கு மாளிகையில் மூட்டப்பட்ட தீ! சூதாடும் போது சகுனி உருட்டிய போலிப் பகடைக் காய்கள், திரௌபதி இழந்த மானம் ஆகியவற்றால் எமது உள்ளம் தணலாய் எரிகிறது... அவையே எனக்கு இப்போரில் துணைநிற்கின்றன. அன்று திரௌபதியை உன் தொடையில் வந்திருக்கும்படி கூறினாயே! அக்காட்சி இன்னும் என் நினைவுத்திரையை விட்டு நீங்கவில்லையடா! யுத்த முனையில் இன்று உன்னால் எண்ணற்ற சடலங்கள் குவிந்து கிடக்கின்றன. உனது சடலமும் அவற்றுள் ஒன்றாக வேண்டாமா?

**துரி:** பீமா! இரைந்து கத்துகிறாய்? உன்னுடைய தீச்செயல்களைக் கண்டு உனது திறமையை எடைபோட- உனது இரத்த வெறியைக் கண்டு கேவலமாகக் கருத குரு துரோணாச்சாரியார் உயிருடனில்லையே என்றுதான் கவலைப் படுகிறேன்! குரு பலராமராவது இருந்தால் அவரும் உண்மையை உணர்வார். அவர் உனது அத்தையின் மகன்தான். இருப்பினும் கதாயுதப்போரில் உங்களில் எவரும் என்னை வெல்ல முடியாது என்று கூறியவர் அவரே! உன்னை நான் கொல்வதை அவர் கண்டால் மகிழ்ச்சியடைவார்!

**யுதிஷ்:** எங்கே தம்பி துரியோதனா! உன்னுடைய அணிகலன்களை அணிந்து கொள்!

**துரி:** பீமனுடன் சண்டையிட எனக்கு அணிகலன்கள் தேவையில்லை. நீங்கள் விரும்புவதால் எனது பாசறையிலிருந்து அவற்றைத் தருவிக்கலாம்!

**யுதிஷ்:** அவற்றைத் தருவிப்பதே நல்லது தம்பி! அவற்றைக் கொண்டுவர காவலனை அனுப்புவது சரியல்ல! தம்பி சகாதேவா! கவுரவர் பாசறை சென்று துரியோதனனின் அணிகலன்களை எடுத்துவா! துரியோதனன் போன்ற சுத்த வீரனின் அணிகலன்களை எடுத்து வருவதும் பெருமைக்குரியதே!

***

சகாதேவனின் இரதம் கவுரவர் முகாமை அடைந்ததும் ஏனைய கவுரவ வீரர்கள் மரங்களின் பின்புறமிருந்து வெளியே வந்து பார்க்கிறார்கள். பீமனுக்கும் துரியோதனனுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் யுத்தம் பற்றி கிருபாச்சாரியார், அஸ்வத்தாமன் மற்றும் கீர்த்திவர்மன் ஆகியோர் உரையாடுகின்றனர்.

****

சகாதேவன் காந்தாரியின் கூடாரம் சென்று அவருடைய ஆசிபெற்று பின் துரியோதனனின் பாசறை செல்கிறான். இதற்கிடையில் பலராமன் ஏரிக்கரைக்கு தனது இரதத்தில் வருவதை துரியோதனன் காண்கிறான்.

**துரி:** வணக்கம் குருதேவரே! தங்களை எதிர்பார்த்திருந்தேன்!

கிருஷ்ணரும் பலராமரும் கட்டித்தழுவிக் கொள்ளுகின்றனர்.

**கிருஷ்:** அண்ணா!சரியான நேரத்தில் வந்துள்ளீர்களே! தங்களுடைய சீடர்கள் இருவரும் கதாயுதப்போர் புரியப் போகின்றனர்!

**பலரா:** தேவரிஷி நாரதர் நிலமையை என்னிடம் கூறியதும் ஓடோடி வந்தேன்! இருவரும் இத்தகைய போரில் வல்லவர்கள்தான்!

**துரி:** திருதராட்டிர மாமன்னரின் மகனும் பட்டத்து இளவரசனுமாகிய நான் தான் தங்கள் தாளினை முதலில் பணிந்து ஆசி பெறவேண்டியவன்!

**பலரா:** அப்படியே ஆகட்டும்! நீயே எனது மதிப்புக்குரிய மாணவன். இருப்பினும் இப்போரில் வெற்றி பெறுவாயாக என்ற வாழ்த்தினை என்னால் தரமுடியாதிருக்கிறது!

**துரி:** இந்த யுத்தத்தில் இதுவரை எனக்கு வெற்றிக்கான எவருடைய வாழ்த்தும் கிட்டவில்லை. பீமனுக்கு வேண்டுமானால் அவ்வாழ்த்தினை அளியுங்கள்!

**பீமன்:** வாழ்த்துக்களின்றியே போரினைத் தொடங்கலாம்.

**பலரா:** சரி...ஆரம்பியுங்கள்...!

இருவரும் பயங்கரமாக மோதுகிறார்கள். பீமன் கதாயுதத்தால் பலமாக அடித்தாலும் துரியோதனனுக்கு எதுவுமே ஆகவில்லை. ஆனால் பீமன் உடம்பில் காயங்கள் ஏற்படுகின்றன.

**அர்ச்:** வாசுதேவா! துரியோதனன் வென்று விடுவான் போலிருக்கிறதே..!

**கிருஷ்:** பார்த்தா! சட்டதிட்டங்களுக்குட்பட்டு இப்போர் நடைபெறுமானால் பீமன் நிச்சயம் தோற்றுவிடுவான்! இது ஒரு வீரவிளையாட்டு என்றால் இருவருடைய போரிடும் திறமையை நாட்கணக்கில் பார்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இது போர்... விளையாட்டல்ல...! (சற்று யோசித்துவிட்டு) பார்த்தா! பீமனிடம் அவனுடைய சபதத்தை நினைவூட்டு...!

**அர்ச்:** எந்தச் சபதம்....?

**கிருஷ்:** அன்று அஸ்தினாபுர சபைநடுவே திரௌபதி அவமானப்படுத்தப்பட்ட போது பீமன் போட்ட சபதத்தை மறந்து விட்டாயா பார்த்தா..?

**அர்ச்:** துரியோதனனின் தொடையை உடைப்பதாக இட்ட சபதம்தானே!

**கிருஷ்:** ஆமாம்....! துரியோதனனின் சடலத்தின் தொடையையா உடைப்பது....? பீமனுக்கு நினைவூட்டு. அவன் செய்வதைச் செய்யட்டும்!

**அர்ச்:** இல்லை கேசவா...! என்னால் அவ்வாறு செய்ய முடியாது!

**கிருஷ்:** அப்போ நீ வேடிக்கை பார்த்துக் கொண்டிரு! ஓ....பீமா...!

**பலரா:** ஏன் தம்பி...? ஏன் அவ்வாறு சத்தம் போடுகிறாய்?

**கிருஷ்:** இந்தக் கட்டம்தான் சுவாரஸ்யமானது அண்ணா! பாருங்களேன்... பீமா...!

பீமன் கிருஷ்ணரைப் பார்க்கிறான். தன் தொடையைச் சுட்டிக் காட்டியதும் புரிந்து கொண்ட பீமன், துரியோதனனின் தொடையில் அடிக்கிறான். துரியோதனன் கீழே விழுகிறான்.

**துரி:** பீமா! நீ என்னை வஞ்சித்து விட்டாய்!

**பீமன்:** திரௌபதியை இதே தொடையில் வந்திருக்குமாறு கூறினாயல்லவா? நான் என் சபதத்தை மறந்து விடவில்லையடா....!

பீமன் மீண்டும் தாக்க முயற்சிக்க யுதிஷ்டிரர் தடுக்கிறார்.

**யுதிஷ்:** வேண்டாம் பீமா! அவன் உனது சகோதரன். அது மட்டுமல்ல, மன்னன்; ஆகவே அவனைக் கீழ்த்தரமாகச் சாகடிப்பது முறையல்ல!

**பலரா:** இல்லை! கீழ்த்தரமான முறையில் யுத்தம் புரியும் எவனையும் நான் மன்னிக்க மாட்டேன்! பீமா! குரு துரோணாச்சாரியாரும் நானும் உனக்குப் புகட்டவில்லையா.. கதாயுதத்தால் இடைக்குக் கீழ் தாக்குதலாகாது என்று? நீ கவுரவ குலத்துக்கே களங்கம் ஏற்படுத்தி விட்டாய்! இக் களங்கத்தைக் களைய உன் உதிரத்தைச் சிந்தவைக்கப் போகிறேன்!

பலராமர் கதாயுதத்தை எடுத்துக் கொண்டு பீமனைத் தாக்கப் புறப்படும் போது கிருஷ்ணர் தடுக்கிறார்.

**கிருஷ்:** அண்ணா! பீமன் போர் விதிகளுக்கு மாறாகத்தான் நடந்து கொண்டான். மறுக்கவில்லை! பாண்டவர்களைப் பொறுத்தவரை துரியோதனன் பல கொடுமைகளைப் புரிந்துள்ளான். எத்தனையோ சதிகளைச் செய்துள்ளான். இவையெல்லாம் தாங்கள் அறிந்ததே! துரியோதனனின் தொடையினை உடைப்பதற்கு பீமன் ஏற்கனவே சபதம் பூண்டிருந்தான். குருச்சேத்திரப் போர் முனை பற்றி நீங்கள் எதுவும் தெரிந்திருக்கவில்லை. இறுதிக் கட்டத்தில் வந்து முடிவினையே மாற்ற முற்படுவது நியாயமில்லை!

**பலரா:** தம்பி! எவ்வாறாயினும் நீ கூறிய காரணங்கள் எனக்கு உடன்பாடாகத் தெரியவில்லை. உனது நியாயங்களை மறுக்க என்னால் முடியவில்லை! இருப்பினும் துரியோதனன் ஒரு மாவீரன்! அவன் என்னுடைய மாணாக்கன் என்பதில் பெருமைப் படுகிறேன்!

பலராமர் இரதத்திலேறிச் செல்கிறார். துரியோதனன் வேதனையில் துடிக்கிறான்.

**கிருஷ்:** அண்ணா கூறியவற்றால் வேதனையடைய வேண்டாம். மேலெழுந்தவாரியாக அவர் காண்பதை வைத்தே அவருடைய கருத்தை வெளியிட்டார். துரியோதனன் அவன் செய்த துரோகங்களுக்கெல்லாம் வேதனைப் பட்டு உயிர்விடட்டும். சூரியன் மறையும் வேளை நெருங்குகிறது. வெற்றியைக் கொண்டாட கவுரவரின் பாசறைக்குச் செல்வோம். எல்லாரும் வாருங்கள்.

**பின்னணிப்பாடல்**

பாஞ்சாலி அன்று பாடிய சபதம் சூள்
பதினெட்டு நாட்போரின் பெருமுடிவு கண்டதம்மா!
துச்சாதனன் மார்பும் துரியோதனன் தொடையும்
துச்சமெனத்தான் பிளந்து பீமனவன் போர் முடித்தான்!

(தொடர்ந்து வரும்)

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்ற மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.




படிப்பகம்

www.padippakam.com

Regd as a News Paper at the G.P.O.(PRO/7/95)

அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வன்ன நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# கடலுக்குள் நட்சத்திரம்



நீலவானில் மட்டும்தான் நட்சத்திரம் பூக்குமா? நீலக்கடலிலும் நட்சத்திரம் பூக்கும். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா. கடலுக்குள் நட்சத்திர வடிவில் இருக்கும் மீனைத்தான் சொல்லுகிறோம். 4 அங்குலம் முதல் 6 அங்குலம் நீளம் வரை சாதாரண நட்சத்திர மீன்கள் வளரும். முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். கடற்பாசிகள்தான் சாப்பாடு. வட அட்லான்டிக் கடற்பரப்பிலும், மெடிரறேனியன் கடலிலும் அதிகமாகக் காணப்படும். படத்தில் இருப்பது அதிசயமான நட்சத்திர மீன். இதன் நீளம் 20 அங்குலம்.

இதுவரை கண்ட நட்சத்திர மீன்களில் நீளம் கூடிய ஒரே ஒரு நட்சத்திர மீன் இதுதான். வண்ணக்கலரில் கண்ணைப் பறிக்கிறதல்லவா!

அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
332033

# நன்றியுள்ள தென்னை



"பிள்ளையைப் பெத்தா கண்ணீரு, தென்னையை வைத்தா இளநீரு" கண்ண தாசன் சொன்னதில் என்ன பிழை? பெற்றவர்களைப் பேரன்போடு கவனிக்கும் பிள்ளைகள் கோபப்பட வேண்டாம். படத்தில் இருக்கும் தென்னையை கூர்ந்து கவனியுங்கள். ஏதோ கோளாறு காரணமாக நிலத்தோடு ஒரு பகுதி சாய்ந்து விட்டது. அப்படியிருந்தும் மீதிப்பகுதி முயற்சியால் உயர்ந்து பூத்துக் காய்த்து நீர் வார்த்தவர்களுக்கு வயிற்றில் இளநீர் வார்க்கத் தயாராகி விட்டது. நன்றியுள்ள தென்னைகளில் அபூர்வமானது இது. கிளிக் செய்து அனுப்பியவர்: நவரத்தினம் சஞ்சீவகுமார். பெரிய கல்லாறு. மட்டக்களப்பு.

# ஆபத்து அதிகமில்லை




யானைபோலவே தோற்றம். ஆனால் அதிகம் ஆபத்தில்லாதது. அதுதான் நீர்யானை. நீருக்குள் இருந்து வாய்பிளக்கும் தோற்றமே மிரட்டுகிறதல்லவா. பயப்படாதீர்கள். இதன் நீளம் 10 முதல் 11½ அடிதான். எடை 3000 முதல் 7000 இறாத்தல் வரை. குடும்பக் கட்டுப்பாட்டில் மிகுந்த அக்கறையுள்ளது நீர் யானை. ஒரு குட்டி மட்டுமே ஈன்றெடுக்கும். பாலூட்டி வளர்க்கும். மத்திய ஆபிரிக்காவில்தான் இந்த நீர் யானைகள் அதிகம் காணப்படுகின்றன. தாவர உணவுதான் சாப்பிடும். சுத்த சைவம்!

# நீருக்குள் ராஜா




வாயைப் பிளந்து தலை உயர்த்தி மிரட்டுவது அமெரிக்க முதலை. நீருக்குள் இதுதான் ராஜா. பசித்தால் மீன்களை விழுங்கும். இனப்பெருக்கத்தில் கில்லாடி. 20 முதல் 80 வரை முட்டைபோடும். 6 முதல் 19 அடிவரை நீளமாக வளரும். தென்கிழக்கு அமெரிக்காவில்தான் இந்த ரக முதலைகள் அதிகம். →

# தரையில் நட்சத்திரம்



கடலில் நட்சத்திர மீனின் அழகைக்கண்டு பிரமித்தவர்கள் அருகிலுள்ள தரை நட்சத்திர மீனையும் பார்த்து வியந்து கொள்ளுங்கள். (அட.... இரண்டுமே சிவப்பு) உலகின் சூப்பர் மொடல் அழகிகளில் முதன்மையானவர் இவர். பெயர்: சிண்டி கிராஃப் போட். கொள்ளை அழகை வைத்து கொள்ளை கொள்ளையாக சம்பாதிக்கிறார். வயது 28. (தெரியவேயில்லையே!) என்ன குறை? யோகம் தான் என்று பெருமூச்சு விடாதீர்கள். இவரது காதல் கணவர் ரிச்சர்ட் கியர் பிரபல ஹொலிவூட் நடிகர். 'பிறிட்டி வுமன்' படத்தில் கதாநாயகன். தன்னோடு கதாநாயகியாக நடித்த ஜீலியா ரோபர்ட்ஸுடன் மையல் கிவிட்டார் ரிச்சாட்கியர். அழகிருந்தும், பணமிருந்தும் காதலரை இழந்து தவிக்கிறார் சிண்டி கிராஃப் போட். கவலையில்லாத மனிதர்களே இல்லையோ?!

# பஞ்சணை இரகசியம்



← தூங்குபவர் விஞ்ஞானி 'புரூனோ கலி'. கடல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது ஓய்வு கொள்கிறார். கடற்கரையில் காதலியின் மடிபோல அவருக்கு இதமாக இருப்பது கன்மீன் குட்டி. உயிருள்ள பஞ்சணை!



படிப்பகம்